பேரறிஞர்
அண்ணாவின்



# வண்டிக்காரன் மகன்

பூம்புகார் வெளியீடு

209

972

# வண்டிக்காரன் மகன்

XA: 209

# வண்டிக்காரன் மகன்

பேரறிஞர்
டாக்டர் சி. என். அண்ணாதுரை,
எம். ஏ.,

MARAIMALAI ADIGAL
LIBRARY
MADRAS-1
சென்னை-1

பூம்புகார் பிரசுரம் பிரஸ்
63, பிராட்வே,
சென்னை - 600 001.

விலை ரூ. 5-90

37816

பூம்புகார் வெளியீடு எண்: *158*
*முதற் பதிப்பு: ஆகஸ்ட், 1980*
*உரிமை: திருமதி ராணிஅண்ணாதுரை*

---

அச்சிட்டவர்கள்: பூம்புகார் பப்ளிகேஷன்ஸ் பிரஸ், சென்னை–600001.

## பதிப்புரை

சமூகத்தின் மூலை முடுக்குகளில் ஒளிந்து கிடக்கும் உயிர்த் துடிப்புள்ள பிரச்னைகளில் ஏதாவது ஒன்றை எடுத்து, வெளிப்படுத்தி, அதற்குப் பரிகாரம் காண முயல்வது எதுவோ அதுவே சிறுகதை.

இதில் வெற்றி கண்டவர் விரல்விட்டு எண்ணத்தக்க அளவிலேதான் இன்றளவும் இருந்து வருகிறார்கள்.

ரசனைக்காக எழுதுவதை, கவலையை மறப்பதற்காக கற்பனையில் சிறகடித்துப் பறப்பதையெல்லாம் சிறுகதையாக ஒருக்காலமும் அங்கீகரிக்க முடியாது.

படிப்பதற்காக மட்டுமல்ல, படிப்பினை பெறுவதற்காகவும் அந்தச் சிறுகதை இருக்க வேண்டும்.

துவண்டு போயிருக்கும் மனத்தைத் தூக்கி நிறுத்தும் வல்லமை கவிதைக்கு எந்த அளவுக்கு உண்டோ, அதே அளவுக்கு சிறுகதைக்கும் உண்டு.

இதிலே கூடுவிட்டுக் கூடு பாயும் வித்தை பலிக்காது.

கதைக்கென்று சிருஷ்டிக்கப்படும் ஒரே ஒரு பாத்திரத்தின் நேர்முக தரிசனமே இதற்குத் தேவை.

புறப்படும் இடத்திலிருந்து அந்தப் பயணம் முடியும் கட்டத்திற்குள்ளே வந்து போகும் கிளைவழிகளுக்கெல்லாம் இதிலே இடமில்லை.

பயணத்தின் குறிக்கோளே இதற்குப் பிடித்த நைவேத்தியம்.

உணர்ச்சி மயமான சொற்களால் படிப்போர் நெஞ்சை உருகிடச் செய்யும் யுக்தியே கதைக்குரிய சிறந்த ஆராதனை.

மனித சமுதாயத்தில் இன்னமும் ஜடமாகவும் முடமாகவும் இருக்கின்ற விகாரங்களை— விவஸ்தை கெட்ட விஸ்வரூபங்களை அளந்து காட்டும் அடையாளச் சீட்டாக இது அமைய வேண்டும்.

மனித மனத்தை நிறைவு படுத்தும் வேலையை, கொஞ்சம் அழகாக எழுதத் தெரிந்த யாராலும் செய்து காட்ட முடியும். அதுவல்ல, சிறுகதை.

ஒரு மனத்தின் சேஷ்டையை மற்றொரு மனத்துக்கு எடுத்துக் காட்டுவது மட்டுமல்ல;

அந்த மனத்தின் கசிவைப் பிரதிபலிக்கும் கண்ணாடியாகவும் அது பொருந்தி இருக்க வேண்டும்.

அப்படிப்பட்ட கதையைத்தான் 'சிறுகதை' யாகக் கொள்ள முடியும்.

காலத்துக்கேற்ற மாதிரி —சூழ்நிலைக்குத் தகுந்த விதத்தில் எந்த ஒரு பூவும் தன் நிறத்தை மாற்றிக் கொள்வதில்லை. ஆனால் மனிதருக்கு புத்தி சொல்லக் கிளம்பும் சில புஸ்வாண எழுத்தாளர்கள் மட்டும் உடையை மாற்றிக்கொள்வது போல மனத்தை மாற்றிக் கொண்டு, எழுதுவதையெல்லாம் 'கதை' என்று கதைக்கின்ற இந்தக் காலகட்டத்தில், உங்கள் கரங்களில், உண்மையான -உயிருள்ள கதைகளைச் சிருஷ்டித்த பெருமைக்குரிய பேரறிஞர் அண்ணா அவர்களின் சிறுகதைத் தொகுப்பை, 'வண்டிக்காரன் மகன்' என்னும் தலைப்பில் தவழவிட்டிருக்கிறோம்.

மனித சமுதாயத்துக்கு அவசியமாகத் தேவைப்படும் ஒன்றை, அது எங்கு பிறந்திருந்தாலும் அதைச் சுவீகாரம் கொள்வதில் எந்த ஒரு தவறும் கிடையாது.

தமிழகத்தைப் பொறுத்த வரையில் 'சிறுகதை' என்பது சுவீகாரக் குழந்தைதான். அதுவும் எல்லோராலும் அங்கீகரிக்கப்பட்ட குழந்தை அது.

அந்தக் குழந்தையை அமரர் அண்ணா அவர்கள், தம் கரத்தில் ஏந்தித் தவழவிட்டி

ருக்கும் பாங்கை இதில் நீங்கள் பரவலாகக் காண லாம். அந்தக் குழந்தையின் மூலமாக அவர் வெளிப்படுத்தியிருக்கும் ஒவ்வொரு விஷயமும் விழிப்பை மட்டுமா, நல்ல வெளிச்சத்தையும் கொடுக்கக் கூடிய ஒன்றாகும்.

அத்தகு சிறப்புள்ள—உயிர்த் துடிப்புள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் கதைகளை நாங்கள் வெளியிட்டுக் கொள்ளும் உரிமையைப் பூரணமாக வழங்கி இருக்கும் திருமதி ராணி அண்ணாதுரை அவர்கட்கு எங்களின் இதய பூர்வமான நன்றி.

**பூம்புகார் பிரசுரத்தார்**

# 1
# வண்டிக்காரன் மகன்

ஆப்பக்கடை அன்னமாளிடம் அச்சம் கொள்ளாதவர்கள் அவளூரில் யாரும் இருக்க முடியாது. அவ்வளவு துணிச்சல்! யாரையும் ஒரு பொருட்டாக மதிக்காத சுபாவம்.

அப்படிப்பட்ட அன்னம்மாள் சோகமுற்று இருப்பது என்றால், ஏதோ ஒரு பெரிய விபரீதம் நேரிட்டுவிட்டது என்றுதானே பொருள்?

விபரீதம்தான் நேரிட்டுவிட்டது. தன் மகள் காவேரியின் ஜாதகத்தை கேட்க, அருணகிரி வருவான் வருவான் என்று எத்தனை நாட்களாகக் காத்துக் கிடப்பது. வரவே இல்லை.

''அத்தே!'' என்று குளிர்ச்சியாகக் கூப்பிடுவான் சொக்கலிங்கம் என்று காத்திருந்தாள்; நடக்கவில்லை. கோபம் தலைக்கேறி விட்டிருந்தது.

அந்த இருவரையும் ஒரு பிடி பிடிக்க வேண்டியதுதான் என்று தீர்மானித்தாள். ஆனால் காவேரி? கண்ணீர் வடிக்கிறாள்! கிணறு குட்டை அகப்படாமலா போகும் என்கிறாள். 'நீ வீண் சண்டை போட்டுப் போட்டு நல்லவர்களையும் விரோதிகளாக்கி விடுகிறாய்' என்று குற்றம் சாட்டியே பேசுகிறாள்.

'பக்குவமாகப் பேசி காரியத்தை முடிப்பதற்குத் துப்பு இல்லாமல், கடும் கோபத்தைக் கக்கிக் கிடப்பது எதற்கு?' என்று கேட்கிறாள். 'நான் கன்னியாகவே காலந்தள்ளுவேன்' என்கிறாள்.

''நான் பெத்த பெண்ணே என்னைத் துப்புக்கெட்டவள்; பக்குவம் தெரியாதவள் என்று பேசுவதையும் கேட்டுக்கொள்ளும் காலம் வந்துவிட்டதே'' என்று நினைத்து அன்னம்மாள் சோகமாக இருந்தாள்.

பக்குவமாகத்தான் பேசிப் பார்ப்போமே என்ற முடிவுக்கு வந்த அன்னம், சொக்கலிங்கத்தை எதிர்பார்த்துக் கொண்டு புளிடங்குட்டை அருகே நின்று கொண்டிருந்தாள்.

சொக்கலிங்கம் வழக்கமாக அந்த வழியாக, டேவிட் வீட்டுக்கு சைகிளில் போவது அன்னம்மாளுக்குத் தெரியும்.

சைக்கிள் மணிச்சத்தம் கேட்டது. சோகத்தை மறைத்துக் கொண்டு, புன்சிரிப்பை வரவழைத்துக் கொண்டாள். அன்னம்மாளைக் கண்டதும் சொக்கலிங்கம் சைக்கிளை நிறுத்தி விட்டுக் கீழே இறங்கினான். பக்குவமாகப் பேசத்தொடங்கினாள்.

''தொரெ! உம்பேர்ல இம்மா ஆசையா இருக்கறாரே, அவரோட சொல்லி ஏதாச்சும் ஒரு நல்ல வேலையைத் தேடிக்கக் கூடாதாடா தம்பி! இன்னும் எவ்வளவுன்னுதான் படிப்பே?''

''என்னோட மாமாகூட அதுபோலத்தான் சொல்றாரு—ஆனா எனக்குப் படிக்கறதுக்குக் குந்தகமில்லாத வேலையா கிடைக்கணும்னு ஆசை...''

''ஏனாம்! நீயும் இந்த தொரை மாதிரி எழுதிக்கிட்டே காலத்தை ஓட்டிடப் போறயா...இவருக்குப் பெண்ஜாதி இல்லே...புள்ளை குட்டி இல்லே...ஒண்டிக் கட்டை....நீ அப்படி இருக்க முடியுமா! இன்னும் எவ்வளவு காலம் காத்துக்கிட்டு இருப்பா உனக்காக...''

''எனக்காக காத்துக்கிட்டு இருக்கிறாளா...அது எந்தப் பைத்யகாரப் புள்ளே...''

''ஏண்டா, தம்பி!—என் கிட்டவே ஒண்ணும் தெரியாததுபோல நடிக்கிறியா...என்னா சொக்குப் பொடி

போட்டாயோ தெரியல்லே...என் மவளோட கண்ணு உன்னைத்தானே சுத்திச் சுத்தி வளையம் போடுது...காலா காலத்திலே முடியணுமே...''

''இது என்ன விபரீதம். நான் ஒருவிதமான கெட்ட எண்ணமும் இல்லாமத்தான் பழகறேன்...காவேரியும் அது போலத்தான்...''

''அடப்பாவி! என்னா இப்படி ஒரு இடியைத் தூக்கிப் போடறே. அந்தப் பொண்ணு ஒன்னப் பார்க்கற பார்வையும், பேசற பேச்சும், சிரிக்கிற சிரிப்பும் ஊரே தெரிஞ்சுக்கிட்டிருக்குது. தொரெக்கேகூடத் தெரியும்...அப்படித்தான் நான் எண்ணிக் கொண்டு இருக்கிறேன்.''

''ரொம்பத் தப்பு...நான் அந்தவிதமான பேச்சே பேசினது கிடையாது—சத்யமா...''

''பேசணுமா...ஏண்டா! ஒரு வயசுப் பொண்ணை எதிரே உட்கார வைச்சிகிட்டு, இளிச்சிக்கிட்டு இருக்கிறயே.. என்னமோ சித்திரம் தீட்டறேன்னு...அது எதுக்காம்.''

''காவேரியோட அழகு அக்கா! என்னைப் படம் போடச் சொல்லுது...''

''சொல்லுண்டா சொல்லும்...உன் கண் அழகு யாருக்கு உண்டு...உன் கன்னம் மாம்பழம், உடம்பு தங்கம்னு இன்னும் என்னென்ன இழவோ பேசி அந்தப் பொண்ணோட மனசை மயக்கிட்டு, இப்ப இப்படிச் சொல்றயே...நியாயமா ...சொக்கலிங்கம்?''

''நான் இப்பத்தான் கேட்கறேன். வெட்கத்தைவிட்டே கேட்கறேன். என் மகளைக் கட்டிக்கொள்ள கசக்குதா—ஆப்பக்காரி பொண்ணுன்னு சொல்லுவாங்களேன்னு தோணுதா? நாலு எழுத்துப் படிச்சதாலேயே என்னைப் பார்த்தா கேவலமாத் தோணுதா...''

''அப்படிப்பட்ட எண்ணமெல்லாம் எனக்குக் கிடையாது.நான் மட்டும் என்ன,பெரிய மிராசுதாரன் பிள்ளையா?

...வண்டிக்காரன் மகன்தான்...நான் காவேரியைக் கட்டிக் கொள்ள முடியாதுன்னு சொல்றதுக்குக் காரணம், நீ நினைக்கிற மாதிரியெல்லாம் இல்லே...எனக்குக் கல்யாணம் கார்த்தியெல்லாம் இப்போது கிடையாது. எங்க அப்பா படுகிற கஷ்டத்தைப் போக்கியாகணும் முதலிலே. காலம் முழுவதுமா வண்டிக்காரராக இருப்பது...நான் ஒரு பிள்ளை பொறந்துதான் என்ன பயன்?''

''எனக்கு இந்தச் சமாதானமெல்லாம் தேவையில்லே! நானும் காவேரியும் கோலார் பட்டணம் போறோம், அவளோட பெரியம்மா வீட்டுக்கு.மூணு மாதத்திலே வந்து சேருவோம். அதுக்குள்ளே ஒரு முடிவுக்கு வந்தாகணும்; இல்லையானா நான் தொரெகிட்டவே சொல்லி விடுவேன்.''

அப்போது ஒரு ஆள் ஓடிவந்து 'சொக்கலிங்கம்! ஓடியா, ஓடியா! உன் மாமனுக்கு மாரடிச்சுட்டுது...கீழே விழுந்துட்டாரு'' என்று கூவினான்.

ஓடோடிச் சென்ற சொக்கலிங்கம், தன் மாமன் மார் வலியால் துடிப்பதையும், பக்கத்திலிருந்து கொண்டு டேவிட் துரை ஏதோ மருந்து கொடுத்துக் கொண்டிருப்பதையும் பார்த்துப் பதறிப் போனான்.

டேவிட் துரை, கீழ்நாடுகள் பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்த ஒரு பேரறிவாளர்; தங்கமான மனமுடையவர்; அவரும் அருணகிரியைப் போலவே மணமாகாதவர்.

அருணகிரி அவரிடம் வேலைக்கு அமர்ந்து முப்பது ஆண்டுகளாகிவிட்டன. ஒரு நாளாகிலும் முகம் சுளித்துக் கொண்டதில்லை. ஒரு பேதமும் காட்டாமல், தமது பங்களாவின் பின்புற விடுதியிலேயே அருணகிரியை இருந்துவரச் செய்தார்.

டேவிட் துரையுடைய வீட்டு விவகாரம் முழுவதையும் கவனித்துக் கொண்டு வந்தான் அருணகிரி. ஒவ்வொரு வேலைக்கும் ஒவ்வொரு ஆள் இருந்தனர்—தோட்ட வேலைக்கு—சமையலுக்கு—கணக்கு எழுத—ஆனால் எல்

லாவற்றையும் மேற்பார்வை பார்த்துக் கொள்ள அருண கிரிதான். எதையும் அருணகிரியிடம் சொல்லித்தான் செய்துகொள்ள வேண்டும்; அவ்வளவு நாணயமாக நடந்து வந்தான்.

அருணகிரி துடிப்பது கண்டு, கதறிய சொக்கலிங்கத்தை டேவிட் சமாதானப் படுத்திக் கொண்டே, தன் கண்களையும் துடைத்துக் கொண்டார்.

இனி இவனை அவனுடைய அப்பனிடம் சேர்த்துவிட வேண்டியதுதான். என் காலம் முடிந்து விட்டது சார்! இவனுக்கு ஒரு நல்ல வேலை கிடைக்க உங்களோட உதவிதான்...வேறெ யார்...எனக்குத் தெய்வம்போல நீங்கதான்''...என்று மிகுந்த கஷ்டத்துடன் பேசிய அருண கிரியை டேவிட் சமாதானப்படுத்தியபடி இருந்தார்.

சொக்கலிங்கத்தின் தகப்பனாருக்குக் கடிதம் போடப் பட்டது; அவரும் வந்து சேர்ந்தார்.

''சடையப்பா! நாம் எவ்வளவு முயன்றாலும் இனி அருணகிரியைக் காப்பாற்ற முடியாது. டாக்டர் சொல்லி விட்டார். மனதைத் திடப்படுத்திக் கொள்ள வேண்டியது தான்.''

''என் மகனாகச் சொக்கன் பிறந்தானே தவிர, ஐயா! அருணகிரியோட மகனாகத்தான் வளர்ந்து வந்தான். வரு ஷத்துக்கு ஒரு தடவையோ, இரண்டு வருஷத்துக்கு ஒரு தடவையோ, வந்து பார்த்துவிட்டுப் போகிறோமே, அது தவிர மற்றபடி எங்களோட தொடர்பே அவனுக்குக் கிடை யாது. சொக்கலிங்கத்தை இவ்வளவு நல்லபடியாக வளர்த்த புண்யமூர்த்தி அருணகிரி...அவனோட உதவி கிடைத்திரா விட்டால், என் மகன் கூலிக்காரனாகத்தான் ஆகி யிருப்பான்.''

''சடையப்பா! உன் மகன் நல்ல படிப்பாளி...அவ னாலே உன் குடும்பம் கட்டாயம் நல்லநிலை அடையும்... என்னோட இருந்துவிடச் சம்மதமானாலும் சரி...இல்லே,

வேறெ எங்கேயாவது வேலைக்குப் போக விருப்பம் இருந்தாலும் சரி, அதற்கு ஏற்பாடு செய்கிறேன். அது என் பொறுப்பு.''

அருணகிரி சில தினங்களில் கண்களை மூடிவிட்டான்.

டேவிட் சொக்கலிங்கத்தைக் கேட்டார். 'என்னுடன் இருந்து விடுகிறாயா' என்று. அவனுக்கு அதிலே விருப்பம் என்றாலும், அந்த ஊரிலே இருந்தால் ஆப்பக்கடை அன்னத்தினால் பெருத்த தொல்லை விளையும் என்ற பயம் அவனை அந்த இடத்தை விட்டுச் சென்றுவிட வேண்டும் என்று தூண்டி விட்டது.

பல ஆண்டுகளாகப் பிரிந்து இருந்தாலும், தகப்பனாரிடம் பாசம் இல்லாமல் போகுமா? அதிலும் அவர் வாழ்ந்து கெட்டவரென்பதையும்,இப்போது வண்டிக்காரராக இருந்து வருகிறார் என்பதையும் எண்ணும்போது, இனி அவருடன் வாழ்ந்து வரவேண்டும்-தான் ஏதாவது வேலை தேடி அவரை நிம்மதியாக வாழவைக்க வேண்டும் என்ற ஆவல் அதிகமாகி விட்டது.

''இனியாகிலும் மகன் வீட்டோடு வந்து சேரட்டுமே.. உள்ளதைக் கொண்டு குடும்பத்தை நடத்த முடியாதா— அவன் ஒருவன் வந்து சேருவதாலா, நமக்குப் பளுவு ஏறப் போகுது'' என்று சொல்லும்போதே தன் தாயாரின் கண்கள் குளமானதையும் கண்டான். தகப்பனாருடன் ஊர் சென்று விடுவது என்ற உறுதி பலப்பட்டுவிட்டது.

டேவிட் தடுக்கவில்லை. ''நீ முன்னுக்கு வரவேண்டியவன். இங்கே அடைபட்டுக் கிடக்கத்தான் கூடாது. நான் கொடுக்கும் சிபாரிசுக் கடிதம் போதும். உனக்கு எங்கேயும் நல்ல வேலை கிடைக்கும். கணக்குத் துறையில் மேலும் படித்துப் பயிற்சி பெற்றால் ஏதாவது பெரிய கம்பெனிகளில் வேலை கிடைக்கும்'' என்று டேவிட் உற்சாக மூட்டினார்.

அவருடைய சிபாரிசுக் கடிதத்தையும் வாழ்த்துக்களையும் பெற்றுக் கொண்டு, ஊர் திரும்ப ஏற்பாடு செய்துகொண்டனர்.

இரவு சடையப்பன், தயங்கித் தயங்கி மகனிடம் பேச லானான்:

''சொக்கலிங்கம்! நீ இவ்வளவு காலமாக எவ்வளவோ நல்லபடியாக வாழ்ந்து வந்தாய், உன் மாமன் தயவால்! அறிவாளிகளோடு பழகி வந்தாய். நாம் இனிப் போகவேண் டிய இடமோ, ஜெமீன். அட்டகாசமும் ஆணவமும் நிரம்பிய இடம். ஜெமீன்தார் ஜெம்புலிங்கபூபதி கொடியவர் அல்ல; ஆனால் ஜெமீன்தாருக்கு இருக்க வேண்டிய முடுக்கு, கண் டிப்பு எல்லாம் நிரம்பியவர். எனக்கோ அங்கு என்ன வேலை தெரியுமல்லவா...''

''மாமா இரண்டொரு முறை சொல்லியிருக்கிறா ரப்பா.''

''வண்டிக்காரன்! குதிரை கொட்டிலுக்குப் பக்கத்திலே குடிசை! அங்குதான் நீயும் வந்திருக்க வேண்டும். அந்தக் கேவலமான இடத்தில் நீ இருக்கக்கூடாது என்பதற்காகத் தானடா மகனே! பெற்ற பாசத்தை எல்லாம் அவளும் நானும் அடக்கிக் கொண்டு இவ்வளவு காலம் உன்னைப் பிரிந்து இருந்தோம். இப்போது உன்னை அந்த நரகத்துக்கு அல்லவா அழைத்துப் போக வேண்டி இருக்கிறது.''

''நீங்கள் அங்கே இருக்கும்போது நான் மட்டும் இருக் கக் கூடாதா அப்பா! மேலும் எனக்கு ஒரு வேலை கிடைக் கிற வரையில்தானே இந்தக் கஷ்டமெல்லாம்? பிறகு நீங்கள் எதற்காக வண்டிக்காரராக இருக்க வேண்டும்? குடும்பத்தைக் காப்பாற்ற நான் எந்தப் பாடுபடவும் தயாராக இருக்கிறே னப்பா! வேலையும் கிடைத்துவிடும். டேவிட் கொடுத்துள்ள சிபாரிசு போதும் நமக்கு...''

''வேலை தயாராக இருக்கிறது மகனே! கௌரவமான வேலை. ஜெமீனிலேயே!''

''பழம் நழுவிப் பாலில் விழுந்தது போலாயிற்று.''

''அப்படிச் சொல்வதற்கில்லை அப்பா! ஜெமீன்தார் தமது பேரப்பிள்ளைகளுக்கு, படிப்பு சொல்லிக் கொடுக்க

ஒரு வாத்தியார் தேடுகிறார். படித்திருந்தால் மட்டும் போதாது; வெள்ளைக்காரரிடம் இருந்த அனுபவம் வேண்டும் என்கிறார். சம்பளம் கேட்ட அளவு. ஜெமீன் மாளிகையிலே தங்கி இருந்து, குழந்தைகளைக் கவனித்துக் கொள்ள வேண்டும்.''

''எனக்கு மிகவும் பிடித்தமான வேலை அப்பா அது. ஏனென்றால் நான் மேலும் படித்துக் கொள்ள வசதியாக இருக்கும்...''

''அது மட்டுமா...ஜெமீன் மாளிகையில் இருந்து வந்தால், வேறு பெரிய பெரிய வேலைகள் கிடைக்கவும் வழி சுலபத்திலே கிடைக்கும்.''

''மகிழ்ச்சியாகச் சொல்ல வேண்டிய இந்த விஷயத்தை ஏனப்பா சோகத்துடன் சொல்லுகிறீர்.''

''சோகமா...வேதனையே அல்லவா படுகிறேன்...இத்தனைக் காலமாகத்தான் பிரிந்திருந்தோமே—இனி ஒன்றாக இருந்து வரலாம் என்று எவ்வளவோ ஆசை—எனக்கும் உன் தாயாருக்கும்.''

''ஜெமீனின் வேலை கிடைத்துவிடும் என்கிற போது அந்த ஆசை நிறைவேறுகிறது என்றுதானே அப்பா பொருள்?''

''இல்லையடா மகனே! இல்லை. ஜெமீன் குழந்தைகளுக்கு வாத்தியாராக நீ அமர்ந்திட வேண்டுமானால் எங்களோடு இருக்க முடியாது...என் மகன் என்றுகூடச் சொல்லிக் கொள்ளக் கூடாது...''

''இது என்ன விபரீதப் பேச்சப்பா... ஜெமீன்தாரர் இதுபோல ஒரு நிபந்தனையா போட்டிருக்கிறார்?''

''இல்லை. நான்தான் நிபந்தனை போடுகிறேன். நிலைமை அப்படி. எனக்கு ஒரு மகன் இருக்கிறான் என்பதுகூட ஜெமீன்தாருக்குத் தெரியாது. சொல்லவில்லை. தெரிந்தால், உன்னை வேலைக்கு வைத்துக் கொள்ள மாட்டார்—'நம்ம

வண்டிக்காரனோட மகன் ஜெமீன் குழந்தைகளுக்கு வாத்தி யாரா? கேவலம் கேவலம்' என்று கூறுவார். அவருடைய சுபாவம் அப்படிப்பட்டது. அதனால் நீ என் மகன் என்பது தெரியவே கூடாது. அப்போதுதான் ஜெமீன் மாளிகையிலே உனக்கு அந்த வேலை கிடைக்கும்.''

சொக்கலிங்கம் அதிர்ச்சி அடைந்து விட்டான், இந்த நிபந்தனையைக் கேட்டு. 'இதற்கு நான் சம்மதிக்கவே முடி யாது. வேண்டுமென்றால் வேறு வேலை தேடிக் கொள்ள லாம்; நீங்கள் என்னோடு வந்து விடலாம்' என்று கண்டிப் பாகச் சொல்லிவிட்டான்.

சடையப்பன் துளியும் கோபித்துக் கொள்ளவில்லை; முகத்திலே துக்கம்தான் தோய்ந்து இருந்தது.

மறுபடியும் மறுபடியும் அதனையே வலியுறுத்தலானான். அவனுடைய தழதழத்த குரலைக் கேட்டு சொக்கலிங்கம் உருகிவிட்டான்.

''இத்தனை வருஷங்கள் எங்களைப் பிரிந்து இருந்து வந்தாய். இன்னும் ஒரு இரண்டு மூன்று வருஷம் இருக்கக் கூடாதா, அப்பா!'' என்று கேட்டுவிட்டு சடையப்பன், கண்களைக் கசக்கிக்கொண்டது கண்டு சொக்கலிங்கம் திடுக் கிட்டுப் போனான்.

''பிரிந்து இருப்பதைக் காட்டிலும் கொடுமையை அல் லவா அப்பா அனுபவிக்கச் சொல்லுகிறீர்கள். நீங்கள் என் அருகிலேயே இருப்பீர்கள்; ஆனால் இவர் என் அப்பா என்று நான் சொல்லக் கூடாது என்கிறீரே...தட்டு நிறைய தித்திப் புப் பண்டம் அடுக்கி, எதிரே வைத்துவிட்டு, 'சாப்பிடக் கூடாது. பார்த்துக் கொண்டு மட்டும்தான் இருக்கலாம்' என்கிறீர்களே!''

''பத்தியம் இருக்கச் சொல்கிறேன் மகனே! நாம் நோயாளிகள்; தரித்திரம் என்ற நோய்! கேவலமான வேலையைச் செய்து வருகிறேன். வண்டி ஓட்டிவிட்டு வீட்டுக்குப் போய் இருக்கும் வேலைகூட அல்லடா மகனே!

குதிரைகளோடு குதிரையாக இருக்கிறேன். அவள்தானடா மகனே! குதிரை கட்டியுள்ள இடத்தைச் சுத்தம் செய் பவள்; உன் தாயார்! நீயே சொல்லு, இந்த நிலைமையில் உள்ள எனக்கு நீ மகன் என்று தெரிந்தால், ஜெமீந்தாரர் உன்னை மனம் ஒப்பித் தமது ஜெமீன்தார் பேரக் குழந்தை களுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கச் சொல்லுவாரா? சீமான்கள் வருகிற இடம்! பெரிய பெரிய அதிகாரிகளுடைய பழக்கம். துரைமார்களின் கம்பெனியில் தொடர்பு. உள்ள படி பெரிய இடம். நாகரிகம் மிகுந்த மாளிகை. அங்கு ஒரு வண்டிக்காரன் மகன், உள்கூடம்கூடப் போக முடியாது. அவர் விரும்புவதோ, மாளிகையில் இருந்து கொண்டு, ஜெமீன் குடும்பத்தாருடன் ஒன்றாகச் சாப்பிட்டுக் கொண்டு, குழந்தைகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கும் ஆசிரியர்! டேவிட் துரையிடம் பயிற்சி பெற்றவன் என்ற பட்டத்தை மதிப்பார், நிரம்ப! இவன் படித்திருக்கிறான், ஆனால் இவன் என் மகன்! என்று நான் சொன்னால் என்ன எண்ணிக் கொள்வார். ஆயிரம் படிப்பு இருக்கட்டும்; ஊர் என்ன சொல்லும்? ஜெமீன்தாரர் வீட்டுக் குழந்தை களுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்க வண்டிக்காரன் மகன்தானா கிடைத்தான் என்று அல்லவா. நம்மாலே அந் தக் கேவலத்தைத் தாங்கிக் கொள்ள முடியாது என்று கண் டிப்பாகச் சொல்லி விடுவார்!

''அப்பா! நான் நாலு எழுத்து கற்றுக் கொண்டதே உன்னை மகிழ்விக்க. உனக்கு மதிப்புத் தேடிக் கொடுக்க. 'என் மகனைச் சாதாரணமாக எண்ணிக் கொள்ளாதீர்கள். அவன் படித்தவன்; மற்றவர்களுக்குப் படிப்பு சொல்லிக் கொடுப்பவன்; நம்முடைய தமிழ்மட்டுமல்ல, ஆங்கிலபாஷை அறிந்தவன்; ஆங்கிலேயர்களே அவன் திறமையைப்பாராட்டு கிறார்கள்' என்றெல்லாம் நீ பேசிப் பெருமைப்பட வேண் டும் என்பதற்காகத்தானே! அடிக்கடி மாமா என்னிடம் சொல்லுவார், ''சொக்கலிங்கம்! நமது குடும்பம் ஓரளவு நிலபுலத்தோடு கிராமத்திலே மதிப்போடு வாழ்ந்த குடும்பந் தான். வகையில்லாத வாழ்க்கை நடத்தியதாலே சொத்து

போய்விட்டது. கிராமத்திலே பெரியதனக்காரக் குடும்ப மாக இருந்த நாம் நொடித்துப் போய்விட்டோம். ஏதோ நான் ஓடி ஆடிப் பாடுபட்டு, நம்ம துரையிடம் வேலைக்கு அமர்ந்தேன். உன் அப்பா, படாத பாடுபட்டுக் கடைசியில் ...சொல்லக்கூட எனக்குக் கூச்சமாக இருக்கிறது. நம்ம நல் லூரில் திருவிழாவின்போது அவருக்குத்தான் முதல் மாலை போடுவார்கள். அப்படிப்பட்டவர் இன்று...சொக்கலிங்கம்! நீதான் நமது குடும்பத்தை மறுபடியும் நல்ல நிலைமைக்குக் கொண்டு வரவேண்டும்; நாலு பேர் மதிக்கத்தக்க நிலை மைக்குக் கொண்டுவர வேண்டும்'' என்றெல்லாம் சொல்லு வார். கேட்டுக் கொண்டிருக்கும் என் கண்களில் நீர் துளிர்க்கும். ஓரளவு படித்தாயிற்று; கணக்கு வழக்குப் பார்க் கத் தெரிந்து கொண்டேன். நல்ல வேலை மட்டும் கிடைத்து விட்டால், நிம்மதியாக வாழலாம். தலைநிமிர்ந்து நீ நடக் கலாம். என் மகன் உத்தியோகம் பார்க்கிறான் என்று சொல் லிச் சொல்லி மகிழலாம்...''

''உத்தியோகம் நீ பார்க்க வேண்டும் என்பதுதானடா சொக்கு, என் ஆசையும். நான் சொல்லுகிற யோசனையும் அதற்காகத்தான். ஜெமீன்தார் வீட்டுக் குழந்தைகளுக்குப் படிப்புச் சொல்லிக் கொடுக்கும் வேலையிலே, நீ சேர்ந்து கொண்டால் போதும்—எந்தப் பெரிய உத்தியோகமும் உனக்குக் கிடைத்துவிடும். அது சாமான்யமான இடமல்ல; வெறும் ஜெமீன்தார் வீடு அல்ல. ஐம்புலிங்க பூபதி, துரை மார்களுக்கு ரொம்பவும் வேண்டியவர். எந்தப் பெரியதுரை அந்த பக்கத்துக்கு வந்தாலும்'பூபதி! பூபதி!'என்று இவரைத் தான் சுற்றிச் சுற்றி வட்டமிடுவார்கள். அவர் ஒரு வார்த்தை சொன்னால் போதும். வெள்ளைக்கார சர்க்கார் எந்தப் பெரிய உத்தியோகத்தையும் உனக்குக் கொடுப்பார்கள்!''

''ஜெமீன்தாருடைய தயவு இருந்தால் போதும் என்றுதானே அப்பா சொல்லுகிறாய்! அவரிடம் மனுச் செய்து கொள்ளலாம். அதற்கு நான் முழுச் சம்மதம் தெரி விக்கிறேன். பெரிய வேலை கிடைக்கிற வரையில், அவர் வீட்டுக் குழந்தைகளுக்குப் பாடம்,படிப்புச் சொல்லிக்கொடுக்

கவும் ஒப்புக் கொள்கிறேன். ஆனால் நீங்கள் போடுகிற மற்றொரு நிபந்தனைதானப்பா என் நெஞ்சிலே நெருப்பை அள்ளிப் போடுவது போல இருக்கிறது. எப்படியப்பா மனம்இடம் கொடுக்கும்? ஏனப்பா அப்படி மறைந்து வாழ வேண்டும்? இவர் என் அப்பா என்று சொல்லிக் கொள்வதற்கு நான் ஏனப்பா கூச்சப்படவேண்டும்?''

''தம்பி! நீயும் கூச்சப்பட மாட்டாய்; எனக்கும் நீ 'அப்பா! அம்மா!' என்று கூப்பிட்டுக் கேட்பதைவிட இன்பம் வேறு இருக்க முடியுமா? என் மகனைப் பார்த்தீர்களா! எவ்வளவு அழகாக இருக்கிறான்; அவன் எவ்வளவு பெரிய அறிவாளி தெரியுமா! ஊர் ஜனங்கள் எல்லாம் வெள்ளைக்காரத் துரைகளைக் கண்டால் பயந்து கொள்கிறார்களே, என் மகன் அந்தத் துரைகளிடம் எவ்வளவு தாராளமாகப் பழகுகிறான், தெரியுமா என்றெல்லாம் சொல்லிப் பெருமைப்படத்தான் நினைக்கிறாள் உன் அம்மா. ஆனால்—''

''ஆனால் என்னப்பா ஆனால்! அம்மா பெருமைப்படுவதிலே, என்ன தவறு? எல்லாப் பிள்ளைகளுமா, இன்று என் அளவுக்கு சர்க்கார் பாஷையைப் படித்திருக்கிறார்கள். உத்யோகம் பார்க்கும் யோக்யதையைப் பெற்றிருக்கிறார்கள்! அம்மாவுக்கு ஆனந்தமாகத்தான் இருக்கும்...''

''அம்மாவும் நானும் ஆனந்தம் அடைய ஒரேவழி நான் சொன்ன வழிதான்...''

''என்னவழி அது! எந்த மகனும்,எவ்வளவு மோசமான குணம் கொண்ட மகனும் செய்யத் துணியாததை நான் செய்ய வேண்டும்.''

''மகனே! உன் உள்ளம் எனக்குத் தெரியாதா? உன் உத்தமமான குணம் எனக்குத் தெரியாதா! உன்னை என்ன செய்யச் சொல்லுகிறேன்—எதற்காக அதைச் செய்யச் சொல்லுகிறேன். நமது குடும்பம் மீண்டும் நல்ல நிலைமையை அடையத்தான்.''

''நான் யார் மகன் என்பதை வெளியே காட்டிக் கொள்ளாமல் உலவச் சொல்லுகிறீர்களே—உங்கள் கண் முன்னாலேயே! அதைவிடக் கொடுமை வேறு என்னப்பா இருக்க முடியும்?...என்னை வாட்டாதீர்களப்பா...''

''சொக்கலிங்கம்! நான் முறைப்படி தமிழ்ப் படித்தவன் என்பது தெரியுமா உனக்கு? பாடம்கூட சொல்லிக் கொடுத்து இருக்கிறேன் — பணத்துக்காகக்கூட அல்லடா மகனே, பொழுது போக்குக்காக! ஜெமீன்தாரிடம் நான் அதைக் காட்டிக் கொள்கிறேனா! சடையா! ஆத்திசூடி தெரியுமா உனக்கு என்றுகூடக் கேலியாகக் கேட்பார் ஜெமீன்தாரர்; 'எனக்குங்களா! நான் என்னத்தைக் கண்டேன்!' என்று சொல்லுவேன்.''

''ஏனப்பா! ஏன் மறைக்க வேண்டும்? சொன்னால் என்ன, எனக்குத் தமிழிலே நல்ல பயிற்சி உண்டு என்று''...

''சொல்லலாமடா மகனே! சொல்லலாம். நமது குடும்பம் நொடித்துப் போகாமலிருந்தால் சொல்லலாம். ஆனால் நான் சொல்லலாமா! நான் யார்? வாழ்ந்து கெட்டவன். நல்லது கெட்டது தெரியாமல் நடந்து கொண்டதால் வாழ்க்கையைக் கெடுத்துக் கொண்டவன். நான் போய் ஜெமீன் தாரரிடம் தமிழ் இலக்கணமும் இலக்கியமும் தெரியும்; அகவல் அருணாசலப் புலவரிடம் ஆறு வருடம் பாடம் கேட்டிருக்கிறேன் என்று சொல்லுவதா?''...

''சொன்னால் என்னப்பா என்றுதான் கேட்கிறேன்''

''சொல்லிவிட்டு, பைத்யக்காரா! போதும் நீ தமிழ்ப் படித்த பெருமையைப் பற்றிக் கதை அளப்பது. போ! போ! குதிரைகளுக்குத் தண்ணீர் காட்ட வேண்டிய நேரம் இது. அந்த வேலையை ஒழுங்காகச் செய்யாமல், நீ படித்த அகவலின் பெருமைபற்றி அளந்து கொண்டிருக்காதே! இப்போது உனக்குச் சோறு போடுவது உன்னுடைய அகவல் அல்ல; நம்ம குதிரைகள்! என்று சொல்லிவிட்டு இடிஇடியெனச் சிரிப்பார். மகனே! நான் இப்போது வண்டி ஓட்டி!! வண்டிக்காரனடா, வண்டிக்காரன்!''

''என் அப்பா! என்னைப் பெற்ற பெருமான்! எனக்கு உயிரும் உடலும் உதிரமும், கொடுத்த உத்தமர்.''

''அப்படி நீ சொல்லி, நான் கேட்டு மகிழ காலம் வரவில்லை அப்பா! இது அல்ல அந்தக் காலம். நான் வண்டிக்காரன்! நீ புதுவாழ்வு பெற வேண்டியவன்; என் மகன் என்று தெரிந்தால்—வண்டிக்காரன் மகன் என்று தெரிந்தால், உனக்குப் புதுவாழ்வு கிடைக்காது...''

''பயங்கரம் மூட்டும் பேச்செல்லாம் பேசுகிறீர்களே அப்பா!''

''விவரத்தை வளர்த்துக் கொண்டிருக்க நேரமில்லை. உன் மனதிலே என்னென்ன தோன்றும் என்பதைப் பற்றியெல்லாம் நன்றாக யோசித்துப் பார்த்து, என் மனதிலே ஏற்பட்ட கொந்தளிப்பையும் அடக்கிக் கொண்டு, அதற்குப் பிறகே நான் இந்த முடிவுக்கு வந்தேன். நீ ஜெமீன் ஜம்புலிங்க பூபதியின் குழந்தைகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கும் வேலையிலே சேர்ந்துவிட வேண்டும். அவர்கள் எதிர்பார்க்கும் யோக்யதாம்சம் அவ்வளவும் உன்னிடமிருக்கிறது. உன்னிடம் உள்ள ஒன்றே ஒன்றுதான், உனக்கும் வேலைக்கும் நடுவே நிற்கிறது, தடைக்கல்லாக. நீ என் மகன்—வண்டிக்காரன் மகன் என்பதுதான் குறுக்கே நிற்கிறது. வண்டிக்காரனுடைய மகனை, ஜெமீன் பிள்ளைகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கும் வேலைக்கு வைத்துக் கொள்ள மாட்டார் பூபதி! பிள்ளைகளோடு மாளிகையில் தங்கியிருக்க வேண்டும்; அங்கேயே சாப்பாடு, ஜாகை எல்லாம். எப்போதும் பிள்ளைகளுடன் இருந்து வர வேண்டும். ஜெமீன் குடும்பத்துடன் பழகும் நிலை! அந்த நிலையை மகனே! ஒரு வண்டிக்காரன் மகன் பெறமுடியாது—தரமாட்டார்கள்; ஆனால் நீ அந்த நிலையைப் பெற்றே ஆகவேண்டும். அங்கு இடம் பெற்றுக் கொண்டால், நீ முன்னேறுவதற்கான படிக்கட்டுகள் வேகமாக அமையும். நல்ல நிலை—மதிப்பான உத்தியோகம் கிடைக்கும்—கண்குளிரக் காணுவேன், தம்பி! நோயைப் போக்கிக்கொள்ள கசப்பான மருந்துகூடச் சாப்பிடவேண்டி வந்துவிடுகிறது அல்லவா! அது இது. கண்ணிலே

வலி ஏற்பட்டால் அதைப் போக்க ஒரு மருந்து தெளிப் பார்கள் கண்ணில்! எரிச்சல் சொல்லி முடியாது. கண்ணீர் தாரை தாரையாகப் பெருகும். நெருப்புப் பொறி பட்டு விட்டால் எப்படியோ அப்படி இருக்கும். கண்களே இரத்தச் சிவப்பாகிவிடும். ஆனால் தம்பி! மெள்ள மெள்ள எரிச்சல் அடங்கும். சிகப்பு மாறும். மருந்து வேலை செய்யும்; கண்வலி போய்விடும்—பார்வை முன்பு இருந்ததைவிட நன்றாக ஆகிவிடும். அப்படிப்பட்ட மருந்துத் துளிகளைத் தெளித்துக் கொண்டாக வேண்டும்—நீயும் நானும், உன் அம்மாவும்...''

''மருந்துத் துளிகள் அல்ல அப்பா! நெருப்புப் பொறி கள்!''

கடைசியில் சொக்கலிங்கம் சம்மதம் தெரிவித்தான், கண்ணீரைத் துடைத்துக் கொண்டு.

''கொஞ்ச காலம்! கொஞ்ச காலம்! வேறு ஒரு பெரிய வேலை கிடைக்கிறவரையில்!'' என்றுசமாதானம் கூறிவிட்டு, சடையப்பனும் சொர்ணமும் ஊர் புறப்பட்டார்கள், சொக்க லிங்கத்தை இரண்டு நாள் கழித்து ஜெமீன் கிராமம் வரும் படிச் சொல்லிவிட்டு.

டேவிட், சொக்கலிங்கம் வேறு ஊர் போவதை முதலில் விரும்பவில்லை. என்றாலும், சீக்கிரமாகவே சீமைக்கு வரும் படி அவருக்கு ஆராய்ச்சிக் கழகம் தெரிவித்திருந்த கடிதம் கிடைத்ததும், சொக்கலிங்கம் தன் தகப்பனாருடன் போய் வாழ்ந்து வருவதுதான் முறை என்ற முடிவுக்கு வந்தார்.

பொதுவான சிபாரிசுக் கடிதத்துடன், குறிப்பாக, ஜெமீன் தாரர் ஐம்புலிங்க பூபதிக்கே ஒரு தனியான சிபாரிசுக் கடிதமும் வாங்கிக் கொண்டு, சொக்கலிங்கம், ஜெமீன் மாளிகை நோக்கிச் சென்றான்.

அவன் படாடோபமற்ற, ஆனால் நாகரிகமான உடை உடுத்திக் கொண்டு ஜெமீன் மாளிகைக்குள்ளே நுழையும் போது சடையப்பன் விலை மிகுந்த ஒரு குதிரையை வெளியே

உலாவ அழைத்துச் செல்லுவதைக் கண்டான். நெஞ்சு பகீரென்று ஆகிவிட்டது. ஓடிச் சென்று அவர் காலில் விழ வேண்டும் போலத் தோன்றிற்று. 'அப்பா! அப்பா!' என்ற சொல் வேகவேகமாக கிளம்பிற்று; சடையப்பன் பார்த்த பார்வையால் வார்த்தைகள் வெளியே வரவில்லை. சொக்கலிங்கத்தைப் பார்க்காதவனைப் போலச் சடையப்பன் வெளியே சென்றான்.

ஜெமீன்தார் ஐம்புலிங்க பூபதி, மிகுந்த செல்வாக்குப் படைத்தவர். ஆங்கில அரசுடன் உறவு கொண்டாலன்றி நமது ஜெமீன் வாழ்வு நிலைக்காது என்பதை உணர்ந்து நடந்து கொண்டவர். ஆனால் அதே நேரத்தில், ஜெமீன்தார் என்பதற்கு உரிய மதிப்பு கெடக்கூடாது என்பதிலேயும் கண்ணுங் கருத்துமாக இருந்தவர்.

மற்ற ஜெமீன்தாரர்களைப்போல, குடிமக்களைக் கசக்கிப் பிழிந்தும் கொள்ளை அடித்தும் பொருள் சேர்த்தால் மட்டுமே போக போக்கியத்தில் மூழ்கி இருக்கலாம் என்ற நிலையில் அவர் இல்லை. ஜெமீன் வருமானத்தைவிட அதிக அளவு அவர் வியாபார மூலம் பெற்றுக் கொண்டு வந்தார். வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக் கூடிய பண்டங்கள், குறிப்பாக புகையிலை, நிலக்கடலை ஆகியவை அவருடைய ஜெமீனில் போதுமான அளவு இருந்தது. சீமைக்குச் சென்று வியாபாரக் கம்பெனிகளுடன் தொடர்பும் ஏற்படுத்தி வைத்துக் கொண்டிருந்தார்.

விசேஷ தினங்களில் தவிர மற்ற நேரத்தில் ஆங்கில முறை உடுப்புடன்தான் உலவுவார். நவராத்திரி போன்ற சில விசேஷ நாட்களில் மட்டும் ஜெமீன் உடையுடன் உலா வருவார்.

ஜெமீன் மாளிகை, பழைய கெம்பீரமான தோற்றத்துடன் இருந்தது. கொடிமரம்! காவலாட்கள் தங்கும் இடம்! வண்டிப் பட்டை தனியாக! சிறிய கோபுர அமைப்பில், நுழைவு வாயில். அதிலே கலசம், சித்திரங்கள், சித்திர வேலைப்பாடுகள்!

உள்ளே முழுக்க முழுக்க ஆங்கிலப் பாணியில் விரிப்பு கள், விளக்குகள், இருக்கைகள்!

வேலையாட்கள், ஜெமீன் மரபினைக் காட்டும் தனி உடையுடன் இருந்தனர்.

சடையப்பன்கூட, சாதாரண காலத்தில் எப்படி உடை அணிந்திருந்தாலும் ஜெமீன்தார் கிளம்பும்போது, தனி உடை அணிந்து கொண்டுதான் வண்டியை ஓட்டிச் செல்ல வேண்டும் என்பது ஏற்பாடு.

வண்டி, இவருக்காகவே தனியாக தயாரிக்கப்பட்டது —இரட்டைக் குதிரைகள் பூட்டிய சாரட்டு.

தரமான குதிரைகளை வாங்கி வளர்ப்பதில் அலாதி யான விருப்பம் ஜெமீன்தாருக்கு.

கொடுமைக்காரர் என்ற பெயரில்லை; ஆனால் எல்லோ ரையும் சமமாக பாவித்து நடத்துபவர் என்றும் சொல்லி விடமுடியாது.

கட்டி வைத்து அடிப்பது, கொளுத்தி அழிப்பது போன்ற கொடுமைகள் கிடையாது. ஆனால் அவர் எதிரே வருபவர் கள் மேல் துண்டை எடுத்து இடுப்பில் கட்டிக் கொள்ளவேண் டும், மரியாதைக்காக! ஜெமீன் சாரட்டு வருகிறது என்றால் எழுந்து நிற்கவேண்டும். இப்படிப்பட்ட கட்டு திட்டங்களைக் கண்டிப்புடன் வைத்துக் கொண்டு இருந்தார்.

மகன் இல்லாததால், தன் இரண்டு குமாரிகளையும் ஜெமீனை நடத்திச் செல்லக்கூடிய அறிவாற்றல் கிடைக்கும் படி பார்த்துக் கொண்டார்.

பெரிய ராஜகுமாரி—இளைய ராஜகுமாரி என்றுதான் ஊரார் அழைப்பார்கள், பெண்களை.

எல்லா விதத்திலும் மிக்க மகிழ்ச்சியாக இருந்து வந்த ஜெமீன்தாரருக்கு ஒரு மனக்குறை ஏற்படுத்தவே பிறந்தது போல, அவருடைய மருமகன் காலிங்கராயர் விளங்கினார்.

அவர் பெயரைக் கேட்டாலே ஊராருக்கு நடுக்கம். ஆனால் அவர் ஊரில் இருக்கும் நாட்கள் மிகக் குறைவு. ஊட்டி, கொடைக்கானல், பம்பாய், பூனா, பெங்களூர் என்று ஒவ்வொரு சிங்காரபுரியாகச் சுற்றிக்கொண்டு இருப்பார்!

ஜெமின் மாளிகைக்குள்ளே அனுமதி பெற்று நுழைந்த போது சொக்கலிங்கத்துக்கு எந்த விதமான அச்சமும் எழ வில்லை. காரணம், ஜெமீன்கள் உண்டான வரலாறு பற்றிப் படித்தறிந்தவன். ஜெமீன் முறைக்கு எதிர்காலம் கிடையாது என்பது பற்றி டேவிட் தந்த விளக்கத்தைப் பலமுறை கேட்டவன்.

டேவிட் துரை கொடுத்த கடிதத்தை ஜெமீன்தாரிடம் கொடுத்துவிட்டு, சொக்கலிங்கம் அடக்கத்துடன் நின்று கொண்டிருந்தான்.

அவனுடைய தோற்றமும், கண்களிலே தோன்றிய ஒளியும், முகத்தில் தவழ்ந்த புன்னகையும், ஜெமீன்தாரரை வெகுவாகக் கவர்ந்துவிட்டது. முகமலர்ச்சியுடன் இருந்தார்.

டேவிட் துரையின் கடிதத்தைத் திருப்பித் திருப்பிப் படித்து விட்டு, ஜெமின்தாரர், ''வரப்போவதைத் தெரிவித்திருந்தால், ரயிலடிக்கு வண்டி அனுப்பி இருப்பேனே... உன் பெயர் சொக்கலிங்கமா...உட்கார், பரவாயிலலை. உட்கார்...கற்றோர்க்குச் சென்ற இடம் எல்லாம் சிறப்பு என்பார்களே...நம்ம ஜெமீனில் எப்போதும் அறிவாளர்களுக்கு மதிப்பு உண்டு'' என்றார்.

கொடுமை புரியும் ஜெமீன்தாரர்களைப் பற்றிய கதைகளைப் படித்திருந்த சொக்கலிங்கம், ஐம்புலிங்க பூபதியின் போக்கைக்கண்டு வியப்படைந்தான். டேவிட் துரையின் சிபாரிசுக் கடிதத்துக்கு கிடைத்துள்ள மரியாதை இது என்பதையும் உணர்ந்தான்.

''டேவிட்துரை சொல்லுகிற வார்த்தையை நான் தட்டி நடப்பதே இல்லை. அவர்தான் என்னை நம்ம கவர்னருக்கு அறிமுகம் செய்து வைத்தவர். சிபாரிசுக் கடிதம் இருக்கும்

போது வேறு எதுவும் தேவையில்லை. நாளைக்கே வேலைக்கு வந்து சேர்ந்து விடலாம்.''

''மிக்க நன்றி...இன்று முதலேகூட நான் தயார் தான். பெட்டி படுக்கையுடன் வந்துவிட்டேன்.''

''அதுவும் நல்லதாயிற்று. இன்று நல்ல நாள்கூட. குழந்தைகள் பக்கத்து ஊர் போயிருக்கிறார்கள். உமது ஜாகை இங்கேயேதான். வேலைக்காரன் இடத்தைக் காட்டுவான். பிள்ளைகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுப்பது மட்டுமல்ல, உமது வேலை; பிள்ளைகளுக்கு ஒரு பெரிய அண்ணன்போல இருக்க வேண்டும்...எல்லாவற்றையும் கவனித்துக் கொள்ள வேண்டும்.''

''ஜெமீன் குடும்பத்து மதிப்புக்கு ஏற்ற விதமாக, குழந்தைகள் வளர என்னாலானதைச் செய்கிறேன்...''

''ஜெமீன் குடும்பத்துச் சுபாவம் குழந்தைகளுக்குத் தன்னாலே வந்துவிடும்...நீங்கள் கற்றுத் தரவேண்டியது, மேனாட்டு முறைகளை; நடை உடை பாவனைகளை. இன்னும் சில வருஷங்களிலேயே நான் அவர்களைச் சீமைக்கு அனுப்பப் போகிறேன், அங்கேயே படிக்க...ஜெமீன் குடும்பத்திலே பிறந்தவர்கள் குறைந்தது ஜில்லா கலெக்டர் வேலைக்காவது போனால்தானே மதிப்பு. சீமைப் படிப்பு தேவையாம்...துரைகள் சொல்கிறார்கள்...நீங்கள்கூட ஆங்கிலமுறை உடையிலே இருப்பது நல்லது...குழந்தைகள் பழகும்போதே ஒரு பாடம் கிடைக்கும்...ஆங்கிலப் பாட்டு தெரியுமல்லவா, கற்றுக் கொடுக்க வேண்டும்...என் சின்ன மகள் போன வருஷம் தன் பெரியப்பா வீடு போயிருந்தாள்; ஒரு மூன்று மாதம்—பெங்களூர். அங்கு ஆங்கிலேயர் அதிகம் அல்லவா. அங்கு உமா, பியானோ வாத்தியம் வாசிக்கக்கூட கற்றுக் கொண்டாள்...''

''குழந்தைகள் பெரிய மகளுடைய...''

''ஆமாம், ஆமாம்...உமா மகேஸ்வரி, லலிதாம்பிகேஸ்வரி என்று எனக்கு இரண்டு பெண்கள்...தாயை இழந்து விட்டார்கள். லலிதாதான் மூத்தவள்; மூன்று குழந்தைகள்;

அவளைப் போலவே தங்கச் சிலைகள், அந்தக் குழந்தைகள்-உமா - இரண்டாவது பெண்; கன்னி.''

''இருவரும் ஆங்கிலப் படிப்பு படித்தவர்களாகத்தான் இருப்பார்கள்.''

''ஒரு ஆங்கிலோ—இந்திய மாது—பள்ளிக்கூட ஆசிரியை இங்கே தங்கி இருந்து, கற்றுக் கொடுத்தார்கள். எப்போது நாம் ஆங்கிலேயருடைய ஆளுகையில் கீழே வந்து விட்டோமோ, அப்போதே நாம் அவர்களுடைய முறைகளை மேற்கொள்ள வேண்டியதுதானே. அப்போதுதானே ஒரு மதிப்பு ஏற்படும். மேலும், நான் வேட்டையாடிக் கொண்டும், விருந்து சாப்பிட்டுக் கொண்டும், பொழுதை ஓட்டுகிற ஜெமீன்தாரன் அல்ல. வியாபாரத் தொடர்புகள் உண்டு. சீமையில் ஒரு பெரிய கம்பெனிக்கு நிலக்கடலை ஏற்றுமதி செய்கிறேன். முத்துச் சிப்பிகளையும் அனுப்பி வைக்கிறேன். அதனால் ஆங்கிலேயர்கள் தொடர்பு நிறைய உண்டு—நிறைய பழக்கம். சரி, சரி! நான் பேசிப் பேசி உமக்குச் சலிப்பை உண்டாக்கி விடக்கூடாது. ஓய்வு எடுத்துக்கொள்ள நினைப்பீர். பிரயாண அலுப்பு இருக்கும்...உம்முடைய பெயர் என்ன சொன்னீர்?

''சொக்கலிங்கம்! நண்பர்கள் 'சொக்கு' என்று செல்லமாக அழைப்பார்கள்...''

''இங்கு உமக்குப் பெயர் லிங்கம்...நினைவிலே வைத்துக் கொள்ளுங்கள். சொக்கலிங்கம் என்ற பெயரில் எனக்கொன்றும் வெறுப்பு கிடையாது. ஆனால் இங்கு சமையல் வேலை பார்ப்பவன் பெயர் சொக்கலிங்கம். குழந்தைகள் அவனை 'சொக்கா! சொக்கா!' என்று அழைப்பார்கள். உம்முடைய பெயரும் அதுபோலவே இருந்தால் என்னமோ போல இருக்கும் அல்லவா, அதனாலே...குழந்தைகளின் சௌகரியத்துக்காக உமது பெயரைக் கொஞ்சம் வெட்டி விட்டேன். சரி! மிஸ்டர் லிங்கம்! இனி உமது அறைக்குச் சென்று ஓய்வு எடுத்துக் கொள்ளலாம். தேவைப்படும் பணத்தை அவ்வப்போது மேனேஜரிடம் பெற்றுக் கொள்ள

லாம். எனக்கு உங்களை ரொம்பவும் பிடித்துவிட்டது. சில வேளைகளில் என்னோடுகூட உலாவ வரலாம்; வேட்டையாடக்கூடச் செல்லலாம்.

மறுநாள் குழந்தைகளுடன், ஜெமீன்தாரருடைய இரண்டு குமாரிகளும் வந்து சேர்ந்தனர். சொக்கலிங்கத்தை ஜெமீன்தார் அவர்களுக்கு அறிமுகப்படுத்தி வைத்தார்.

லலிதாம்பிகேஸ்வரி, உமாமகேஸ்வரி ஆகிய இருவருமே தங்களை ஊரார் அழைப்பதுபோல ராஜகுமாரி என்று ஆசிரியரும் அழைப்பதை விரும்பவில்லை என்று கூறக் கேட்டு, சொக்கலிங்கம் வியப்படைந்தான்.

குருபக்தி உணர்ச்சியாக இருக்குமோ என்று முதலில் யோசித்தான். ஆனால் ஜெமீன் மாளிகையில் பூஜை செய்ய வருபவரிடம் அவர்கள் எவ்வளவு அலட்சியமாக நடந்து கொள்கிறார்கள் என்பதைப் பார்த்த பிறகு, தன்னிடம் மரியாதையும் அன்பும் காட்டுவதற்குக் காரணம், டேவிட் துரையிடம் பல வருஷங்கள் பழகியவன் என்பதுதான் என்று தெரியவந்தது.

ஆங்கிலேயர் ஐயாயிரம் மைலுக்கு அப்பால் இருந்து இங்கு வந்து ஆட்சி நடத்துகிறார்கள் என்பதாலேயே, இப்படிப்பட்ட ஜெமீன்கள் ஆங்கிலேயரிடம் மிகுந்த பயபக்தி, விசுவாசம் காட்டுகிறார்கள் என்பதும், ஆங்கில அரசினரிடம் மட்டுமல்லாமல், ஆங்கிலேயப் பிரமுகர்களிடம் நெருங்கிப் பழகியவர்களிடமும் அதிக அளவு மரியாதை காட்டுகிறார்கள் என்பதையும் உணர்ந்தான்.

அன்னியருக்கு அடிமைப்பட்டு இருக்கிறோம் என்ற வருத்தமும், வெட்கமும் துளியும் அவர்களுக்கு இல்லாததையும் ஆங்கிலேயர்களைப் போலத் தாமும் கோலத்தை ஆக்கிக் கொள்வதிலேயே நாட்டம் கொண்டிருப்பதையும் அறிந்து வருந்தினான்.

ஆங்கில நாட்டு வரலாறு படித்திருந்தால், இவர்கள் இப்படியா இருப்பார்கள்; அடிமைத்தனத்தை ஆங்கில மக்கள் எவ்வளவு வெறுத்திருக்கிறார்கள்; அடிமைத் தனத்தைப்

போக்க எவ்வளவு இரத்தம் சிந்தியிருக்கிறார்கள் என்பது தெரிந்தால் இப்படியா இருப்பார்கள்' என்றெல்லாம் எண்ணிக் கவலைப்பட்டான்.

சொக்கலிங்கத்திடம் குழந்தைகள் மிகுந்த அன்பு காட்டத் தொடங்கி விட்டன.

அவன் படிப்பு சொல்லிக் கொடுத்த விதம், குழந்தைகளுக்கு மிகவும் பிடித்து இருந்தன.

காலையில் எழுந்திருப்பது—உடலைச் சுத்தம் செய்து கொள்வது—புதிய உடை உடுத்திக் கொள்வது—உலாவச் செல்வது என்பதிலிருந்து படிப்பு தொடங்கும்.

பல நாட்டுப் படங்கள்—வரலாற்றுச் சித்திரங்கள் ஆகியவைகளைக் காட்டி, குழந்தைகளுக்கு இயற்கையாகவே படிப்பதிலே விருப்பம் ஏற்படும்படி ஆகச்செய்தநேர்த்தியான முறையைக் கண்டு ஜெமீன்தாரர் வெகுவாகப் பாராட்டினார்.

எவ்வளவோ தடுத்தும், ஜெமீன்தாரர், சொக்கலிங்கத்துக்கு வித விதமான உடுப்புகளைத் தயாரித்துக் கொடுத்தார்.

''உமக்குப் பிடித்தமில்லாமல் இருக்கலாம் மிஸ்டர், லிங்கம்! ஆனால் எங்கள் ஜெமீன் கௌரவம் என்று ஒன்று இருக்கிறது, பாருங்கள். அதைக் கெடவிடக் கூடாதே'' என்று வேடிக்கையாக ஜெமீன்தாரர் பேசுவார்.

சொக்கலிங்கம், பிள்ளைகளுக்குப் படிப்பு சொல்லிக் கொடுக்க வேலைக்கு அமர்ந்தவராக அங்கு நடத்தப்படவில்லை; ஜெமீன் குடும்பத்தில் ஒருவராகவே மதித்து நடத்தப்பட்டு வந்தார்.

எதிர்பாராத அளவுக்கு வசதியான சூழ்நிலையும், மதிப்பும் கிடைத்தது. அவனைக் கண்டவர்கள் அனைவரும், 'இப்படி அல்லவா அமைய வேண்டும் வாழ்க்கை' என்று பேசிக் கொண்டனர். பூந்தோட்டத்தில் உலவுகிறான், புது

மணம் நுகர்கிறான் என்றுதானே எல்லாரும் கருதினர்; ஆனால் அவன் பட்ட வேதனை அவனுக்கல்லவா தெரியும்.

கூப்பிடு தூரத்தில் இருக்கிறார்கள் தாயும் தந்தையும்! ஆனால் வெளியே சொல்லிக் கொள்ள உரிமை இல்லை. தனக்குக் கிடைத்த வசதியான வாழ்க்கையிலே அவர்களுக் குப் பங்களிக்க உரிமை இல்லை. பேசவே உரிமை இல்லை.

என்ன விலையுயர்ந்த முத்துமாலை மார்பிலே புரளு கிறது என்று ஊரே புகழ்கிறது. ஆனால் அந்த முத்துக்கள் ஒவ்வொன்றும் மார்பைத் துளைத்துக் கொண்டே இருக்கு மானால், அந்த மாதரசியின் வேதனை எப்படி இருக்கும்? பூமணம் நுகருகிறான் என்று ஊரார் பாராட்டுகிறார்கள். ஆனால் ஒவ்வொரு தடவையும் பூநாகம் கடித்தபடி இருந் தால் எப்படியிருக்கும்? ஜெமீன் மாளிகைக்கு வருகிறவர்களிட மெல்லாம் ஜெமீன்தாரர் அறிமுகப் படுத்துகிறார்; மகிழ்ச்சி யுடன் பாராட்டுகிறார்; ஆனால் பெற்ற தாயும் தந்தையும்? அவர்கள் குடிசையில் அல்லவா குமுறுகிறார்கள்! மகன் மாளி கையில்! அவர்கள் குதிரைக் கொட்டிலுக்கு அருகே! இதற்கா என்னை மகனாகப் பெற்றார்கள்?

எத்தனை இன்பம் கிடைத்தாலும், குதிரையை அவர் தேய்த்துக் கொண்டிருப்பதை ஒரு கணம் பார்த்த உடன், இதயத்தில் ஆயிரம் தேள் அல்லவா கொட்டுகிறது.

'அப்பா!' 'வேண்டுமளவு பணம் எடுத்துக்கொள், செல வுக்கு' என்கிறார், ஜெமீன்தாரர்! விதவிதமான உடைகள்! வெல்வெட்டு மெத்தை! வகைவகையான உணவு! எல்லாம் எனக்கு! ஆனால் உங்களை நான் எந்தக் கோலத்தில் காண் கிறேன்? எப்படித் தாங்கிக் கொள்ள முடியும். தணலில் நிற்கிறேன்!

எல்லோரும் பாராட்டுகிறார்கள் என்னை. என் காதில் விழும்படி உன்னை ஏசுகிறார்களே! இதனைக் கேட்கவா எனக்குச் செவிகள்!! ஏனப்பா என்னை இப்படிச் சித்திர வதைக்கு ஆளாக்குகிறீர்கள்.

நீங்கள் வண்டி ஓட்டிக் கொண்டு செல்கிறீர்கள்; நான் அவர்களுடன் உள்ளே உட்கார்ந்து கொண்டு வருகிறேன்! என்ன கொடுமை! என்ன கொடுமை!

அப்பா! நான் இருக்கும் பக்கம்கூட வருவதற்கு உமக்கு அனுமதி இல்லையே! என் எதிரிலேயே கூனிக் குறுகி நிற்கிறீரே, டாளிசைக்கு, வருபவர் முன்.

எத்தனை முறை துடித்திருக்கிறேன்; இனியும் சகித்துக் கொள்ள முடியாது. அப்பா, அப்பா! என்று கூவிக் கொண்டே உன் காலடியில் விழவேண்டும். அம்மா! அம்மா! என்று அழுது கொண்டே உத்தமியின் பாதத்தை வணங்க வேண்டும் என்று தோன்றுகிறது. முடியவில்லையே! கூடாது என்று கட்டுப்படுத்தி விட்டீர்களே! கிராதகனாக இரு என்று கட்டளையிடுகிறீர்களே! இதயத்தை வெளியே எடுத்து வீசி விடு. மிருகமாகி விடு—என்று உத்திரவிட்டு விட்டீர்களே!...

அப்பா! நான் இங்கு பாடம் சொல்லிக் கொடுக்கிறேன் குழந்தைகளுக்கு; 'நீங்கள் வணங்க வேண்டிய முதல் தெய்வம் தாய்!'—என்று. என் தாய் அங்கு தலைவிரி கோலமாக நிற்கக் காண்கிறேன். என்ன ஒரு மாதிரி இருக்கிறீர்கள்? தலைவலியா! என்று கேட்டு உபசாரம் செய்கிறார்கள் எனக்கு!

என்னை ஏறெடுத்தும் பார்க்கமாட்டேன் என்கிறீர்களே! நாலுபேர் எதிரிலே என்னைக் கண்டால் வணங்குகிறீர்களே, ஐயோ! அதைவிட வேதனை இருக்க முடியுமா அப்பா!

ஏன் இந்த வேதனை? எத்தனை நாளைக்கு? இவ்வளவு நேசம் காட்டுகிறாரே ஜெமீன்தாரர், இப்போது உண்மையைச் சொன்னால் என்னப்பா?

வெளியே உலவப் போகிறேன் என்றால், ஜெமீன்தாரர் 'ஏன் அந்தச் சோம்பேறியை வண்டி கொண்டுவரச் சொல்வதுதானே! ஏன் நடந்து போகவேண்டும்?' என்று கேட்கிறார்.

அடப் பாவிகளே! அவர் என் அப்பா! என்னை இவ்வளவு மதிப்பாக நடத்திக் கொண்டு என் அப்பாவை இவ்வளவு கேவலமாக நடத்துகிறீர்களே இது அடுக்குமா என்று கூவிடத் தோன்றுகிறது. மாளிகை முழுவதும் அந்த ஒலி பரவ வேண்டும்; இந்த ஊர் முழுவதும் கேட்கவேண்டும். குன்றுகளிலெல்லாம் பரவ வேண்டும்... ஒரு வார்த்தை, ஒரு கை அசைவு, ஒரு கண் சிமிட்டுதல் போதும் அப்பா! ஓடோடி வந்து உன் பாதத்தில் விழுவேன்; இந்த ஊர் அறியச் சொல்வேன், 'இவர் என் அப்பா! இதோ என் தாய்!' என்று.

சொக்கலிங்கம் இதுபோலெல்லாம் எண்ணி எண்ணி மிகுந்த வேதனையுற்றான்.

சடையப்பனும் அவன் மனைவியும் தங்கள் மனவேதனை துளியும் வெளியே தெரியாதபடி நடந்து கொண்டார்கள்.

யாரும் காணாதபோது சொக்கலிங்கத்தை தொலைவிலிருந்து பார்த்துப் பூரிப்படைவார்கள்.

வேலையாட்கள், அவன் புகழ் பாடக்கேட்டு இன்புறுவார்கள். திரும்பத் திரும்பசொல்லச்சொல்லிக் கேட்பார்கள்.

எப்படியாவது யாருமறியாமல் தோட்டத்திலே உலவுவது போலச் சென்று, பெற்றோரைக் கண்டு பேசி இதயத்துக்கு விருந்து பெற்றிடலாம் என்று புறப்பட்டாலோ, யாராவது ஒருவர் வந்துவிடுகிறார்கள் துணைக்கு என்று!

ஜெமீன் மாளிகையில் அவன் வந்துசேர்ந்துகிட்டத்தட்ட ஓராண்டு ஆயிற்று. ஐந்தாறு தடவைகள் மட்டுமே பெற்றோரை சில விநாடிகள் தனியே கண்டு பேச முடிந்தது.

ஒவ்வொரு நாளும் தன் அறை ஜன்னல் வழியாக ஏக்கத்துடன் பார்க்கிறான். அந்தக் குடிசையை, அங்கு கோயில் கொண்டிருக்கும் தெய்வத்தைக் கண்ணீரால் அபிஷேகிக்கிறான், இருக்கும் இடத்தில் இருந்தபடியே!

அப்பா, மெள்ள தள்ளாடித் தள்ளாடி நடந்து வருகிறார்.

அம்மா, ஏதோ எடுத்துச் செல்கிறார்கள்!

யாரோ அதட்டிக் கூப்பிடுவது கேட்டு, அவசரமாக நடக்கிறார் அப்பா!

மலர்களைப் பொறுக்குகிறார்கள் அம்மா...

பூஜைக்கா! இந்தப் பாவி வாழட்டும் என்றா பூஜை செய்கிறார்கள்!

இரவு முழுவதும் கண்ணீர்! பகலில் ஒரு போலி நாடகம்!

ஜெமீன் மாளிகையில் இடம் பெற்ற சின்னாட்களிலேயே சொக்கலிங்கம் எல்லோருடைய நன்மதிப்பையும் பெற்றுவிட்டான். டேவிட் தந்த பயிற்சி காரணமாக எவரிடமும் இனிய முகத்துடன் பழகவும் பேசவும், மற்றவர்களுக்கு உதவி செய்வதிலே ஆர்வம் காட்டவும் அடக்கமாக இருக்கவும் அதேபோது அடிமை மனப்போக்கைக் கொள்ளாமலும் நடந்து கொள்ள முடிந்தது.

செல்வச் சூழ்நிலையில் வளர்க்கப்பட்ட ஜெமீன்தாரரின் பெண்களுக்கு முதலில், ஒரு வாத்தியாருக்கு இவ்வளவு மதிப்பு அளித்திட ஜெமீன்தாரர் முனைந்தது வியப்பாக இருந்தது.

பெரிய பெரிய சங்கீத வித்வான்கள் சன்மானம் பெறுவார்கள், புலவர்கள் பொன்னாடை பெறுவார்கள், கூத்தியலார் புகழுரையும் பொற்பதக்கமும் பெறுவார்கள். ஆனால் இவர்களிலே யாருக்கும் கிடைக்காத ஒரு தனித்தன்மையான மதிப்பு பிள்ளைகளுக்குப் படிப்புச் சொல்லிக் கொடுக்க வந்த, ஊர் பேர் தெரியாத ஒரு இளைஞருக்குத் தரப்படுவதன் காரணம் தெரியாமல் வியப்புற்றனர். ஜெமீன்தாரரே அவ்விதம் நடந்துகொள்ளும்போது நாம் வேறுவிதமாக நடந்து கொள்ளக் கூடாது என்று ஜெமீன்தாரரின் குமாரிகள் கருதினர்.

மற்றோர் வியப்பும் அவர்களுக்கு ஏற்பட்டது. வேறு யாருக்கும் தரப்படாத மதிப்பு தரப்பட்ட போதிலும், எல்லாவிதமான வசதிகள் அளிக்கப்பட்ட போதிலும், சொக்கலிங்கம் முழு மகிழ்ச்சியுடன் இருப்பதுபோலத் தோன்றவில்லை.

எதையோ பறிகொடுத்துவிட்டவரைப் போன்ற ஒரு பார்வை! ஏதோ ஒரு வேதனையை அடக்கிக் கொள்ள முயற்சிப்பது போன்ற ஒரு போக்கு. மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் திணறுவது போன்ற ஒரு நிலை.

சிறிது நேரமாகிலும் தனியே உலவச் செல்வது, அதிக நேரம் தமது அறையில் தங்கி இருப்பது, பணியாட்களைப் பார்க்கும்போது கண்களில் கவலை கப்பிக்கொள்வது. இந்த நிலை தெரிந்தது, சொக்கலிங்கத்தின் நடவடிக்கையில்.

மூத்த மகள், தன் கணவனையும் குழந்தைகளையும் கவனித்துக் கொள்வதிலும், ஜமீனுக்கென்று ஏற்பட்டு விட்ட சம்பிரதாயங்களை நிறைவேற்றி வைப்பதிலேயும் அதிகமாக ஈடுபாடு கொண்டிருந்ததால், சொக்கலிங்கத்தால் ஏற்பட்ட இந்த நிலைமைகளைப்பற்றி அதிக அளவு சிந்தித்துக் கொண்டிருக்க முடியவில்லை.

சரியான ஒரு காரணம் இல்லாமல் அப்பா இவ்விதம் நடந்துகொள்ள மாட்டார் என்று திடமாக நம்பினாள். ஆகவே அந்தப் பிரச்சினை பற்றி மனதைப் போட்டுக் குழப்பிக் கொள்ளவில்லை.

உமாவின் நிலை அப்படி இல்லை. ஜமீன் காரியத்தை மூத்தவள் கவனித்துக் கொண்டதால், உமாவுக்கு, சொக்கலிங்கத்தை ஒட்டிக் கிளம்பிய பிரச்சினையில் மனதை செலுத்தவும், இது காரணமாக இருக்குமா, அது காரணமாக இருக்குமா என்று பல்வேறு வகையிலே சிந்தனையில் மூழ்கிடவும் நிரம்ப நேரம் இருந்தது.

ஆனால் எவ்வளவு சிந்தித்தாலும், புதிர் மேலும் மேலும் சிக்கலுள்ளதாயிற்றே தவிர, தெளிவு கிடைக்கவில்லை.

"இப்படி இருக்குமாடி கோகிலம்! இவர் உண்மையில் ஒரு பெரிய ஜமீன்தாரருடைய மகனாக இருக்கக்கூடும். தகப்பனாரிடம் ஏதோ ஒரு காரணத்தால் விரோதித்துக் கொண்டு, வீட்டைவிட்டு வந்து விட்டிருக்கிறார். இந்த இரக

சியம் அப்பாவுக்கு எப்படியோ தெரிந்துவிட்டிருக்கிறது. வந்தவரும் தன்னை 'வாத்தியார்' என்று மறைத்துச் சொல்லி இருக்கிறார். அப்பாவும் அதைக் கண்டுகொண்டதாகக் காட்டிக் கொள்ளாமல் நடந்து கொள்கிறார். அப்பாவா ஏமாறுவார்! வாத்தியார் என்று சொல்லிவிட்டால் நம்பி விடுவாரா? கோகிலம்! என்ன காரணம் இருக்கும், இவர் தன்னுடைய சொத்து சுகத்தை விட்டுவிட்டு இப்படி வாத்தியார் வேடம் போட்டுக் கொண்டு கிளம்ப? என்ன மனவேதனையோ! பாவம்...'' என்று உமா பேசுவாள். அதைக் கேட்கும் போதே கோகிலாவுக்கு மனதிலே திகில் மூளும். உமா சொல்கிறபடி இருந்துவிடக் கூடாது. சொக்கலிங்கம் வாத்தியார் வேலை பார்க்க வேண்டிய சாதாரண நிலையினராக இருக்க வேண்டும் என்று எண்ணிக் கொண்டும், அந்த நம்பிக்கையை அணைத்துக் கொண்டும், காலம் கனியும் என்று காத்துக் கொண்டும் இருந்தாள் கோகிலா—ஜமீன் மானேஜரின் மகள்.

சொக்கலிங்கத்தின் இனிய இயல்புகளும், வசீகரமான தோற்றமும், ஜமீன் மாளிகையிலே கிடைத்திருந்த ஏற்றமும், கோகிலாவின் மனதை வேகமாக அவன் பக்கம் இழுத்துச் சென்றுவிட்டது.

சொக்கலிங்கத்தின் தோற்றமும், இளமங்கையர் விரும்பிடும் விதமாக இருந்தது.

அவன் ஜமீன்தாரன்! ஏதோ காரணத்தாலே தன் நிலையை மறைத்துக் கொண்டு இருக்கிறான் என்பது உண்மையாகிப்போனால், தனக்கு அவன் எட்டாக் கனி ஆகிப் போவானே என்ற ஏக்கம் கோகிலாவுக்கு.

சொக்கலிங்கத்திடம் அவள் தன் மனதை பறிகொடுத்து விட்டிருந்தாள்.

எவ்வளவோ வேலைகளுக்கிடையிலும், அவன் சிற்சில வேளைகளில் தன் மீது செலுத்தும் பார்வையிலே ஒரு கனிவு இருப்பதை அவள் உணர்ந்து உளம் பூரித்தாள்.

உமாவும் சொக்கலிங்கத்தின் தோற்றத்தால் ஈர்க்கப் பட்டாள் என்ற போதிலும் தங்கள் குடும்ப அந்தஸ்துக்கு ஏற்றவிதமான நிலை இருந்தாலொழிய சொக்கலிங்கத்தை தான் அடைய நினைப்பது நடைபெறக் கூடியது அல்ல என் பதை உணர்ந்திருந்ததால், தன் மனதிலே காதலைத் தீயென மூண்டெழ விடவில்லை.

அவளுடைய உள்ளத்தில் முளைவிட்டுக் கொண்டிருந்த காதற் பயிருக்கு, ஜெமீன்முறை ஒரு வேலி போட்டுவிடும் என்பது உமாவுக்கு நன்றாகத் தெரியும்.

வாழ்க்கையை நடத்துவதற்காக 'வாத்தியார் வேலையோ அல்லது அது போன்ற வேறு ஏதேனும் அலு வலோ பார்த்தாக வேண்டிய நிலைதான் சொக்கலிங்கத் துக்கு என்றால், காதலிப்பது பலன்தராது—அது கருகிய மொட்டு ஆகிவிடவேண்டியதுதான் என்பதைத் தெளிவாகத் தெரிந்து வைத்திருந்தாள்.

ஜெமீன்தாரர் சொக்கலிங்கத்துக்குக் காட்டும் மதிப் பைக் கவனிக்கும்போது, உமாவின் மனதிலே ஒரு ஆவல் எழும். உண்மையில் வாத்தியார் வேலை பார்க்க வந்தவராக இவர் இருக்க முடியாது. இவர் ஏதோ ஒரு ஜெமீன் வீட்டுப் பிள்ளைதான். என்ன காரணத்தாலோ மாறுவேடம் போட் டுக் கொண்டிருக்கிறார் என்ற ஒரு எண்ணம் தோன்றியது.

அந்த எண்ணம் தந்த தித்திப்பிலேயே உமா மெத்தச் சுவை கண்டு வந்தாள்.

சொக்கலிங்கத்தின் உண்மை நிலை ஒருநாள் வெளியே தெரிந்துவிடும்; அப்போது அவரை அடையத் தனக்கு ஒரு தடையும் இராது என்ற நம்பிக்கையை நாளும் வளர்த்துக் கொண்டு வரலானாள்.

இரு எழில் மங்கையர் உள்ளத்திலும் இது போன்ற எண்ணங்களைக் கிளறிவிட்ட சொக்கலிங்கம் காதலைப்பற்றி எண்ணிப் பார்க்கக்கூடத் தனக்கு நேரம் இல்லை; நிலை இடம் தராது என்று இருந்து வந்தான்.

''கோகிலா! இப்படித்தான் இருக்கவேண்டும். இவருடைய தகப்பனார், பெரிய ஜெமீன்தாரர். இவர் ஒரே மகன்! தாயார் இறந்துவிட்டார்கள். அந்தப் பெரிய ஜெமீன்தாரர், இரண்டாந்தாரமாக எவளையோ திருமணம் செய்து கொண்டிருக்கிறார். அதைக் கண்டு கோபித்துக் கொண்டு, 'எனக்கு இந்த ஜெமீனே வேண்டாம். இந்தப் பெரிய உலகத்தில் ஜெமீன்தாரர்கள் மட்டுமா இருக்கிறார்கள். உழைக்கத் தெரிந்தவர்கள் யாரும் வாழ முடியும். நான் செல்கிறேன். என்னை மறந்துவிடுங்கள், என்றெல்லாம் ஆத்திரமாகப் பேசிவிட்டு இவர் கிளம்பிவிட்டிருக்கிறார். இவருடைய இந்த இரகசியத்தை அப்பா எப்படியோ தெரிந்து வைத்திருக்கிறார். அதனால்தான் இவரை, ஜெமீனிலே வாத்தியார் வேலை பார்க்க வரும்படிக் கூறி அழைத்து வந்து வைத்திருக்கிறார். தக்கசமயமாகப் பார்த்துக் கூற வேண்டியதை அப்பா கூறப்போகிறார், பாரேன்!'' என்று ஆவல் ததும்பத் ததும்ப உமா கூறினாள்.

'ஐயோ! அப்படி இருந்துவிட்டால் என்கதி என்ன ஆவது? நான் எண்ணிடும் எண்ணங்கள் எப்படி ஈடேற முடியும்' என்ற ஏக்கத்துடன் கோகிலா உமா கூறுவதைக் கேட்டுக் கொண்டாள்.

மாறுவேடத்திலே உலவும் ஜெமீன்தாரர் இந்தச் சொக்கலிங்கம் என்ற எண்ணத்தை உமா தருவித்துக் கொண்டதும், அவள் கண்முன் இன்பமயமான எதிர்காலமே தெரியலாயிற்று.

ஜெமீன்தாரரின் அன்புக்கட்டளை காரணமாக சொக்கலிங்கம் விதவிதமான உடை உடுத்துக் கொள்வதையும், ஜெமீன்தாரரிடம் பழக வருபவர்களிடம் மிகத் திறமையுடன் பல பொருள்பற்றி அழகாகப் பேசுவதையும் உமா பார்த்தும் கேட்டும், மிகுந்த பூரிப்படைந்து வந்தாள்.

இதே காரணமாகக் கோகிலா கிலி கொண்டிருந்தாள்.

ஆனால், உமாவின் கண்களுக்குத் தெரியாத ஒரு காட்சி கோகிலாவுக்குக் கிடைத்தது—அவள் துளியும் எதிர்பாராத நிலையில்.

தனியாக உலவச் செல்வதாகத் தோட்டத்துக்குச் சென் றிடும் சொக்கலிங்கத்தை ஒருமுறை தற்செயலாகப் பின் தொடர்ந்த கோகிலா, யாரும் காணாத முறையில் சொக்க லிங்கம் வண்டிக்காரன் குடிசைக்குள்ளே நுழையக் கண்டாள்.

பணியாளர்களிடம் பரிவு காட்டும் பண்பு காரணமா கவே சொக்கலிங்கம் அங்கே சென்றிருப்பதாகக் கோகிலா முதலில் எண்ணிக் கொண்டாள்.

ஆனால் உள்ளே சென்ற சொக்கலிங்கம் வெளியே வருவதற்கு நீண்ட நேரம் பிடித்தது.

அவன் வெளியே வந்தபோது, அவன் தன் கண்களிலே துளிர்த்திருந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டிருக்கக் கண்டாள். திகைப்பு மேலிட்டது.

கண் கலக்கத்தைத் தரத்தக்க அளவுக்கு என்ன கண்டான் அந்த குடிசைக்குள்ளே என்று எண்ணித் திகைத்தாள்.

சில விநாடிகளில் சொக்கலிங்கம் தோட்டத்தைக் கடந்து மாளிகையின் உட்புறம் சென்றுவிட்டான்.

அவன் உள்ளே வருவதைக் கண்டதும், உமா 'பியானோ' வாசித்துக் கொண்டு, பாட ஆரம்பித்தாள், வசந்தத்தின் இனிமையைப் பற்றிய ஒரு பாடலை.

"நோக்கம் எதுவாக இருந்தால் எனக்கென்னடா போக்கிரிப் பயலே! என்னை நம்பவைத்து மோசடி செய் தாயே, அதற்கு உன்னைச் சும்மா விட்டுவைக்கலாமா! என்னை எவ்வளவு ஏமாளி என்று எண்ணியிருந்தால், துணிந்து நீ இந்தக் காரியத்தைச் செய்திருப்பாய். அடே, அறிவற்றவனே! இந்த ஜெமீனுக்கு விரோதமாக நடந்தவன் கதி எல்லாம் தெரியுமா உனக்கு. அவர்களின் மண்டை ஓடு கள் எருவாக்கப்பட்டு வளர்ந்திருப்பதுதான் மாளிகையை ஒட்டி இருக்கிற தென்னந்தோப்பு! நீ படப்போகிறது இனி அல்லவா தெரியப் போகிறது உனக்கு. வண்டிக்காரன் பிள்ளை நீ! இங்கு வேடம் போட்டுக் கொண்டு ஜெமீன் குடும்பத்துடன் சரிசமமாகப் பழகினாயே துணிந்து, எத்

37816
MAHAMALAI ADIGAL LIBRARY

தனை துணிச்சல் உனக்கு. அடே! உன் போக்கிரித்தனம்கூட இருக்கட்டும்; எவ்வளவு கல்மனம் உனக்கு. பெற்ற தாயையும் தகப்பனையும் இங்கே கேவலமான பிழைப்பு நடத்த விட்டுவிட்டு, துளிகூட ஈவு இரக்கம், பற்று பாசம் இல்லாமல் நீ சீவிச் சிங்காரித்துக் கொண்டு கோலாகல வாழ்வு நடத்திக் கொண்டிருந்தாய். உன் போக்கைக் கண்ட அந்தக் கிழவன் மனம் என்ன பாடுபட்டிருக்கும்? உன் தாய், அங்கே குதிரைச் சாணியை எடுத்துப் போட்டு கொட்டிலைச் சுத்தப்படுத்திக் கொண்டிருப்பது—நீ ஜெமீன் கட்டிலில் சாய்ந்துகொண்டு சுகம் அனுபவிப்பது. ஒரு கணமாவது எண்ணினதுண்டா, இந்த ஈனத்தனத்தைப் பற்றி? தாயையும் தகப்பனையும் கேவலப்படுத்தத் துணிந்த உன்னை மனித இனத்திலேகூடச் சேர்க்கக்கூடாதே. சமுதாயமே பாழாகிவிடும் உன்போன்றவர்களால். உன்னை உயிரோடு விட்டு வைப்பதாக இல்லை. ஆமாம், என்னை வஞ்சித்தவனை நான் வாழ விடுவதில்லை...'' என்று ஜெமீன்தாரர் ஆத்திரம் மேலிட்டுக் கூச்சலிடுவதும், அவர் எந்த விநாடியில் உத்திரவிடப் போகிறார் என்று காத்துக் கொண்டு அடியாட்கள், கம்பு கட்டாரியுடன் சூழ நிற்பதையும் கண்டு, சொக்கலிங்கம் அலறித் துடித்தெழுந்து 'செ! என்ன பயங்கரமான கனவு'' என்று தனக்குள் கூறிக் கொண்டான்.

தான் நடத்திக் கொண்டிருக்கும் போலி நாடகத்தின் குட்டு உடைபட்டுப்போய் விட்டால் என்னென்ன ஆபத்துக்கள் வெடித்துக் கிளம்பக்கூடும் என்பதை சொக்கலிங்கம் எண்ணிப் பார்ப்பதுண்டு, சில சமயங்களில். ஆனால் இது போன்ற பயங்கரமான கனவுகள் கண்டதில்லை.

அன்றிரவு அந்தப் பயங்கரமான கனவு கண்டதற்குக் காரணம் அன்று மாலை, துளியும் எதிர்பாராத வகையிலே ஆப்பக்காரி அன்னத்தைக்கண்டு திடுக்கிட்டுப் போனதுதான்!

ஜெமீன் மாளிகைக் கொத்தனாருடன் குலவிக் கொண்டு அன்னம், ஜெமீன் குலதெய்வத்துக்கு நடத்தப்படும் திருவிழாவில் கலந்து கொண்டிருக்கக் கண்டு திடுக்கிட்டுப் போனான்.

அன்னம், விதவை. தவறான நடத்தை அற்றவள்; ஆப்பக்கடை நடத்திக் குடும்பத்தை நடத்திக் கொண்டு வருபவள் என்ற நல்ல பெயர் பெற்றவள். அவள் இப்படி! அவளுக்கு இப்படி கள்ளக்காதல்! இதிலே கிடைக்கும் பணம் தானா, காவேரியின் கழுத்திலே தங்கச் சங்கிலியாயிற்று? இப்படி எண்ணிப் பதறி, தன் குட்டை உடைத்து விடுவானோ என்று அன்னம் பதறினாள்.

தன் குட்டை அவள் எங்கே உடைத்துவிடுகிறாளோ என்று அவன் அஞ்சினான்.

கொத்தனார் மெள்ள அந்த இடத்தைவிட்டு நழுவி விட்டார்.

தயங்கித் தயங்கி அன்னம் சொக்கலிங்கத்தைக் கண்டு, கண்களைக் கசக்கியபடி, ''தம்பி! என்னமோ என் தலைவிதி இப்படி ஆகிவிட்டது. என்னைக் கண்டுவிட்டதை நம்ம ஊரிலே யாரிடமாவது நீ சொல்லிவிட்டால், என் மானம் மரியாதை யாவும் போய்விடும். நீதான் என்னைக் காப்பாற்ற வேண்டும். உன் காலில்கூட விழுந்து கேட்டுக் கொள்கிறேன்'' என்றாள்.

தனக்குப் பேராபத்து வந்துவிடப் போகிறது என்று அஞ்சிக் கிடந்த சொக்கலிங்கம், அன்னம் தன்னைக் கண்டு பயப்படுவது கண்டு அழுவதா சிரிப்பதா என்று தெரியாமல் திகைத்தான்.

''யாரம்மா நீ?'' என்று வியப்புடன் கேட்பதுபோல் வினவினான்.

''தம்பி! என் நடத்தையைக் கண்டதால்தானே யார் நீ என்றே என்னைக் கேட்டுவிட்டாய். எனக்கு இதுவும் வேண்டும், இதற்கு மேலும் வேண்டும்'' என்றள் அன்னம்.

''நீ யாரோ எனக்குத் தெரியாது. நான் கண்ணால் கண்டதை யாரிடமும் கூறப்போவதில்லை. ஆனால் ஒரே ஒரு நிபந்தனை. நான் இருக்கும் இடத்தில் அந்த ஊரிலேயே அந்த வட்டாரத்திலேயே நீ இருக்கக் கூடாது'' என்றான் சொக்கலிங்கம்.

''இந்தப் பாவியைக் கண்ணாலே பார்ப்பதுகூடப் பாவம் என்று நினைத்துத்தானே அப்படிப் பேசுகிறாய். என் நடத்தை உனக்கு எப்படியோ தெரிந்துவிட்டதாலே தான், காவேரியையும் கல்யாணம் கட்டிக்கொள்ள மறுத் தாய் என்பது இப்போது புரிகிறது. நாம் செய்கிற காரியம் யார் கண்ணிலும் படாது என்று எண்ணிக் கொண்ட நான் ஒரு முட்டாள். பாரேன்! ஆண்டவன் உன்னை இன்றையத் தினமாகப் பார்த்து இங்கே அனுப்பி வைத்தார்...நீ சொல் கிறபடி நான் செய்கிறேன்...இப்போதே இந்த ஊரைவிட்டுப் போய் விடுகிறேன். அவலூரிலும் இருக்கப் போவதில்லை... கோலாருக்கே போய் விடுகிறேன்...இந்த விஷயத்தை மட் டும் யாரிடமும் சொல்லிவிடாதே...காவேரியை ஒருவரும் கட்டிக் கொள்ள முன்வரமாட்டார்கள்...இந்தப் பாவிக்காக மனம் இரங்காவிட்டாலும், அந்தப் பெண்ணுக்காகவாவது இரக்கம் காட்டு தம்பி!'' என்று கெஞ்சினாள்.

''ஆகட்டும்! நீ முதலில் உடனே இந்த ஊரைவிட்டுக் கிளம்பு'' என்று கண்டிப்பான குரலைத் தருவித்துக் கூறி விட்டு, ''உன்னை இங்கு பார்த்ததை நான் மறந்துவிடு கிறேன். அதுபோலவே என்னை இங்குப் பார்த்ததை நீ மறந்துவிடு! யாராவது, என்னைப் பார்த்து இந்த அம்மா ளைத் தெரியுமா என்று கேட்டால், 'தெரியாது' என்று நான் கூறிவிடுகிறேன். அதுபோலவே நீயும் என்னைப் பற்றிக் கேட்டால் சொல்லிவிட வேண்டும்'' என்று உத்திரவு பிறப் பிப்பதுபோலப் பேசி அன்னத்தை ஊரைவிட்டே அனுப்பி விட்டு, ''அப்பாடா! வர இருந்த ஆபத்திலே இருந்து தப்பி னோம்'' என்று எண்ணிக் கொண்டான். ஆனால் அதே எண் ணம், அதன் விளைவாக அந்தப் பயங்கரமான கனவு!!

கனவிலே காணும்போதே இவ்வளவு பயங்கரமாக இருக்கிறதே, உண்மையிலேயே கபட நாடகம் வெளியாகி விட்டால் ஜமீன்தார் எப்படியெல்லாம் சீறுவார்—என் னென்ன தண்டனைகளைத் தருவார் என்பதை எண்ணும் போது சொக்கலிங்கத்துக்கு உடலே வெடவெடவென ஆயிற்று. கனவே பரவாயில்லை என்று தோன்றிற்று.

சொக்கலிங்கம் மேன்மையான நிலையில் இருந்து வரு கிறான் என்பதைக் காண்பதுடன், அதுபற்றி மற்றவர்கள் கூறுவதைக் காதுகுளிரக் கேட்கிறார்கள் அந்த முதியவர்கள்.

ஒருநாள் மாலை உமா மகேஸ்வரியே குடிசைப் பக்கம் சென்றாள்— புது ரகக் கோழிகள் கொண்டுவரப்பட்டிருப்ப தைக் கேள்விப்பட்டு, அவைகளைப் பார்க்க.

சொர்ணம், மரியாதையாக வரவேற்று, அழைத்துப் போய் கோழிகளைக் காட்டுகிறார்கள். சொக்கலிங்கத்தைப் பற்றிய உரையாடல் நடக்கிறது.

''ஜெமீன் மாளிகைக்குப் புது 'வாத்தியார்' வந்திருக்கி றார் தெரியுமா? ஆள் வெள்ளைக்காரன் போலவே உடுத்திக் கொண்டிருக்கிறார். வயது இருபத்தி இரண்டு இருக்கும். நல்ல சிகப்பு. அரும்பு மீசை. அழகான கண்கள்! எப்போதும் சிரிப்பு— ''

''சிரிக்கும்போது கன்னத்திலே குழிவிழுமே, அது எவ் வளவு அழகாக இருக்கும் தெரியுமா...''

''ஓ! நீ இதற்குமுன்பே புது வாத்தியாரைப் பார்த்து விட்டாயா...''

''இல்லையே...நான் இன்னும் பார்க்கவில்லை. மாளி கைக்குள்ளே போகவே வாய்ப்பு இல்லை...''

''பின்னே, எப்படிக் கன்னத்தில் குழி அழகாக விழும் என்று சொன்னாய்...''

''என்னமோ நினைப்பிலே சொன்னேன்...நீங்கள் வர்ணித்துக் கொண்டு வந்ததைக் கேட்டதிலிருந்து அப்படிச் சொல்லவேண்டும் போலத் தோன்றிற்று, சொன்னேன்.''

''படிப்பு சொல்லிக் கொடுப்பது மட்டுமல்ல, பாட்டு, நடனம், சித்திரம் தீட்டுவது எல்லாம் தெரிந்திருக்கிறது. எனக்கென்னமோ 'டீச்சர்' அதிக நாளைக்கு இங்கே இருப் பாரென்று தோன்றவில்லை...''

''ஏனம்மா அப்படிச் சொல்லுகிறீர்கள்?''

''படிப்பு நிறைய இருக்கும்; அது தெரிகிறது. திறமைசாலி. அப்படிப்பட்டவர் குழந்தைகளுக்குப் பாடம்சொல்லிக் கொடுப்பதிலேயா காலம் முழுவதும் இருப்பார். விரைவிலே பெரிய உத்தியோகத்துக்குப் போய்விடுவார்.''

''அதென்னம்மா அப்படி. நம்ம ஜெமீனிலே அவர் கேட்கிற பணம் கொடுக்க முடியாதா என்ன...''

''பணம் ஒன்றுதானா முக்கியம்...அதிகாரம் அந்தஸ்து இதெல்லாம் வேண்டாமா...அவர் பெரிய உத்யோகம் பார்க்கக் கூடியவர்...எனக்கு அப்படித்தான் தோன்றுகிறது...''

''ஜெமீன்தாரய்யா மனசு வைத்தால் நடக்காத காரியமா. அவருக்கு தெரிந்த துரை யாரிடமாவது ஒருவார்த்தை சொன்னால் போதாதா! வேலை தன்னாலே வருமே! ஆனால் அந்தப் பிள்ளை கூச்சமில்லாமல் கேட்கவேண்டும்.''

''டீச்சருக்கு இந்த இடம் ரொம்பப் பிடித்து விட்டிருக்கும் போலத் தெரிகிறது. ஓவியம் தீட்டுவார் என்று சொன்னேன்...அவருடைய அறை ஜன்னல் வழியாக, தோட்டத்தின் அழகைப் பார்த்துக் கொண்டே நின்றுகொண்டிருப்பார் நெடுநேரம்.''

''அவருடைய ஜன்னல் வழியாகப் பார்த்தால் தோட்டம் முழுவதும் தெரியுமாம்மா! அப்படியானால் எங்க குடிசைகூடத் தெரியும்...அப்படித்தானே...''

''ஆமாம்! அடிக்கடி தோட்டத்துப் பக்கம் உலாவ வருகிறாரே, பார்த்ததில்லையா—''

''பார்த்துப் பார்த்துப் பூரித்துக் கொண்டுதான் இருக்கிறேன்...''

''புது வாத்தியாரை நான் பார்த்ததே இல்லையென்று முன்னே சொன்னாயே...''

''கிட்டே நெருங்கிப் பார்த்ததில்லை என்றுதான் சொன்னேன்...தொலைவிலே இருந்து பார்த்திருக்கிறேன்...சின்ன ஜெமீன்தார்களோட வருவாரே அப்போது.

''அதென்ன சின்ன ஜெமீன்தார்கள்—ராமு சோமுன்னு சொல்லேன். வயசிலே நீ பாட்டிபோல, அந்தக் குழந்தை களுக்கு.''

''இருக்கலாம். பார்க்கப்போனா புது வாத்தியாருக்கு வயசிலே நான் அம்மாபோல! ஆனால் கூப்பிட முடியுமா, மகனே வாடான்னு!''

''உனக்கு மகன் இல்லையே என்கிற வருத்தம்...இல் லையா...ஒரு மகன் இருந்திருந்தா, ஏதாவது வேலைக்குப் போவான்; பணம் கிடைக்கும்; இன்னும் கொஞ்சம் வசதியா இருக்கலாம்...இல்லையா—''

''இங்கே ஒரு குறையும் இல்லையே எங்களுக்கு. நாங்கள் இருவர்தானே! உள்ளது போதும்..ஒரு குறையும் இல்லை..''

''ஆமாம், கிழவன், உன்னோட புருஷன், வேண ஆட் டம் ஆடினவனாமே..சொத்துகூடக் கொஞ்சம் இருந்ததாம்! தொலைத்துவிட்டானாமே...மானேஜர் ஒருநாள் பேசிக் கொண்டிருந்தார்...''

''ஆண் பிள்ளைகளோட சுபாவம்...சிலவேளைகளிலே அப்படி ஆகிவிடுது...''

''சரி, சரி! அதோ டீச்சர் குழந்தைகளோடு! கூப்பிடட் டுமா? பேசேன் அவரோட..நல்லவரு...எல்லோரிடமும் அன் பாகத்தான் பழகுவாரு...''

''இரும்மா...அவர் ஏன் இங்கே வரணும்...ஏம்மா, பச்சரிசி மாங்கா தர்ரேன், கொடுக்கறயா...வண்டிக்காரன் சம்சாரம் கொடுத்ததுன்னு சொல்லேன்...பச்சரிசி மாங்கா ரொம்பப் பிடிக்கும்...''

''டீச்சருக்கா...அது எப்படி உனக்குத் தெரியும்?''

''டீச்சருக்குன்னு சொல்லல்லேம்மா...யாருக்கும்தான் ...பச்சரிசி மாங்கான்னா ரொம்பப் பிடிக்கும்...பொதுவாகச் சொன்னேன்...''

''நான் எடுத்துக் கொண்டுபோய் கொடுக்கமாட்டேன். ஏதாவது தப்பான எண்ணம் வந்துவிடும்..கதைகளிலே படித்திருக்கிறேன்...ஒரு வாலிபனுக்கு ஒரு இளமங்கை இப்படி ஏதாவது கொடுத்தா, தப்பான எண்ணம் ஏற்பட்டுவிடும்... மேலும் அவர் எங்களிடம் சம்பளம் வாங்கிக்கொண்டு வேலை பார்க்கிற டீச்சர். இல்லையா...அவரை ஒரு வரம்போடு தானே வைத்திருக்க வேண்டும். இந்தப் பக்கம் வருகிறமாதிரி தெரிகிறது. நான் போய்விடுகிறேன்...நீ கூப்பிட்டு தாராளமா...நம்ம ஜெமினில் வேலை பார்க்கிறவர்தானே...கூப்பிட்டுப் பேசு; கொடு...''

''கோகிலா! எனக்கு ஒரு உதவி செய்வாயா? கேட்க கூச்சமாகக்கூட இருக்கிறது. ஆனால் என்ன செய்வது, வேறு யாரும் இல்லை...'' என்று ஒருநாள் பேச்சைத் துவக்கினாள் உமா, படித்துக் கொண்டிருந்த 'சிப்பிக்குள் முத்து'' என்ற கதைப் புத்தகத்தைத் தூர எறிந்துவிட்டு.

உமா, தன் மனதிலே சொக்கலிங்கத்தைப் பற்றிய எண்ணத்தை வளர்த்துக் கொண்ட பிறகு, எப்போதும் காட்டாத ஆர்வத்தைப் படிப்பதில்—(காதற் கதைகளை—மர்மக் கதைகளை) காட்ட ஆரம்பித்தாள்.

''நான் என்னம்மா உதவி செய்ய வேண்டும். உங்களுக்கு என்ன குறை இருக்க முடியும்'' என்று கோகிலா கேட்டாள், கவலை தோய்ந்தவளாய்.

''எனக்கு அவரிடம் பேசக் கூச்சமாக இருக்கிறதடி கோகிலா...''என்று சொல்லத் தொடங்கினாள் உமா. கோகிலா சிறிது உரத்த குரலிலேயே சிரித்தாள்.

''வேடிக்கைதானம்மா நீங்கள் சொல்வது. நீங்கள் இருவரும் பழகுவதையும் அடிக்கடி பேசிக் கொள்வதையும் பார்க்கிற யாரும் ஒரு பத்து வருடமாகவாவது பழகி இருக்க வேண்டும் என்று நினைப்பார்கள். அப்படி இருக்க, அவரிடம் பேச எனக்குக் கூச்சமாக இருக்கிறது என்கிறீர்களே?'' என்று கேட்டாள் கோகிலா.

''பேசுகிறேன் கோகிலம்! இல்லையென்று சொல்ல வில்லை. அவர் பேசப் பேசக் கேட்டுக்கொண்டே இருக்கலாம் போலத் தோன்றுகிறது. அவ்வளவு இனிமையாகப் பேசு கிறார். ஆனால் அவருடைய இரகசியத்தைக் கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டுமடி. அந்தப் பேச்சை மட்டும் எஃனால் பேசமுடியவில்லை. கூச்சமாக இருக்கிறது'' என்று உமா விளக்கம் அளித்தாள்.

கோபத்தை அடக்கிக் கொண்டு கோகிலா, ''என்னம்மா கேட்க வேண்டும் அவரிடம். என்னைக் காதலிக்கிறீர்களா- திருமணம் செய்து கொள்ளச் சம்மதிக்கிறீர்களா என்றா!'' என்று கேட்டாள்.

ஜெமீன் முடுக்குக் குறையாமல் பேசினாள் உமா.

''வலியச் சென்று என் காதலைக் கூறிட நான் என்ன சாமான்யக் குடும்பத்தவளா? கோகிலா! எங்கள் ஜெமீன் குடும்பத்துப் பெருமையை அறியமாட்டாயா! துடுக்குத்தன மாகப் பேசிவிட்டாயே! ஒரு பெண் தன் காதலைப் பற்றி ஆடவனிடம் பேசுவதுபற்றி இந்தப்புத்தகங்களில் எழுதியிருக் கிறார்கள். படிக்கும் போது எனக்குச் சிரிப்பாய் வருகிறது. நாதா! உங்கள் மீது நான் அடக்க முடியாத காதல் கொண்டு விட்டேன் என்று நான் போய் பேசுவேன் அல்லது யார் மூலமாகவாவது சொல்லி அனுப்புவேன் என்றா எண்ணிக் கொண்டாய். அது இந்த இடம் அல்ல'' என்றாள்.

உமாவுக்குக் கோபம் வருவது கண்டு கோகிலா மகிழ்ச்சி அடைந்தாள்.

இந்தக் கோபம் வளராதா என்றுகூட விரும்பினாள். மேலும் சற்றுக் கிளறிவிட எண்ணினாள்.

''இதென்ன வேடிக்கையாக இருக்கிறது, உங்கள் போக்கு! அவரை நீங்கள் பார்க்கும் பார்வை காதலைத்தவிர வேறு எதனைக் காட்டுகிறது. என்னிடமே மறைக்கப் பார்க்கி றீர்களே'' என்று சிறிதளவு குறும்புத்தனத்தைக் கலந்து பேசினாள்.

''கோகிலா! எனக்கு அவர் ஏற்றவர்தானா—இது பொருத்தமான சம்பந்தமா என்பதுதான் முக்கியம். நான் பெண்ணாகப் பிறந்தது எதற்கு? ஜெமீனுடைய பெருமையை பாழாக்கிக் கொள்ளவா! காதல்,அன்பு, பாசம்,பரிவு, பற்று, ஆவல், ஆசை என்று என்ன பெயரிட்டு வேண்டுமானாலும் அழைத்துக் கொள். எனக்குத்தேவை, கண் மூடித்தனமான காதல் அல்ல! என் தகப்பனார் கண் கலங்காமல், அவருக்குத் துளியும் தலை இறக்கம் ஏற்படாத விதமான சம்பந்தம். அதற்கு ஏற்ற பொருத்தம் இவருக்கு இருந்தால், நான் பாக்கியசாலி! ஆனால் அவர் சாமான்யர் என்பது உண்மையாகிவிட்டால், நான் அவரை மறந்துவிட வேண்டியது தான்.''

''அவர் ஜெமீன் குடும்பம் இல்லை என்று வைத்துக் கொள்ளுங்கள்—அப்போது...''

''அவருக்கு ஏற்றவளை அவர் அடைவார்; எனக்குத் தகுதியான மாப்பிள்ளையை அப்பா தேடித்தருவார்.''

''அவர் உங்களைப் பரிபூரணமாக நம்பிக் கொண்டிருக்கிறார்...என்று வைத்துக் கொள்ளுங்கள்.''

''அது அவர் செய்திடும் தவறு...நானா அதற்குப் பொறுப்பு...ஜெமீன் மாளிகையிலே இருந்து வருகிறாரே, இங்கு உள்ள நிலைமை, ஏற்படும் எண்ணம், மனப்பான்மை இவைகளை அவர் தெரிந்து கொள்ளாமலா இருந்திருப்பார். படித்தவர்.''

''அப்படியா அம்மா! மெத்த சந்தோஷம்...''

''இதில் உனக்கு என்னடி சந்தோஷம்...''

''ஐயோ, நீங்கள் தப்பாக அர்த்தம் செய்து கொண்டீர்களே. நான் சொல்ல வந்தது, வேறு சில பெண்களைப்போல காதலாகி, கசிந்து, கண்ணீர் மல்கி, இளைத்து, களைத்து எலும்புருவாகிப் போய்விடச் செய்யும் காதல் உங்களைப் பிடித்துக் கொண்டதோ என்னமோ என்று பார்த்தேன். அப்படி இல்லை என்பது புரிந்துவிட்டது. அதனால் மகிழ்ச்சி என்றேன்.''

''அதுவா! சரி, கோகிலா! சொல்ல எண்ணியதைச் சொல்லி விடுகிறேன். அவருடைய பிறப்பு வளர்ப்பு, குடும்ப நிலைபற்றி அவரிடம் கேட்க எனக்குக் கூச்சமாக இருக்கிறது. நீ அவரிடம் இதுபற்றித் தாராளமாகப் பேசலாமே. எப்படி யாவது அவரிடமிருந்து அந்த விவரத்தை மட்டும் கேட்டுத் தெரிந்து கொள்ளேன். நான் என் எதிர்காலத்தைத் தீர் மானித்துக் கொள்ள மிகவும் உதவியாக இருக்கும்.''

'ஆகட்டும்' என்று கோகிலா வாக்களித்தாள்.

சொக்கலிங்கத்தின் உண்மை நிலையைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதில் அவளுக்கும் நிரம்ப அக்கறை இருக்கத்தானே செய்யும்.

அவளுடைய எதிர்காலமும் அதைப் பொருத்துத் தானே இருக்கிறது.

'முயற்சிக்கிறேன்' என்று கூறிவிட்டாள். ஆனால் எப்படி என்று எண்ணும்போதே அவள் தலை சுற்றிற்று.

தனியாகச் சந்தித்து அவரிடம் பேச வேண்டும்.

தனியாகச் சந்திக்க முடியுமா? சந்தித்தால் அவரிடம் என்னென்ன பேசத் தோன்றிவிடுமோ?

என்ன நேரிட்டு விடுமோ என்பதை எண்ணிக் கொண்ட போது கோகிலா அச்சம் கொண்டாள்.

உமா, கணக்குப் பார்க்கிறாள். ஆகையால் பதறாமல் இருக்க முடிகிறது.

ஆனால் என் நிலை! நான் முழுக்க முழுக்க என் உள் ளத்தை அவரிடமல்லவா பறிகொடுத்துவிட்டிருக்கிறேன்.

அவரை நான் தனியாகச் சந்தித்தால்...என்பது பற்றி எண்ணிடும்போதே கோகிலாவின் உடலெல்லாம் பதறிற்று. ஆனால் இதழோரத்தில் ஒரு பொலிவு மலர்ந்தது.

வெந்த புண்ணிலே வேல் பாய்ச்சுவது போன்ற நிகழ்ச்சி களும் நடந்து விடுகின்றன. யாரும் திட்டமிட்டுச் செய்வ தல்ல. ஆனால் ஆயிரம் தேள் கொட்டுகிறது, அந்த நிகழ்ச்சி களின்போது.

சொக்கலிங்கத்துக்கு மகிழ்ச்சி யூட்ட வேண்டும் என்பதிலே அதிக அக்கரை காட்டும் ஜெமீன்தார் ஒரு நாள் குதிரைக் கொட்டிலுக்கே அழைத்துச் செல்கிறார், தன் குதிரைகளின் அருமையைக் காட்ட.

வண்டிக்காரன் வரவேற்கிறான் ஜெமீன்தாரரை! ஆனால் சொக்கலிங்கத்தையும் அல்லவா, வணங்குகிறான் சடையப்பன்.

''ஏலே சடையா! பம்பாயிலே இருந்து வாங்கினமே சவாரிக் குதிரை, அதைக் கொண்டுவா, மிஸ்டர் லிங்கம் பார்க்கட்டும்...''

''நானே போய்ப் பார்த்துவிட்டு வந்துவிடுகிறேனே.''

''வேண்டாம் மிஸ்டர் லிங்கம். குதிரை இலாயத்தைப் பயல்கள் சுத்தம் செய்தான்களோ இல்லையோ...அங்கே ஏன் நீங்க போகணும்...குமட்டும் சில வேளைகளில். அந்த இடத்திலேயே இருந்து இருந்து பழகிப் போனவங்களுக்கு ஒன்றும் இல்லை...நம்ப சடையனைப் போல சாரட் ஓட்டுவதிலே சடையனுக்குச் சமமா ஒருவரையும் சொல்ல முடியாது. தரமான ஆள். பொதுவா, வண்டிக் குதிரைகளைக் கூட சடையன்தான் கவனித்துக் கொள்வது...நல்ல உழைப்பாளி! அவனுக்கு ஏற்ற மனைவி...''

''காலமெல்லாம் உழைப்பு...ஓயாத வேலை...எல்லாம் எதற்காக...''

''யாரைப்பற்றிச் சொல்கிறாய் மிஸ்டர் லிங்கம்...''

''ஒரு ஆங்கிலக் கவி சொல்கிறார்—

ஓயாமல் உழைக்கின்றாய்
உன் மகனை ஆளாக்க
ஊர்மெச்சும் வாழ்வுதர
உருக்குலைய உழைக்கின்றாய்
பேர்சொல்லி மகன் வாழ்வான்.
பெருமைமிகும் என்றெண்ணி
பேய்மகனும் உனை மறந்தால்
நாய்மகனே ஆவான்காண்!

''அழகான கவிதை. இப்படிப்பட்ட கவிதைகளைக் குழந்தைகள் படிக்க வேண்டும்...''

''தந்தையிடம் மகன் காட்டவேண்டிய பாசம் பற்றி நிறையச் சொல்லித் தந்து கொண்டிருக்கிறேன்.''

''வந்துவிட்டது குதிரை—ஏய், சடையா! என்ன காலிலே இரத்தம் கசிகிறது...

''குதிரையை நான் பிடித்துக்கொள்கிறேன்...போய்க் கழுவி ஏதாவது மருந்து போட்டு...''

''பைத்யம் டீச்சர்! இப்படி ஒரு நாளைக்கு ஒன்பது தடவை காயம்படும், இரத்தம் ஒழுகும்...அது இவனையெல்லாம் ஒன்றும் செய்யாது...களிமண்ணோ, என்னமோ வைத்துக் கட்டுவான்...சரியாகிப் போகும்.''

''என்னிடம் மருந்து இருக்கிறது; கொண்டு வந்து கொடுக்கிறேன்...''

''வேண்டாம் தொரை! இது ஒண்ணுமில்லை...ஈ எறும்பு கடிக்கிறமாதிரி! ஒண்ணும் பண்ணாது.ஓட்டிப் பார்க்கறீங்களா குதிரையை...''

''இல்லை...எனக்கு நிம்மதியாக இல்லை...மருந்து வேண்டாமென்றா சொல்லுகிறீர்...''

''சடையா! பிடிடா! மிஸ்டர் லிங்கம், நம்ம குதிரை நல்ல 'ட்ராட்' போகும்...சும்மா இங்கேயே ஓட்டிக் காட்டுகிறேன் பார்க்கிறீரா...''

ஜெமீன்தார் குதிரை சவாரி செய்யும்போது சொக்கலிங்கம் தழுதழுத்த குரலில் பேசுகிறான் மெதுவாக.

''அப்பா! அப்பா! என்ன கொடுமை அப்பா இது!

தங்கள் உடலில் ஒழுகும் இரத்தத்தைக்கூடத் துடைக்கும் பாக்கியம் எனக்கு இல்லையே...பார்த்துக் கொண்டு, பதறாமல் இருக்கவேண்டி நேரிட்டுவிட்டதே அப்பா! நான் எப்படித் தாங்கிக் கொள்வேன்! மாளிகையின் கோலாகல வாழ்வு எனக்கு...குதிரைக் கொட்டிலில் நீங்கள்...நான் மகன்...மகனா அப்பா நான்! மாபாவி...!

''மகனே! மோசம் செய்துவிடாதே...தெரிவித்து விடாதே...என் திட்டத்தைக் கெடுக்காதே...ஜெமீன்தாருக்குத் துளிச் சந்தேகம் வந்தாலும் போதும்; தொலைத்துவிடுவார் தொலைத்து. நீ லிங்கம்...லிங்கம்...நான் சடையன்—வண்டிக்காரன்...மறந்துவிடாதே...ஆபத்தை மூட்டிக்கொள்ளாதே...''

''என்னால் இனியும் இவ்வளவு நெருப்பை நெஞ்சிலே தாங்கிக் கொண்டு இருக்க முடியாதப்பா...''

''மிஸ்டர் லிங்கம்...எப்படி ட்ராட்...ஏ ஒன்...இல்லையா...''

''ஏ, ஒன்...ஏ,ஒன்...அப்பா! அப்பா! இங்கே இருப்பதானால் இப்படித்தான் இருக்க வேண்டும் என்றால், வேண்டாமப்பா இந்த இடம்; இந்த வேலை! வேறு இடம்... தொலைதூரம் போய்விடலாம்...

''ஏ, சடையா! மடையா! ஓடிவாடா! குதிரை கட்டுக்கு அடங்க மறுக்கிறதே, தெரியவில்லையா...ஓடி...''

''மெள்ள...மெள்ள அப்பா! ஐயோ!...''

''விழுந்து தொலைத்தானா...மடையன்! துணைக்கு யாராவது வாலிபப்பயலை வைத்துக் கொள் என்றால் கேட்டால்தானே. மிஸ்டர் லிங்கம்! ரொம்ப நாளாகச் சொல்லுகிறேன். யாராவது உன்னுடைய சொந்தக்காரப் பையன் இருந்தால், கூடமாட உதவிக்கு வேலைக்கு வைத்துக் கொள் என்று, கேட்பதில்லை. சரி, சரி! குதிரையைக் கொண்டு போ!''

''பலமான அடிபட்டுவிட்டதுபோல இருக்கிறதே...''

''இல்லை, இல்லை! இலேசாக மரத்திலே உராய்ந்து கொண்டேன்.''

''கல் அடிபட்டிருக்குமோ, இரத்தம் கசிகிறதே...''

''கல்லாவது மண்ணாவது...கீழே விழுந்தால்கூட நமக்கு ஒன்றும் ஆகாது...இது என்ன ஓட்டை உடம்பா... வா, மிஸ்டர் லிங்கம்...ஏதாவது பழரசம் சாப்பிட வேண்டும் போல இருக்கிறது.

அன்றிரவெல்லாம் இரத்தக் கண்ணீர் வடிக்கிறான் சொக்கலிங்கம்.

என் எதிரில் என் அப்பாவை இழிவாக நடத்துகிறார் ஜெமீன்தாரர்!

என் எதிரில் என் அப்பா இடறிக் கீழே விழுகிறார்; அவரைத் தூக்கி நிறுத்தும் பாக்கியம் எனக்கு இல்லையே!

என் காதைத் துளைப்பது போலல்லவா ஜெமீன்தாரர் பேசுகிறார். காயம் பட்டால் என்ன, களிமண் வைத்துக் கட்டினால் போதும் என்று.

அவர்மீது என்ன குற்றம்! அவர் வண்டிக்காரனைப் பற்றிப் பேசுவதாக எண்ணிக் கொண்டுதானே பேசுகிறார். அந்த வண்டிக்காரர் என் தகப்பனார் என்பதைத் தெரிந்தா? இல்லையே! நான்தான் அதை மூடி மறைத்துவிட்டேனே, நான் உல்லாச புருஷனாக உலவ! என்னை உலகம் மன்னிக்குமா? என் உள்ளமே என்னைச் சுடுகிறதே— என்றெல்லாம் ஏங்கினான். வேதனை நாளுக்கு நாள் வளர்ந்தது; வெளியே சொல்லமுடியாததால், வேதனை இதயத்தையே பிய்த்துத் தின்னத் தொடங்கிற்று.

எத்தனை நாள்? இன்னும் எவ்வளவு காலம் இந்த நெருப்பாற்றிலே வீழ்ந்து தவிப்பது?

ஜெமீன்தாரரோ, வேறு எந்த வேலைக்கும் சொக்கலிங்கம் செல்ல அனுமதிக்க மாட்டார் போலத் தெரிகிறது. இலேசாக ஒரு எண்ணம் அவருக்கு அரும்புவதுகூடத் தெரிகிறது சொக்கலிங்கத்துக்கு.

உமாமகேஸ்வரியைத் தனக்குத் திருமணம் செய்து வைக்கும் எண்ணம்.

''எல்லாத் தகுதிகளும் இருக்கிறது, மிஸ்டர் லிங்கம்! பெற்றோர் பற்றி ஒரு தகவலும் சொல்ல மாட்டேன் என்கிறீரே ஏன்?'' என்று அடிக்கடி கேட்கிறார்.

பெற்றோரா! அதோ தோட்டத்தில்! உங்கள் வண்டிக் காரர்! என்று சொன்னால் போதும்; உள்ளபடி ஜெமீன்தார ரின் மண்டையே வெடித்துவிடும்— என்ற நிலைமை. இதுவும் புரிந்தது சொக்கலிங்கத்துக்கு.

சொக்கலிங்கம் அறியாமல், அவன் நடவடிக்கைகளைக் கவனிக்கத் தொடங்கிய கோகிலாவுக்கு மெள்ள மெள்ள ஒரு சந்தேகம் வளர்ந்தது. வண்டிக்காரன் குடிசைக்கு அவன்செல் வது ஏழை எளியோரிடம் உள்ள பரிவுகாட்டும் காரணத்தால் அல்ல; வேறு ஏதோ ஒரு பந்தம்—பாசம்—அவனை அங்கே இழுத்துச் செல்கிறது என்ற சந்தேகம்.

அவன் செல்லாத நேரமாகப் பார்த்து அதே குடிசைக்கு அவள் சென்று பேசிக் கொண்டிருக்கும் பழக்கத்தை உண் டாக்கிக் கொண்டாள்.

முதலிலே அவளிடம் தாராளமாகப் பேசத் தயங்கிய சொர்ணம், மெள்ள மெள்ள விவரம் பேச ஆரம்பித்தாள்.

விவரம் கூறுவதற்குப் பதிலாக, கோகிலத்திடம் சொக்க லிங்கத்தைப் பற்றிய பல விவரங்களைக் கேட்டுத் தெரிந்து கொள்ள ஆரம்பித்தாள்.

சொக்கலிங்கத்தைப் பற்றிய விவரம் எதைச் சொல்லும் போதும், சொர்ணம்மாளின் கண்களிலே கனிவு வழிந்தது; பேச்சிலே பாசம் ததும்பிற்று.

நேரடியாகவே கேட்டுவிடலாமா என்றுகூடக் கோகிலா நினைத்தாள். பிறகு அது தவறாக முடியும் என்று அஞ்சி விட்டுவிட்டாள். வேறு முறையைக் கையாண்டாள்.

குளிர் காற்று வீசும் நாட்கள். பலர் அந்தக் காற்றிலே அடிபட்டு, காய்ச்சலால்கூடத் தொல்லைப்பட்டுக் கொண்டு இருந்தார்கள்.

அந்தச் சமயமாகப் பார்த்து, கோகிலா, தலையில் சுற்றிக் கொள்வதற்கான ஒரு கம்பளித் துண்டினை சொர்ணத்தம்மாளிடம் கொடுத்துவிட்டு வந்தாள்.

இரண்டு மூன்று நாட்களுக்குப் பிறகு, அந்தக் கம்பளித் துண்டு சொக்கலிங்கத்திடம் இருக்கக் கண்டாள்; புன்னகை கொண்டாள். அவர் எனக்குத்தான்! எனக்கேதான்! என்று அவளுடைய இதயம் பாடலாயிற்று.

துப்பு ஓரளவு துலங்கத் தொடங்கிவிட்டதால் ஏற்பட்ட மகிழ்ச்சியுடன் கோகிலா மேலும் வேலை செய்தாள்; சொக்கலிங்கம் வண்டிக்காரன் மகன் என்பது அவளுக்குத் தெளிவாகிவிட்டது.

தான் அறிந்த இந்த இரகசியத்தை உடனே உமாவிடம் கூறிவிட வேண்டும்; உமாவின் மனதிலிருந்து சொக்கலிங்கம் அடியோடு தூக்கி எறியப்பட்டுப் போய்விடுவான்; பிறகு அவன் முழுக்க முழுக்க தனக்கே உரியவனாகிவிடுவான் என்று தோன்றிற்று. களிப்புக் கடலில் மூழ்கினாள்.

மறுகணம் யோசித்தாள். அவர், ஏதோ ஒரு மிக முக்கியமான காரணம் இல்லாமல், இப்படித் தன்னை யார் என்று காட்டிக்கொள்ளாமல் இருக்கமாட்டார். நாம் நமது சுயநலம் காரணமாக, அவசரப்பட்டு, இரகசியத்தை வெளியிட்டு, அவருடைய திட்டத்தைக் கெடுத்துவிடக் கூடாது என்ற எண்ணம் பிறந்தது.

ஆகவே பொறுத்திருக்க வேண்டும் என்று தீர்மானித்தாள்.

காலையிலே சென்று பறித்தெடுக்க வேண்டிய கனியின் சுவையைப் பற்றி இரவெல்லாம் சிந்தித்து மகிழ்ச்சியுடன் இருந்திடும் நிலையிலே, கோகிலா நாட்களை ஓட்டிக் கொண்டிருந்தாள்.

எல்லோரிடமும் முரட்டுத்தனமாக நடந்து கொள்ளும் காளிங்கராயர்கூட சொக்கலிங்கத்திடம் அன்புடன் பழகலானார்.

லலிதா மூலமாக அவருக்குத் தகவல் சிறிதளவு கிடைத்திருக்கவேண்டும், உமாவை லிங்கத்துக்கு மணமுடித்து வைக்கும் எண்ணம் ஜெமீன்தாரருக்கு ஏற்பட்டு இருப்பதுபற்றி.

வேடிக்கையாகப் பேசவும் பொழுதுபோக்குகளிலே பங்கு பெற்றுக் கொள்ளச் செய்யவும்கூடக் காளிங்கராயர் முயற்சித்தார். தன்னோடு சேர்ந்து உயர்ந்த பானம் பருகும்படியே அழைத்திடலானார்.

''மிஸ்டர் லிங்கம்! உண்மையாகவே பழக்கமில்லையா? சின்ன வயது முதலே வெள்ளைக்காரர் வீட்டில் வளர்ந்த தாகச் சொல்லுகிறார்கள்...''

''ஆமாம், ஜெமீன்தார் சார்! நான் அவர்கள் எதற்குப் பானம் பருகுகிறார்கள். எப்படிப் பருகுகிறார்கள் என்பதைப் பார்த்திருக்கிறேன். நமது நாட்டிலே குடிக்கிறார்களே அப்படியா அவர்கள்! தாங்களே எவ்வளவு சாப்பிடுகிறீர்கள், நிலை குலைந்து போகும் அளவு!''

''மிஸ்டர் டீச்சர்! இது எனக்குப் பிடிக்காது. குடிக்காதே, அது கெடுதல்—பாவம்—என்று சொல். அது பொருளுள்ள பேச்சு! ஆனால் குடி. அளவோடு குடி, நிலை குலையாதபடி பார்த்துக் கொள் என்று சொல்லாதே. அது முடியாது; கூடாது. எதற்குக் குடிக்கிறோம்? எல்லாவற்றையும் மறந்து ஒரு புதிய இன்ப உலகத்திலே உலவ. எப்போது அந்த இன்பலோகம் தெரியும்? இந்த லோகத்தைப் பற்றிய நினைப்பே அடியோடு போனால்! இந்த லோகத்து நினைப்பு எப்படிப் போகும்? நிறைய பருகினால்! எப்படி என் வாதம்!

''பிரமாதமான பேச்சு—ஆனால் அந்த இன்ப லோகம் உங்க, மனைவி லலிதாம்பிகாவின் கண்ணொளியில், புன்னகையில் இல்லையா?

''கெட்டிக்கார ஆசாமி! உன்னிடம் சொல்வதிலே என்ன தவறு! லலியின் கண்களில் நான் இன்ப லோகத்தைக் கண்டதுண்டு, முன்பு; கொஞ்ச நாளில் அது மறைந்து விட்டது.

''உமது குழந்தைகள் ராமு, சோமு, ரமா இவர்களின் சிரிப்பிலே காணலாமே...''

''அதை எல்லாம் காணும் நிலையில் என் கண்கள் இல்லை...''

''அதைத்தான் சொல்கிறேன். குடி உங்களுக்கு புதிய இன்ப லோகத்தைத் தரவில்லை; இருந்த இன்ப லோகத்தைக் காணும் சக்தியைப் பறித்துவிட்டது.''

''தீர யோசித்துப் பார்க்க வேண்டும். மூளை சுறுசுறுப்பாக வேலை செய்ய வேண்டும்; அதற்கு மருந்து உள்ளே இருக்கிறது; நீ வெளியே போ! அனுபவிக்கத் தெரியாத உனக்கு இங்கு என்ன வேலை! போ! போ! இளநீர் குடி! பார்த்திருக்கிறேன்...அந்த வண்டிக்காரக் கிழவன் கொடுத்து நீ ஆனந்தமாகப் பருகுவதை!

ஜமீன்தாரின் மனதிலே புது எண்ணம் வளர்ந்ததும் சொக்கலிங்கத்துக்கு மேலும் மேலும் மதிப்பளிக்கலானார்.

தம்முடன் வியாபாரத் தொடர்பு கொண்ட பெரிய வெள்ளைக்காரர்களுடன் பழகும் வாய்ப்பை வலிந்து ஏற்படுத்திக் கொடுத்திடலானார்.

அப்படிப் பழகுபவர்களும், சொக்கலிங்கத்தின் நுண்ணறிவு, நேர்மை ஆகியவற்றைக் கண்டு அவனிடம் பேசுவதைச் சுவையுள்ள பொழுது போக்காக்கிக் கொண்டனர்.

அவ்விதம் அடிக்கடி சொக்கலிங்கத்திடம் வந்து பேசுபவர்களில் நார்மன் என்பவர் முக்கியமானவர். அவர் சம்பந்தப்பட்ட கம்பெனியில்தான் ஜமீன்தாரருக்கு அதிகத் தொடர்பு.

டேவிட் துரையிடம் பாடம் கேட்டவர் என்பதறிந்து, சொக்கலிங்கத்திடம் நார்மன் பல பிரச்சனைகளைப்பற்றி விவாதிப்பார். சொக்கலிங்கம் தெளிவாகவும் கனிவாகவும் தன் கருத்துக்களை எடுத்துச் சொல்லுவான். நார்மன் அந்தப் பண்பைப் பெரிதும் பாராட்டி வந்தார். பலமுறை விவாதம் நடைபெற்று வந்தது.

''மிஸ்டர் நார்மன்! உண்மை பேசுவதை நீங்கள் வர வேற்பீர்கள் என்று நம்புகிறேன். நீங்கள் எங்கள் நாட்டிலே வந்திருப்பது நாகரிகத்தைப் பரப்ப என்ற பேச்செல்லாம் பசப்பு என்பது உங்களுக்கே தெரியும். வியாபாரக் கொடி முதலில்! அதைத் தொடர்ந்து அரசியல் கொடி! அவ்வளவு தான். நாகரிகம் பரப்ப வந்தோம் என்பதெல்லாம் உண்மை அல்ல...''

''நாங்கள் வந்ததால் எத்தனையோ புதுப்புது முறைகள் உங்களுக்குக் கிடைக்க வில்லையா?''

''கிடைத்துள்ளன. அதுபோல உங்களுக்குப் பல நாக ரிகச் சாதனங்கள் வேறு நாடுகளிலே இருந்து கிடைக்க வில்லையா?மேற்பூச்சான நாகரிகமாக இருந்தாலும்சரி,புதுக் கருத்துப் புரட்சியைக் காட்டுவதாக இருந்தாலும், அவை காலம் தருவது; எந்த ஒரு நாடும் தருவது அல்ல.''

''மிஸ்டர் லிங்கம்! அதை நான் ஒப்புக் கொள்கிறேன். ஆனால் நீங்கள் இதை ஒப்புக் கொள்வீர்கள் என்று நம்பு கிறேன். நீங்களாக நாடி, தேடி, நாகரிகத்துக்கான முறை களை உண்டாக்கிக் கொள்ளவில்லை.'

''நாகரிகம் என்பதற்கு நம்ம ஜெமீன்தாராின் ஆடம் பர உடையும், அவருடைய மருகர் பருகும் பானங்களும், ஜெமீன் சீமாட்டிகள் வாசிக்கும் பியானோவும்தான் அடை யாளம் என்று கூறத்துணிகிறீர்களா மிஸ்டர் நார்மன்? இவை களெல்லாம் புறத்தோற்றங்கள். உங்களுடைய நாட்டிலேயே நடை உடை பாவனைகளில் எத்தனையோ விதமான, மாறு தல்கள் ஏற்பட்டன. உங்கள் எலிசபெத் மகாராணியார் காலத்து உடை! ஏ,அப்பா! இப்போதுள்ள இங்கிலீஷ் பெண் களுக்கு எவ்வளவு அருவருப்பாக இருக்கும், உங்கள் எட்டா வதுஹென்றி செய்துகொண்ட கோலாகலத்திருமணங்களும், ஒவ்வொரு மனைவியையும் தேம்ப விட்டதும் திண்டாட விட்டதும்! இப்போதுள்ள ஆங்கில நாட்டு இளைஞர்களை வெட்கித் தலை குனியச் செய்யுமே.''

''ஒப்புக் கொள்கிறேன். ஆனால் நாங்கள் சேற்றிலே அமிழ்ந்துவிடுவதுபோல இருந்தவிடவில்லை—''

''அது ஒருவகையில் ஒப்புக் கொள்ளத்தக்கதே. எங்கள் நாட்டின் கருத்து வளர்ச்சியில் சில நூற்றாண்டுகளாக ஒரு தேக்கம் ஏற்பட்டுவிட்டது. ஆனால் நார்மன்! உங்கள் நாட்டவர் ஊர் அமைக்கத் தெரியாமல் இருந்த நாட்களிலேயே இங்கு, பூம்புகாரும், மதுரையும் உறையூரும் பிறவும் எழிலோடு இருந்தன என்பதை மறந்து விடாதீர்.''

''வெளி உலகத் தொடர்பு கொள்ளுவதில் ஆர்வம் காட்டவில்லை...''

''தவறான கருத்து; தூரக் கிழக்கு நாடுகளிலெல்லாம் காணலாம். நாங்கள் கொண்டிருந்த வெளியுலகத் தொடர்பின் சின்னங்களை.''

''லிங்கம்! ஒரே அடியாக உங்கள் நாட்டைப் புகழ்ந்து விடுகிறீர்.''

''தாங்கள் எங்கள் நாட்டிலே எதுவுமே இருந்ததில்லை! எல்லாம் நீங்கள் கொண்டு வந்து கொடுத்த பிச்சை என்று கூறும் விதமாகப் பேசியதால் நான் எங்கள் நாட்டுப் பழம் பெருமைகளைச் சொன்னேன்...அதேபோது இங்கே உள்ள குறைபாடுகளை நான் மறந்துவிடவில்லை.''

''அதைக் கேட்க நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். அந்தக் குறைபாடுகளைப் போக்க நீங்கள் எங்களைப் பயன்படுத்திக் கொள்ளலாமே...''

''அதற்கு எங்கே நீங்கள் பயன்படுகிறீர்கள்? ஆடம்பரமாக வாழவும், ஆடிப்பாடிக் களித்திடவும், அலங்காரங்கள் செய்து கொள்ளவும் கற்றுக் கொடுப்பதிலே உங்களுக்குள்ள அக்கரை, மேனாட்டின் உண்மையான அறிவுத் தெளிவை நாங்கள் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதிலே இல்லையே.''

''ஆபத்தான வேலையில் அல்லவா ஈடுபடச் சொல்கிறீர். நாங்கள் எதையாவது செய்ய ஆரம்பித்து, உங்கள் மக்கள் மதத்துக்கு ஆபத்து என்று கூவத் தொடங்கி ஒரு கொந்தளிப்பு ஏற்படவேண்டுமா—''

''உள்ளதைச் சொன்னால் எங்கே கொந்தளிப்பு ஏற்பட்டு விடுமோ! நம்முடைய ஆட்சிக்கு ஆபத்து வந்துவிடுமோ என்று எண்ணிச் சும்மா இருக்கிறீர்கள் மிஸ்டர் நார்மன்! சுரண்டிக் கொண்டு போகிறவரையில் இலாபம் என்ற நோக்கத்துடன்— உண்மைதானே?''

இரகசியத்தைத் தான் தெரிந்து கொண்டிருப்பதைச் சொக்கலிங்கத்துக்குப் படும்படியாக செய்துவிட வேண்டும் என்ற ஆவல் கோகிலாவை வாட்டியபடி இருந்தது. ஒரு நாள் அதையும் ஜாடையாகக் கூறுவதற்கு ஒரு வாய்ப்புக் கிடைத்தது. உமா அந்த வாய்ப்பை உண்டாக்கி வைத்தாள் — தனக்காக என்று எண்ணிக்கொண்டு.

சொக்கலிங்கம் ஏதோ எழுதிக் கொண்டிருக்கும்போது கூடத்தின் மற்றோர் பக்கமாக உலவிக் கொண்டே உமா கூறினாள்: ''கோகிலா! நான் படித்து முடித்த கதை மிகச் சுவையானது. அதிலே வருகிற கதாநாயகன், ஒரு சிற்றரசன்! ஆனால் தனக்குப் பிடித்தமில்லாத பெண்ணைத் தன் தலையில் கட்டிவிடுவார்கள் என்ற பயம் காரணமாக, தனக்கு மூளைக் கோளாறு இருப்பதாக நடித்துக் கொண்டிருக்கிறான்...'' என்றாள்.

''ஆமாமம்மா! ஆனால் அந்தவிதமான தந்திரம் கடைசிவரையில் பலன் தருவதில்லை'' என்றாள் கோகிலா.

''தெரியாமலா சொன்னார்கள்—கெட்டிக்காரன் புளுகு எட்டே நாள்'' என்று கூறிக்கொண்டே உமா சிரித்தாள்.

''எவ்வளவுதான் தங்களை மறைத்துக்கொண்டு உலவினாலும், இரகசியம் ஒருநாள் இல்லாவிட்டால் மற்றோர் நாள் வெளிப்பட்டுப் போகமலா இருக்கும்'' என்று சிறிதளவு மிரட்டும் குரலிலேயே பேசினாள் கோகிலா.

''ஏதேது! பெரிய இரகசியத்தை எல்லாம் கண்டு பிடித்து விடக்கூடிய சாமர்த்தியக்காரிபோலப் பேசுகிறாயே!'' என்று கேட்டாள் உமா!

''வேடிக்கைக்குச் சொல்லவில்லை அம்மா! எவ்வளவு திறமையாக மூடி மறைக்கப்பட்ட இரகசியத்தையும் ஒரு சிறிய கம்பளித் துண்டினாலே கண்டுபிடித்து விடலாம்; மந்திரம் போட்ட கம்பளித் துண்டு'' என்று கோகிலா கூறிவிட்டு, சொக்கலிங்கத்தை கவனித்தாள்.

அவன் ஒரு இலேசான புன்னகையுடன் அவளை ஒரு கணம் பார்த்துவிட்டு அந்த இடத்தைவிட்டு எழுந்து சென்று விட்டான்.

இரு மங்கையரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண் டனர்; வெவ்வேறு விதமான எண்ணங்கள் அந்த இருவர் உள்ளங்களிலும் உலவின.

சில நாட்களுக்குப் பிறகு பேரிடி விழுந்தது, கோகிலா கட்டிய மனக்கோட்டையில்.

ஜெமீன்தாரர், பல ஆண்டுகளாக இருந்து வந்த மானே ஜரை நீக்கிவிட்டார்.

பல ஆண்டுகளுக்குப் பணியாற்றியதற்காகச் சிறிதளவு பணம் கொடுத்தார்; வேலையிலிருந்து நீக்குவதனால் வந்த வேதனை மானேஜரை வாட்டிவிட்டது.

என் தெய்வம் இருக்கும் இடத்தைவிட்டு என்னைத் துரத்துகிறார்களே என்று தனக்குள் கூறிக்கொண்டுகோகிலா குமுறினாள்.

உமாவின் தயவைத் தேடி இந்த ஆபத்தைப் போக்கிக் கொள்ளலாம் என்று அங்கு சென்றாள்.

''எல்லாம் உன் நன்மைக்காகத்தான் இந்த ஏற்பாடு. உன் அப்பா கெட்டிக்காரர். எந்த ஜெமீனிலும் வேலை கிடைத்துவிடும். பயப்படாதே. நீ இங்கே இருப்பது ஜெமீன் தாரர் போட்டிருக்கும் திட்டத்தைக் கெடுத்துவிடும் என்று பயந்துதான் உங்களை வெளியேற்றுகிறார்' என்றாள் உமா.

விவரம் கேட்டதற்கு உமா கூறியே விட்டாள். சொக்க லிங்கமும் நீயும் பார்த்துக் கொள்கிற பார்வை அப்பாவுக்குச் சந்தேகத்தை உண்டாக்கிவிட்டது என்று.

தான் அறிந்த உண்மையை அப்போது சொல்லிவிட வேண்டும் என்று கோகிலா துடியாய்த் துடித்தாள். யாரோ இருமும் சத்தம் கேட்டது. சொக்கலிங்கம் சற்றுத் தொலைவிலே இருந்து கொண்டு, 'அமைதியாக இரு' என்று ஜாடை காட்டுவதைக் கண்டாள்.

மானேஜர், தன் குடும்பத்துடன் ஜெமீன் கிராமத்தை விட்டுப் புறப்பட்டுப் போக ஏற்பாடாகிவிட்டது. ஜெமீன் தாரருடைய பெட்டி வண்டியே மானேஜர் ரயிலடி செல்லத் தரப்பட்டது. சிபாரிசுக் கடிதம்கூடக் கொடுத்திருக்கிறார். சீராளூர் ஜெமீனுக்கு என்று வேலையாட்கள் பேசிக் கொண்டனர்.

விடிந்ததும் சென்றாக வேண்டுமே என்ற கவலை குடையும் மனதுடன், கடைசியாக ஜெமீன் தோட்டத்தைப் பார்த்துவிட்டு வருவதாகச் சொல்லிவிட்டுப் புறப்பட்டாள் கோகிலம்.

எப்படியாவது சொக்கலிங்கத்தைப் பார்த்துவிடலாம் என்ற ஆவல்தான், உண்மையான காரணம்.

சொக்கலிங்கமும் அதே மனநிலையில் அவன் தோட்டத்தில் உலவிக் கொண்டு இருந்தான். அவன் நெஞ்சத்திலே அவளைப் பற்றிய நினைவுதான்!

அவள் வரக்கண்டான்! தாவிச் சென்று அவள் கரங்களைப் பற்றிக் கொண்டு, தோட்டத்தின் கடைசிப் பகுதிக்கு அழைத்துச் சென்றான்.

காற்றடித்தது; பூக்கள் உதிர்ந்தன!

எங்கோ குயில் கூவிடும் இனிய நாதம் கேட்டது.

சொக்கலிங்கம், கோகிலாவின் கண்களைத் துடைத்தபடி, ''திருமண வேளையில் கண்ணீர் பொழியலாமா?'' என்று கேட்டான்.

''நமக்குத் திருமணமா? உண்மையாகவா? ஏதாவது கனவா?'' என்று தழதழத்த குரலில் கோகிலா கேட்டாள்.

தன் சட்டைப் பையில் வைத்திருந்த கம்பளித் துண்டை எடுத்துக் காட்டி, ''இந்தக் காதற் பரிசுமீது ஆணை. கோகிலம்! நமக்குத் திருமணம் ஆகிவிட்டது'' என்றான்.

அவன் பாதங்களைத் தொட்டுத் தன் கண்களிலே ஒற்றிக் கொண்டாள், கோகிலம்.

''திட்டம், பாதி அளவுதான் நிறைவேறியிருக்கிறது, கோகிலம்!'' என்றான் சொக்கலிங்கம்.

''காலமெல்லாம் நான் உங்களுக்காகக்காத்திருப்பேன்'' என்றாள் கோகிலா.

அவன் அவளை அணைத்துக் கொண்டான். ஒரு புதிய இன்ப லோகத்திற்கு இருவரும் சென்றனர்.

குதிரை வண்டி உருண்டோடி வந்திடும் சத்தம் கேட்டது. இருவரும் நிஜ உலகு திரும்பினர்.

வெள்ளைக்காரர்கள்கூட வியந்துப் பாராட்டும்படியான அறிவுத் தெளிவுடன் சொக்கலிங்கம் இருப்பது காணக் காண ஜெமீன்தாரர் இப்படிப்பட்டவரைத் தமது மாளிகையிலே இருந்திடச் செய்வது தமது ஜெமீனுக்கே தனிக் கௌரவம் என்று எண்ணி மகிழ்ந்தார்.

மகிழ்ச்சி அதிகமாக ஏற்படும்போதெல்லாம் ஜெமீன்தாரர் விசேஷ விருந்துக்கு ஏற்பாடு செய்வது வாடிக்கை. அந்த விருந்திலே விசேஷம் என்னவென்றால் குடும்பத்தார் தவிர வெளியார் யாரும் அதிலே கலந்து கொள்ள மாட்டார்கள்.

அத்தகைய விருந்தொன்று நடந்து கொண்டிருந்தது.

ஜெமீன்தாரர் மிக்க மகிழ்ச்சியாக இருந்தார்.

பல விஷயங்களைப்பற்றி சொக்கலிங்கத்திடம் பேசி மகிழ்ந்தார்.

மாடிக் கூடத்திலே நடைபெற்றுக் கொண்டிருந்தது விருந்து.

லலிதா, பலகணி வழியாக வெளிப்புறத்துக் கட்சிகளைப் பார்த்துக் கொண்டிருக்கையில், 'ஓ' வென்று அலறினார்கள். பதறினர் அனைவரும்.

சொக்கலிங்கம், லலிதா பார்த்த பக்கம் பார்த்தான்; பயங்கரமான காட்சி தென்பட்டது.

லலிதாவின் மூன்றாவது குழந்தை நாலு வயது நிரம்பாதவன் தத்தித் தத்தி நடந்து செல்கிறான்; துணை யாருமில்லை.

எதிர்ப்புறமிருந்து புதிதாக வாங்கி வரப்பட்டிருந்த முரட்டுக் குதிரை தூசி கிளப்பிக் கொண்டு பாய்ந்தோடி வருகிறது.

எல்லோரும் அலறினர்—என்ன செய்வது என்று தெரியாமல்.

சொக்கலிங்கம் பலகணி வழியாக வெளியே தாவி, தண்ணீர்க் குழாயைப் பிடித்துக் கொண்டு, 'பரபர' வெனக் கீழே சரக்கு மரத்தில் இறங்குவதுபோல இறங்கி, கண் மூடிக் கண் திறப்பதற்குள் பாய்ந்தோடிச்சென்று குழந்தையைத் தூக்கிக் கொண்டு மற்றோர் புறம் பாய்ந்து விட்டான். குதிரை நாலு கால் பாய்ச்சலில் சென்றது.

குழந்தையை, அவ்வளவு துணிவுடனும் சாமர்த்தியத்துடனும், சொக்கலிங்கம் தூக்கிக் கொண்டிராது போயிருப்பின்...!

நினைக்கவே நடுக்கம் எல்லோருக்கும்.

'ஆண்டவனே! அட, என் கண்ணே ரமா!' என்று தாய்ப் பாசம் வழிய வழியக் கூவிக்கொண்டே லலிதாம்பிகா சென்று குழந்தையை சொக்கலிங்கத்திடமிருந்து வாங்கிக் கொண்டு உச்சிமோந்து முத்தமிட்டார்கள்.

ஜெமீன்தாரா கட்டித் தழுவிக் கொண்டார் சொக்கலிங்கத்தை.

காளிங்கராயர், முதுகைத் தட்டிக் கொடுத்துப் 'பலே!' என்றார்.

''ஏதாவது நேரிட்டு விட்டிருந்தாலும், என்ன செய் திருப்பேன் தெரியுமா? இந்த வேலைக்காரப் பயல்கள் அவ் வளவு பேரையும் சவுக்கால் அடித்திருப்பேன்.'' என்றார் ஜெமீன்தாரர்.

''சவுக்குக்குத்தான் கேடு! சுட்டுத் தள்ளிவிட வேண்டும்'' என்றார் காளிங்கராயர்!

''குழந்தையைக் காப்பாற்றிய மிஸ்டர் லிங்கத்தைப் பாராட்டாமல், வீரம் பேசுகிறீர்களா, வீரம்'' என்று கூறிவிட்டுத் தன் கணவரை சுட்டுவிடுவதுபோல பார்த்தாள் லலிதா.

உமா மகேஸ்வரி, கேலிப் புன்னகை செய்தாள்.

'சரி, சரி! நல்லதே நடக்கும் நல்லவர்களுக்கு; விருந்து நடக்கட்டும்! மறுபடியும் எல்லோருக்கும் அல்வா!' என்று உத்திரவிட்டார் ஜெமீன்தாரர்.

வீரம், தீரம் ஆகியவை மேட்டுக் குடியினரிடம் மட் டுமே இருக்கும் என்ற அழுத்தமான நம்பிக்கை கொண்ட வர் ஜெமீன்தாரர்.

நல்ல குடியில் பிறந்தவர்கள் மட்டுமே, ஆபத்தைத் துச்சமென்று எண்ணுவார்கள் என்பதிலே அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டவர். ஏழைகள் பணமில்லாதவர்கள் மட்டுமல்ல, இப்படிப்பட்ட பண்புகளும் அவர்களிடம் கிடையாது' என்பது அவர் கருத்து.

உயிர் காத்த உத்தமனாக சொக்கலிங்கம் இருப்பதற் குக் காரணம், அவன் உயர்குடியில் பிறந்தவன் என்பதுதான் என்ற தம்முடைய தத்துவத்தை விளக்க ஆரம்பித்தார் ஜெமீன்தாரர்.

''ஆயிரம் சொல்லுங்கள்—எல்லோரும் சமம்—அனை வரும் மனிதரே—மனிதர் யாவரும் கடவுளின் பிள்ளைகளே என்றெல்லாம் பேதம் இருக்கத்தான் செய்கிறது...''

''பணக்காரன் ஏழை என்ற பேதம்தானே''—

''அதை நான் பெரிதாகக் கருதவில்லை—பணம் தேடிக் கொள்ளலாம்; இழந்தும் விடலாம்...நான் சொல்வது பண்பு ...நல்ல குடியிலே பிறந்தவரின் பண்பு...மற்றவர்களுக்கு அந்தப் பண்பு இருப்பதில்லை.''

''ஆமாமாம்! நற்குடிப் பிறந்தவர்கள் என்பது பார்த் தாலே தெரிந்து விடுமே.''

''பேச்சு—நடவடிக்கை—எல்லாவற்றிலும் அந்த முத் திரை விழுந்திருக்கும்.''

''இதோ, மிஸ்டர் லிங்கத்தை எடுத்துக் கொள்ளுங் கள்...''

''இத்தனைப் பெரிய குழந்தையை எடுத்து வைத்துக் கொள்ள யாரால் முடியும்...''

''முடியும்...என் தாயாரால் முடியும்...''

''இதுதான் பண்பு! நற்குடி பிறந்தோர் மட்டுமே பெறக்கூடிய பண்பு. இதனை விலைகொடுத்து வாங்க முடி யாது. கடலில் முத்து விளைவது போல இது தன்னாலே விளைவது; நற்குடி என்ற வயலில்.''

''அப்பா இன்று கவிதா நடையில் அல்லவா பேசு கிறார்கள்...!''

''களிப்பு மிகுந்திடும் போது கவிதை தன்னாலே சுரக் குமாமே...''

''என் பேரப்பிள்ளை குதிரையின் காலின்கீழ் சிக்கிக் கொள்ளாமல் மிஸ்டர் லிங்கம் காப்பாற்றினாரே அது அவரு டைய ஆற்றலை, தைரியத்தைக் காட்டிற்று என்றுதான் எல்லோரும் பாராட்டுவர். நான் சொல்கிறேன், குழந்தைக்கு ஆபத்து என்பது தெரிந்த உடன், காப்பாற்றியாக வேண் டும் என்ற உணர்வு வந்ததே, அது பண்பு—அதைத்தான் நான் போற்றுகிறேன். அந்தப் பண்புதான் நற்குடி பிறந்த தால் வருவது. முரட்டுக் குதிரைகளை அடக்க வலிவுள்ள எந்த வேலைக்காரனாலும் முடியும். சடையன் அடக்காத குதிரையா! ஆனால் அது வலிவைக் காட்டுகிறது, உணர்வை

அல்ல. உடனே ஓடிச் சென்று காப்பாற்ற வேண்டும் என்ற உணர்வு எல்லோருக்கும் வருவதில்லை; இருப்பதில்லை. மிஸ்டர் லிங்கம் பண்பாளர்; நற்குடி பிறந்தவர். எப்போது கேட்டாலும் சொல்ல மறுக்கிறார், தமது பெற்றோர் யார் என்பதை. அவர் சொல்லத் தேவையே இல்லை. இன்றைய செயல் அவர் எப்படிப்பட்ட உயர்ந்த குடும்பத்தில் உதித்தவர் என்பதைக் காட்டிவிட்டது. இத்தகையவரை மகனாகப் பெற்ற தாய் வாழ்க! நீடூழி வாழ்க! அவளுக்கு என்னுடைய வணக்கம்!''

அப்போது வெளியே சென்று, வந்த காளிங்கராயர், ''இடியட், சுத்த முட்டாள்களை வேலைக்கு வைத்துக் கொண்டால் இப்படித்தான்...'' என்று கூறுகிறார்.

''என்ன இது, ரசமான கட்டத்தில் வந்து கெடுக்கிறீர். அப்பா எவ்வளவு உருக்கமாகப் பேசிக் கொண்டிருந்தார்..''

''பேசிக் கொண்டிருக்கட்டும் உருக்கமாக, சுவையாக.. அவருடைய முட்டாள் வேலையாட்கள் குழந்தைகளை குதிரைக் காலின் கீழ் போடட்டும்.''

''சின்ன ஜெமீன்தாரரை ஏன் குதிரை மிதிக்க வந்தது...விசாரித்தீர்களா...''

''யாரை விசாரிப்பது...குழந்தையைக் கவனித்துக் கொள்ளும் ஆயாவை கேட்டேம்...விளையாட்டு சாமான் கொண்டு வர உள்ளே போய் வருவதற்குள் இந்த விபரீதம் நடந்து விட்டதாம்.''

''அவ்வளவுதான் சொன்னாளா அந்தக் கள்ளி...இதுகள் இந்த வேலைக்கார கழுதைகள் ஒரே கூட்டு. ஒருவரை ஒருவர் காட்டிக் கொடுப்பதில்லை, ஒப்பந்தம், நடந்தது அது அல்ல. இந்த ஆயா உள்ளே போனாள்..விளையாட்டுச் சாமான் கொண்டுவர அல்ல...புகையிலை எடுத்து வர...''

''புகையிலையா...யாருக்கு...''

''அப்படிக் கேளுங்கள்...அந்தக் கிழவி இருக்கிறாளே வண்டிகாரன் சம்சாரம் அவளுக்கு...''

''புகையிலை கேட்டால் என்ன, கொடுத்தால் என்ன, அதிலே என்ன குற்றம் காண்கிறீர்...''

''அதிலே குற்றம் காண நான் என்ன முட்டாளா? இவள் போனாளே புகையிலை கொண்டு வர, அப்போது குழந்தையைப் பார்த்துக் கொள்ளும்படி வண்டிக்கார கிழவியிடம் சொல்லிவிட்டுப் போனாள்...''

''ஜாக்கிரதையாகத்தான் ஆயா நடந்துகொண்டிருக்கிறாள்''.

''இவள்? குழந்தையைக் கவனித்துக் கொண்டிருக்க வேண்டும் அல்லவா, செய்தாளா? செய்திருந்தால், குழந்தை தத்தித் தத்தி நடந்து செல்லுமா?—குதிரை வருவது தெரியாமல் இவள் என்ன செய்தாள்? குழந்தையை விட்டுவிட்டு இவளும் போய்விட்டாள். எங்கே? கேட்டேன். சுண்ணாம்பு எடுத்துவரச் சென்றாளாம்.''

''குழந்தையைக் கவனித்து கொள்ள வேண்டுமே என்ற பொறுப்பு உணர்ச்சி இருந்ததா? எப்படி இருக்கும்? நற்குடியில் மட்டுந்தானே அத்தகைய பண்பு இருக்க முடியும்? ''கிழவியைப் பிறகு கவனித்துக் கொள்ளலாம். இப்போது மகிழ்ச்சியான நேரம். எங்கள் குலக் கொடியை இந்தக் குணவான் காப்பாற்றிய நேரம். அவருடைய நற்பண்புகளுக்காக நாம் எல்லோரும் அவருக்கு நம்முடைய பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்ளும் நேரம்.''

''கம்பெனி பெரிய துரை வந்திருக்கிறார் தங்களைக் காண!''

''எல்லாச் சந்தோஷமும் ஒரே நேரத்தில் வருகிறது... நல்ல நாள் இன்று...அழைத்துவா! வருக! வருக! நல்வரவு ஆகுக!

''விருந்தும் விழாவும் நடக்கும்போது வந்து சேர்ந்தேன்...அதிர்ஷ்டக்காரன்...யாருக்குப் பிறந்த நாள்...''

''பிறந்த நாள் விழா அல்ல...இதோ மிஸ்டர் லிங்கம்.. இவருக்குத்தான் பாராட்டு...இவர் உங்களிடம் எப்போதும் வாதாடுவார்...மறுத்துப் பேசுவார். அதனாலேயே இவர் நல்லவர் அல்ல என்று எண்ணிக் கொள்ளக் கூடாது.''

''நான் அவரைப் பற்றி என்ன எண்ணிக் கொண்டு இருக்கிறேன் என்பது கிடக்கட்டும். இவர் பாராட்டப்பட வேண்டி ஏற்பட்ட காரணம்?''

''இன்று என் பேரக் குழந்தை குதிரையின் காலின்கீழ் சிக்கிக் கொள்ள இருந்தது. தக்க சமயத்தில் இவர் பாய்ந்து சென்று காப்பாற்றினார்.''

''அப்படியா! என் பாராட்டுதல்! மிஸ்டர் லிங்கம் எப்போதுமே பிறருக்கு உதவி செய்வதைத் தமது இயல்பாகக் கொண்டவர். அவருக்காக நடத்தப்படும் விழாவிலே கலந்து கொள்வதிலே எனக்கும் மகிழ்ச்சி. ஒரு விதத்தில் எனக்கும் அவர் டீச்சர்! ஆமாம்! இந்த அளவு நான் தமிழ் பேசுவது அவரால்தான்...அவர் என்னிடம் வாதாடுவார்; நான் சொல்லுவதை மறுப்பார். கோபிப்பார். எல்லாம் சரி. அதனாலே எனக்கு மகிழ்ச்சி...கோபம் அல்ல. தலையாட்டிகள் வெறும் அடிமைகள். அவர்களை எந்த நாட்டிலும் மதிக்க மாட்டார்கள். இவர் உண்மைக்காக—தமக்குச் சரி என்று பட்ட உண்மைக்காக—தைரியமாக வாதாடுவார். அதனாலேயே எனக்கு இவரிடம் தனியான மதிப்பு...''

''அப்பா! இப்போதுதான் என் மனம் சாந்தி அடைந்தது. பலதடவை சச்சரவு செய்வது போல வாதாடுவாரே, உங்கள் நாட்டு நடவடிக்கை,பழக்கவழக்கம் ஆகியவைகளைக் கூடக் கண்டிப்பாரே, இங்கே அவரிடம் உங்களுக்குக் கோபம் இருக்கிறதோ என்று பயந்துகொண்டு இருந்தேன்.''

''கோபமா! எனக்கா! இப்படிப்பட்டவர்களைத்தான் நான் மதிப்பது. நான் இவரிடம் வைத்துள்ள மதிப்பை தெரிவித்துவிட்டுப் போகவே வந்தேன்.வந்த இடத்திலே விழாவும் நடக்கிறது. என் விழாப் பரிசாகவே ஒரு சந்தோஷச் செய்தியை தருகிறேன். நமது லண்டன் கம்பெனியில் மிஸ்டர்

லிங்கத்தை உதவி மானேஜராக நியமித்து உத்திரவு வந்து இருக்கிறது.''

''இலண்டன் கம்பெனியிலா! மிஸ்டர் லிங்கம்! என் வாழ்த்துக்கள்.''

''எமது மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.''

''நன்றி மிஸ்டர் நார்மன், மிக்க நன்றி...அங்கு செல்வது என் ஆராய்ச்சித் துறைக்குப் பயன்படும்...''

''மற்றோர் மகிழ்ச்சியான செய்தி! மிஸ்டர் நார்மன்! என் இளைய மகள் உமாவை மிஸ்டர் லிங்கத்துக்குத் தர விரும்புகிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.''

''இது உண்மையான விழாப் பரிசு! என்ன மிஸ்டர் லிங்கம்! மிஸ் உமா!சம்மதந்தானே!கேட்பானேன், கண்களே கீதம் பாடுகின்றனவே!''

அப்போது தோட்டத்துப் பக்கமிருந்து துப்பாக்கி வேட்டுச் சத்தமும் கதறிடும் ஒலியும் கேட்கிறது.

எல்லோரும் பதறிப்போய், கீழே ஓடினார்கள்; சத்தம் வந்த திக்கு நோக்கி.

குடிசைக்குப் பக்கத்தில் சடையப்பன் வீழ்ந்து கிடந்தான், இரத்த வெள்ளத்தில்.

எதிரே, துப்பாக்கியுடன் காளிங்கராயர் ஆவேசம் வந்தவர்போல் நின்று கொண்டிருந்தார்.

ஜெமீன்தாரர், நார்மன் துரையிடம் பேசிக் கொண்டிருந்தபோது, காளிங்கராயர் கீழே வந்திருக்கிறார். யாரும் அதனைக் கவனிக்கவில்லை.

கீழே சடையப்பன் இரத்த வெள்ளத்தில் வீழ்ந்து கிடப்பதைக் கண்டதும், சொக்கலிங்கம் அலறினான்; துடித்தான்; அவர்மேல் விழுந்து புரண்டு புரண்டு அழுதான்.

காரணம் தெரியாமல் மற்றவர்கள் திகைத்து நின்றனர்.

''அய்யய்யோ! அநியாயம் நடந்து விட்டதே...யார் செய்த அக்ரமம் இது?''

''யார் செய்தது என்று கேள்! அக்ரமம் என்று சொல்லாதே!''

''கொலை செய்து விட்டிருக்கிறாய்!''

''இன்னும் உயிர் போகவில்லை—சாகடிக்கத்தான் சுட்டேன்...ஏன் தெரியுமா...இந்தக் கிழவன் உன்னைப் பற்றி இழிவாகப் பேசினான்...நீ...சொல்ல எனக்குக் கூச்சமாக இருக்கிறது. குழந்தையைக் கவனிக்காமல் இருந்ததற்காக அந்தக் கிழவியை இரண்டு தட்டு தட்டினேன். பாய்ந்து வந்தான் கிழவன் என் மீது; அடித்து விரட்டினேன். இந்தத் துப்பாக்கியைத் தூக்கிக் கொண்டு வந்தான், என்னைக் கொல்ல; இங்கு காவல் காத்துக் கிடக்கும் நாய்; மாமா சொல்வது சரி. இதுகளுக்கு இப்படிப்பட்ட இழிவான போக்குத்தான் இருக்கும். துப்பாக்கியைப் பறித்துக் கொண்டேன்; சுட்டேன். சுருண்டு விழுந்தான்; செத்தான் என்று நினைத்தேன்; கிழட்டுப் பயல் கூவினான்; 'கூப்பிடு! கூப்பிடு' என்று.யாரை என்று கேட்கிறேன்; 'என்மகனை!என்மகனை!' என்கிறான். 'என்னடா உளறல்' என்கிறேன். 'நானா உளறுகிறேன்...உயிர் போகுமுன் உண்மையைக் கூறுகிறேன். மாளிகையிலே இருக்கிறான் என் மகன்! எல்லோரும் பாராட்டும் அறிவாளன்! சொக்கலிங்கம்!' என்கிறான். 'சமையற்காரனையா சொல்லுகிறாய்' என்று கேட்கிறேன், மிஸ்டர் லிங்கம்! உங்களைத்தான் சொல்லுகிறான்...நீங்கள் அவனுடைய மகனாம்! வண்டிக்காரன் மகனாம்!...''

''ஆமடா ஆம்! நான் அவர் மகன்தான்! வண்டிக்காரன் மகனேதான் நான்! அவர் குடிசையிலே குமுறிக் கிடந்தார்; நான் மாளிகையிலே வாழ்வதற்காக, இன்னலையும் இழிவையும் ஏற்றுக் கொண்டார், நான் செல்வமும் சீரும் பெறவேண்டுமென்று. மிஸ்டர் நார்மன்! இவர் என் தகப்பனார்..வண்டிக்காரன், இந்த ஜெமீனில்! வாழ்ந்து கெட்டவர். நான் சிறு வயதிலேயே மாமனால் வளர்க்கப்பட்டு வந்தேன். இங்கு வந்ததே இல்லை...மகனே! 'நாலு பேர் பார்த்து மதிக்கத்தக்க நிலை உனக்கு வரவேண்டும். அதற்கு இந்த ஜெமீனில் வாத்தியார் வேலையை ஏற்றுக் கொள். உனக்கு நிறைய சிபாரிசுகள் கிடைக்கும். பெரிய உத்தியோகம்

கிடைக்கும். அதுவரையில் என் மகன் என்பது மட்டும் வெளியே தெரியக் கூடாது. வண்டிக்காரன் மகன் என்று தெரிந்தால், ஜெமீன் மாளிகையில் இடம் கிடைக்காது' என்றார்! எவ்வளவோ மன்றாடினேன்...கேட்கவில்லை...சத்தியம் செய்திடச் சொன்னார்...தத்தளித்தேன்...மாளிகையிலே எனக்கு விருந்து, மகிழ்ச்சி! என் தகப்பனார் இங்கு, குடிசையில், குதிரைக் கொட்டிலில், என் எதிரிலேயே ஏசுவார்கள், கேவலமாக; என் இரத்தம் கொதிக்கும்; கண்ணீர் கொப்பளிக்கும்; அப்போதும் என்னை அந்த உத்தமர் பார்த்துத் தலை அசைப்பார்; என்னை கட்டிப் போட்டு விட்டார்! சீமான்களுடன் சீமாட்டிகளுடன், நான் சாரட்டில் சவாரி செய்வேன்! அவர்தான் வண்டியை ஓட்டிக் கொண்டு வருவார்! வண்டியின் வெல்வெட்டு மெத்தை என்னை முள்ளாய்க் குத்தும்...சிறிதளவு குளிர் காற்று வீசினாலும், எங்கள் உடலுக்குக் கம்பளிச் சட்டை — போர்வை! பனி பெய்யும், அவர் எங்களை ஏற்றிக் கொண்டு வண்டியை ஓட்டிச் செல்வார். எல்லாம் எனக்கு இந்தச் சமூகத்தில் ஒரு புதிய அந்தஸ்து தேடித்தர...அம்மா!...அம்மா!...

''கிழவியைப் போலீஸ் கொட்டடிக்கு அனுப்பிவிட்டேன்...திருடினாள் பத்துப்படி கொள்...சாட்சி இருக்கிறது...''

''மிஸ்டர், நார்மன்? எனக்கு வேண்டும். இந்தத் தண்டனையும் வேண்டும்; இதற்கு மேலும் வேண்டும். மாளிகையிலே ஒரு போலி வாழ்க்கை எனக்கு. அப்பா சுட்டுத் தள்ளப்பட்டிருக்கிறார். அம்மா மீது திருட்டுக் குற்றம்...''

''உன் மீது மோசடிக் குற்றம்...ஆமாம்! இவ்வளவு நாள் உன் குடும்ப உண்மையை மறைத்து ஜெமீன் குடும்பத்துடன் உறவாடிய மோசடி...''

''மிஸ்டர் லிங்கம்! மிஸ்டர் ஜெமீன்தாரர்! முதலில் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்ல ஏற்பாடு செய்யப்பட வேண்டும்...மற்றவை பிறகு—கிளம்புங்கள்...''

சடையப்பனைக் காப்பாற்ற முடியவில்லை—எத்தனை உயர்தரமான மருத்துவர்களாலும்.

மகனைப் பெரிய உத்யோகத்திலே பார்க்க வேண்டும் என்ற ஆசை ததும்பிக் கொண்டிருந்த இதயம், பேசுவதை நிறுத்திக் கொண்டது.

செய்ய வேண்டியது யாவும் செய்துவிட்டேன். சென்று வருகிறேன் என்று கூறுவது போலிருந்தது சடையப்பனின் முகத்தோற்றம்.

போலீசிலிருந்து விடுவிக்கப்பட்ட தன் தாயின் காலின் கீழ் விழுந்து கதறினான் சொக்கலிங்கம்.

வண்டிக்காரன் மகன்!

சடையன் மகன்!

பெரிய குடும்பம்! அந்தஸ்தான இடம் என்று எண்ணிக் கிடந்தோமே, நம்ம வண்டிக்காரன் மகன்.

அப்பனும் மகனுமாகச் சேர்ந்து நம்மை மடையர்களாக்கி விட்டார்களே!

ஜமீன் குடும்பத்துக்கே இழிவு உண்டாக்கி விட்டானே!

உமாவையே கொடுக்க இருந்தேனே..முட்டாள்!—இவ்விதமான பேச்சுத்தான் முதலிலே ஜமீன் மாளிகையிலே கிளம்பிற்று.

ஊர் கொதித்தது. மகனுக்கே அந்தஸ்து தேடிக் கொடுக்க வேதனைத் தீயிலே வீழ்ந்த உத்தமன் சடையப்பன் என்று ஏழையர் உலகம் போற்றிற்று.

போலீஸ், காளிங்கராயரைத் தேடிக் கொண்டிருந்தது.

சொக்கலிங்கம் அதிர்ச்சி தாங்காமல் படுத்த படுக்கையாகக் கிடந்தான்.

நீதியை நிலை நாட்டியாக வேண்டும் என்று நார்மன் வேலை செய்து வந்தார்.

காளிங்கராயர் பிடிப்பட்டார்; வழக்குத் தொடரப் பட்டது.

அச்சம் பிடித்துத் தின்னத் தொடங்கிற்று, ஜெமீன் தாரரை.

நார்மனை நாடினார், காளிங்கராயரை மீட்பதற்காக.

''பிடிவாதம் வேண்டாம் மிஸ்டர். நார்மன்! பிடி வாதம் கூடாது. கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன்.''

''நான் எந்த உதவியும் செய்ய முடியாது. நடந்ததை அப்படியே கோர்ட்டிலே சொல்லத்தான் போகிறேன்...நம் முடைய வியாபாரத் தொடர்பு இருந்தாலும் சரி...அறுந் தாலும் சரி!''

''மிஸ்டர் நார்மன்! ஆத்திரத்தில் நடந்து விட்டது... எப்படியாவது...''

''நடந்திருப்பது கொலை, மிஸ்டர் ஜெமீன்தாரர்... நான் எப்படி உடந்தையாக இருக்க முடியும்...வண்டிக்கார னும் மனிதன், மிஸ்டர் ஜெமீன்தார், மனிதன்!''

''நீங்கள் மனது வைத்தால், என் மருமகன் தப்பலாம்... சாட்சிகளைத் தடுத்துவிட முடியும்.''

''முடியும் ஜெமீன்தாரர்! முடியும். நான் அந்த நேரத் தில் அங்கு வராமலிருந்தால் பிணத்தையே மறைத்து விட்டி ருக்கவும் முடியும். ஆனால் என்னால் உண்மையை மறைக்க முடியாது.''

''பூர்வீகமானது எங்கள் ஜெமீன். இப்போதே கேவல மாகப் பேச ஆரம்பித்து விட்டார்கள். மருமகனுக்கும் ஏதா வது கோர்ட்டிலே கிடைத்துவிட்டால் இழிவு எந்தக் காலத் திலும் போகாது மிஸ்டர் நார்மன். இருபது வருட சிநேகி தம் நமக்குள்''.

''இருபது வருட வியாபாரத் தொடர்பு! மிஸ்டர் ஜெமீன்தாரர். சமுதாயத்திலே உள்ள போலி அந்தஸ்து

உணர்ச்சியை வளர்க்கக் கூடாது—அது எந்த நாட்டில் இருந்தாலும்...லிங்கம் சொல்வது முற்றிலும் சரி! எங்கள் நாட்டிலேயும் இருக்கிறது. இப்படிப்பட்ட உணர்ச்சி எங்கே இருந்தாலும், பாம்பு பாம்புதானே.''

காளிங்கராயரை விடுவிக்க ஜெமீன்தாரர் இலட்ச ரூபாய் வரையில் செலவிட்டுப் பார்த்தார்; பிரபலமான வழக்கறிஞர்கள் வாதிட்டுப் பார்த்தார்கள். பலிக்கவில்லை. ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது.

சோகமே உருவான நிலைபெற்றார் ஜெமீன்தாரர்!

என்ன செல்வம் இருந்து என்ன பயன்? மருமகனைக் காப்பாற்ற முடியவில்லையே! ஜெமீன் குடும்பத்துக்கு இழிவு ஏற்பட்டது விட்டதே. இந்த இழிவு எப்படி நீங்கும் என்று எண்ணி, சீமைக்குச் சென்று பார்ப்பதென்று முடிவு செய்து, ஜெமீன் நிலத்தை விற்றுப் பணம் திரட்டிக் கொண்டிருந்தார்.

அதிர்ச்சியில் தாக்கப்பட்டு, படுத்த படுக்கையாகக் கிடந்த சொக்கலிங்கம், மெள்ள மெள்ள நலமடைந்தார்.

நார்மன் ஏற்பாடு செய்து கொடுத்திருந்த விடுதியில் தன் தாயாருடன் தங்கி இருந்தான்.

பல ஆண்டுகளாக 'அம்மா! அம்மா!' என்ற அந்த அன்பு மொழியைச் சொல்ல வாய்ப்புப் பெறாதிருந்த குறையைப் போக்கிக் கொள்பவன் போல, விநாடிக்கு விநாடி, 'அம்மா! அம்மா!' என்று அழைத்து, 'நான் பாவி அம்மா! நான் பாதகன் அம்மா! காளிங்கராயரல்ல அம்மா அப்பாவைச் சாகடித்தது; என் சுயநலம்—என் மடமை—என் கபட நாடகம் அம்மா! எனக்கு உய்வு உண்டா? நான் மனிதன் தானா!' என்று கூறிக் குமுறிக் கிடந்தான்.

நார்மன் அவனுக்கு ஆறுதல் கூறிட வந்தார்.

வெவ்வேறு இனம்—ஒரு இனம் ஆளும் இனமாகவும், மற்றோர் இனம் அடிமைப்படுத்தப்பட்ட இனமாகவும் இருந்

திடினும், இருவரும் நல்ல இதயம் படைத்தவர்கள் என்பதாலே அவர்களின் நட்பு, நேர்த்திமிக்கதாக இருந்தது. நார்மன், எப்படியும் சொக்கலிங்கத்தின் மனம் உடையக் கூடாது என்பதற்காக அன்பு மொழி வழங்கலானார்.

''மிஸ்டர் லிங்கம்! ஏதேதோ நடைபெற்று விட்டிருந்தாலும், எங்கள் கம்பெனி முடிவு மாறவில்லை. அந்த வேலை உமக்காகக் காத்துக் கொண்டிருக்கிறது''

''நன்றி மிஸ்டர் நார்மன்! ஆனால் நான் என் முடிவை மாற்றிக் கொண்டேன். என்னதான் அப்பா வற்புறுத்தினாலும் நான் அந்தக் கபட நாடகம் ஆட ஒத்துக் கொண்டிருக்கக் கூடாது. என்னுடைய உள்ளத்திலும் அடிவாரத்தில் சுயநலம், சுகபோகம் ஆகியவற்றிலே ஆசை இருந்ததால்தான் நான் அந்த ஏற்பாட்டுக்கு ஒத்துக் கொண்டேன். நானும் ஒரு விதத்தில் குற்றவாளிதான்! அப்பாவைச் சாகடித்தது, துப்பாக்கிக் குண்டு அல்ல; என் மடமை—சமூகத்திலே கப்பிக் கொண்டுள்ள குருட்டு அறிவு!—இந்த மடமையும் குருட்டுத் தனமும் ஒழிய வேண்டும்...ஒழிக்கப்பட வேண்டும்...அதற்கு நான் இருக்க வேண்டிய இடம் இலண்டன் அல்ல! இங்கு; என் நாட்டில்; தாய்நாட்டில்! என் நாட்டு மக்களிடம் ஜாதி குலம் சமயம் செல்வம் என்பவைகளின் பேரால் இரும்புப் பிடியாக இருந்துவரும் மடமையைத் தொலைத்திட நான் பணியாற்றத் தீர்மானித்து விட்டேன். மன்னிக்க வேண்டும்''.

''மன்னிப்பதா! மகிழ்ச்சி அடைகிறேன்! பெருமைப் படுகிறேன்! பணம் பதவி இவற்றினைத் துறந்திடத் துணியும் உன் பண்பினை பாராட்டுகிறேன்!''...

''பணம் பதவி ஆகியவற்றிலே எனக்கு இருந்து வந்த ஆசைதானே, அப்பா சொன்ன திட்டத்துக்கு என்னை உடன்பட வைத்தது? உணருகிறேன்...திருந்துகிறேன்''...

''ஜெமின்தாரர் வழக்கு சீமைக்குப் போகிறது...''

''எங்கே போனால் என்ன? வழக்கின் முடிவு எதுவானால் என்ன? நான் செய்த குற்றத்துக்கான தண்டனையை நான் அனுபவித்து விட்டேன். வண்டிக்காரன் மகன் என்றாலும் வாழ முடியும்—பளபளப்பும் போலி மரியாதையும் கிடைக்காமலிருக்கலாம்—நாணயமாக வாழ முடியும் இந்தப் பரந்த உலகத்தில் என்ற சாதாரண உண்மையை உணர முடியாதிருந்தேன். பாடம் படித்துக் கொண்டேன்; யாரும் கொடுத்திராத கட்டணம் செலுத்தி...என் தகப்பனாரின் உயிரைக் கொடுத்து.

பக்கத்திலே கோகிலா வந்து நின்றாள்.

நார்மன் சொக்கலிங்கத்தைப் பார்த்தார்.

''என் துணைவியார்!'' என்று பெருமிதத்துடன் சொக்கலிங்கம் கூறினான்.

★

# 2
# புதிய பொலிவு

''அம்மாடியோ...! நான் மாட்டேன். யாராச்சும் பார்த்துட்டா?''

சாமி சாட்சியாச் சொல்றேன்...

பெத்தவங்க பெரியவங்களைக் கேட்டு முடிப்பயா, எங்கிட்டெ வந்து 'கெக்சபிக்கே'ன்னு கொஞ்சிகிட்டு இருந்தா...?

''நானென்ன, மாடப்புறாவா, நீ சீட்டி அடிச்சதும் ஓடியாந்து, உன் தோளிலே தொத்திக்கிட...''

சினிமா பார்த்துப் பார்த்து, நீ வேண விளையாட்டு கத்துகிட்டே..இதோ பாரு! எனக்கு அதெல்லாம் பிடிக்காது. சொல்லிட்டேன்...

ஆமா, நீ இதுவரையில் என்னிடம் சொல்லவேயில் லையே! உனக்குப் பொரிவிளங்கா உருண்டைன்னா, ரொம் பப் பிரியமாமே...இந்தா, இரண்டுதான் மிச்சமாச்சி...

உன் கண்ணுக்கு நான் அழகுன்னா, ஊரார் அவ்வளவு பேருமா, என்னை அழகின்னு சொல்லுவாங்க? குப்பி பாட்டி என்னை என்ன சொல்லும் தெரியுமா?

போடி,போடி; கோண வடுக்காரி! எப்பப் பார்த்தாலும் இளிச்சிகிட்டுக் கிடக்கறயே, பெண்களுக்கு இதுவா இலட்ச ணம்னு சொல்லும்...

அப்பப்பா! போதும் போதும்னு ஆயிடுது, உன்னண்டெ சிக்கி விட்டா...இது என்ன கன்னமா, பச்சரிசி மாங்காயா? நகத்தைப் பாரு, சாமியாரு மாதிரி...!தா! ரொம்ப விளை

யாடாதே, வெக்கமா இருக்கு...சிரிப்பு பகீல்னு வருது... அதோ, அந்தப் பக்கம் சோளக் கொல்லையிலேதான் சொக்கப்பன் இருக்கிறான்..அவன் காதிலே நான் சிரிக்கிறது விழுந்திச்சி, அவ்வளவுதான். வீட்டுக்கு வந்து கலகத்தை மூட்டி விட்டுத்தான் தூங்கப் போவான்...

உன்னை நம்பாமெ நான் வேறே யாரை நம்புவேன். என் மனசிலே அந்த நம்பிக்கை இல்லையானா, இப்படி உங்க கூடப் பழகுவனா, பேசுவனா...ஆனா, 'எதுக்கும், ஆக வேண்டியகாரியத்தை காலாகாலத்திலேமுடிச்சிடவேணும்டி. ஆம்பிள்ளைக மனசு ஒரு வேளைபோல மறுவேளை இருக்காது..எந்தப் பாவி மகனாவது கதை கட்டி ஊரிலே உபத்திரவத்தை மூட்டாத முன்னமேயே, மூணுமுடி போட்டு கிடறது தான் நல்லது'ன்னு இஞ்சிக் கொல்லையார் மக இருக்கா பாரு, பருவதம், அவ சொல்றா...

இப்படித்தான் பேசத் தெரிந்தது அந்த வஞ்சிக்கொடியாளுக்கு. கிராமத்துக் கட்டழகி!எனவே அவளுக்கு,'அன்பே! ஆருயிரே! இன்பமே! இன்னமுதே! இதய ஜோதி!' என்ற முறையில் பேசத்தெரியாது. 'கண்ணாளா! தங்களைக் கண்டதும் கதிரவனைக்கண்ட கமலம் மலருவதுபோல என் அகமும் முகமும் ஒருசேர மலருகிறது; வீணையின் நரம்புகளை இசை வல்லான் தொட்டுத் தடவி இனிய கானத்தைப் பிறந்திடச் செய்வதுபோல, என்னைத் தொட்டிழுத்து முத்தமிட்டதும், எனக்கு வாழ்வின் கீதம் வசீகரமாகக் கேட்கிறது' என்றெல்லாம் 'வசனம்' பேசத் தெரியாது; அவள் அப்படிப்பட்ட வசனங்களைச் சினிமாவில் இரண்டோர்முறைகேட்டதுண்டு. அப்போதுகூட அவள், எப்படி வெட்கத்தைவிட்டு இப்படியெல்லாம் பேசிக் கொள்கிறார்கள் என்று எண்ணிக் கொள்வாள். அவள் கல்லூரிப் பெண்ணல்ல; காதலுக்காகச் சாம்ராஜ்யங்களை இழக்கத் துணிந்தவர்கள், வாள் முனையை எதிர்த்தவர்கள், ஊர்ப்பகையை ஏற்றுக் கொண்டவர்கள், உருமாறிப் போனவர்கள், உன்மத்தரானவர்கள் ஆகியோர் பற்றிய கதைகளைப் படித்ததில்லை. அவள் கேட்ட இரண்டொரு கதைகளிலே துக்கப்படவும், கஷ்டப்படவும்தான்

பெண் ஜென்மம் இருக்கிறது என்றுதான் தெரிந்து கொண்டிருந்தாள். மல்லிகையின் மணம், ஆகா! மனதுக்கு அளிக்கும் இன்பத்துக்கு ஈடானது வேறேதுமில்லை என்று, காகித மலரினை முகர்ந்து கொண்டே, பேசிடும் நாடகக்காரர்போல அல்லாமலும், காதலைப் பெற்று இன்புற்று அனுபவம் பெறாமலேயே, வீட்டில் காட்டுக் கூச்சலின்றி வேறு கேளாத குடும்ப வாழ்க்கையில் இருந்துகொண்டே, காதலின் மணம், மாண்பு, மதுரம் ஆகியவை பற்றிப் பேசிடுவோர் போல அல்லாமலும் செல்லி காதலைப் பற்றிய பேச்சோ, பாட்டோ தெரிந்து கொள்ளாமலேயே, உண்மைக் காதலைப் பெற்று மகிழ்ந்தாள்—அவளுக்கு அந்த இன்பத்தை அளித்த வேலப்பன், ‘வசனம்’ கேட்டிருக்கிறானே தவிர, மனப்பாடம் செய்து கொண்டு பேசுபவனல்ல; சிலசமயங்களிலே ஒருஅடி, இரண்டு அடி காதல் பாட்டுப் பாடுவான்; தலைப்பு ஒன்று, முடிவு மற்றொன்றாக இருக்கும்!! கொடி அறியாமலே, மணம் கொண்ட மல்லிகை மலர்ந்திருப்பதுபோல், செல்வியின் உள்ளத்தில் காதல் பூத்து, மணம் பரப்பிற்று. கிராமம், எனவே யாரும் அறியார்கள் என்று இவர்கள் எண்ணிக் கொண்டிருந்தபோதே, செல்லாயி—வேலப்பன் விஷயம் வெகுவாகவும், வேகமாகவும் பரவிக் கொண்டிருந்தது. வம்பு தும்புக்குப் போகாதவன், வருவாய் அறிந்து செலவு செய்பவன், பெரியவர்களிடம் மரியாதை காட்டுபவன், பொருளுக்காக அலையமாட்டான்; இல்லை என்று எவரிடமும் கை ஏந்தவும் மாட்டான்; உழைப்பான், நந்திப் பிழைக்கமாட்டான்—ஊருக்கு உபகாரம்செய்வான்; பெரியதனக்காரனாகி மிரட்டமாட்டான் என்று, வேலப்பன் குணம் கிராமத்தாரால் பாராட்டப்பட்டது.

அம்மை நோய் கடுமையாக பரவி, ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு அந்தக் கிராமத்திலே பாதிப் பேர்களைப் பலி வாங்கி விட்டது—அந்தச் சமயத்தில்தான், வேலப்பனுடைய தாயும் தந்தையும் இறந்து போயினர்—ஒண்டிக் கட்டையானான் வேலப்பன்.

''இனி அவனுக்கு ஒரு கால்கட்டு ஏற்பட்டு, அதன் வயித்திலே ஒரு பூவோ பிஞ்சோ முளைத்து, பிறகுதான், வேலப்பனுக்கு ஒரு குடும்பம் அமைய வேண்டும்'' என்று கிராமத்துக் கிழவர்கள் பேசிக் கொள்வார்கள்.

''அவனுக்கு மட்டும் தெரியாதா? தெரிஞ்சுதான் வேலப்பன், நம்ம சடையாண்டி மக இருக்காளே, செல்லி, அவளைச் சுத்திச் சுத்தி வட்டமிட்டுக்கிட்டு வாரான்...'' என்று குறும்புத்தனமானவர்கள் பேசுவார்கள்.

''அடச் சே! இவனைப் பாரு! வயசுக் காலத்திலே இதெல்லாம் நடைபெறத்தானே செய்யும். எல்லோருமேவா, இவனைப் போல சுடுமூஞ்சிச் சுப்பனாக இருப்பானுங்க... ஒவ்வொருத்தரும், அந்தப் பருவத்திலே, ஓடி ஆடிப் பாடிக்கிட்டுத்தான் இருப்பாங்க...பய, தப்புதண்டா பேர்வழி இல்லை. செல்லி இருக்காளே, அவளும் சூதுவாதில்லாமே பேசிச் சிரிப்பாளே தவிர, பழி பாவத்துக்குப் பயந்த பொண்ணு; அடே அப்பா! சடையாண்டி என்ன இலேசுப் பட்டவனா? சீவிடுவான் தலையைச் சீவி!'' என்று அனுபவமிக்க பெரியவர் கூறுவார்.

செல்லி—வேலப்பன், காதலில் கடும்புயல் ஏதும் வீசவில்லை. மூன்றாவது 'ஆசாமி' யாரும் குறுக்கிட்டு அமளி மூட்டவில்லை. சடையாண்டியும் தடை கூறவில்லை. கலியாணத்தைச் சுருக்காக முடித்துவிட வேண்டும் என்று,வேலப்பனிடம் சடையாண்டி 'ஜாடைமாடை'யாகச் சொல்லியும் விட்டான். கிராமத்துக்கு ஒரு நல்ல விருந்து விசேஷம் நடத்துகிற அளவுக்குக் கொஞ்சம் 'காசு' சேரட்டும் என்று வேலப்பன் காத்துக் கொண்டிருந்தான். அதற்காக அவன் பல மாதிரி யோசனைகள் செய்வதுண்டு. செல்லாயிக்கு, வெள்ளைக் கல்லிலே கம்மலும், சிகப்புக் கல்லிலே மூக்குத்தியும், காலுக்கு வெள்ளியிலே கொலுசும், கழுத்துக்கு ஏதாச்சும் செய்து போட்டு, கிராமத்தாருக்கெல்லாம் ஒரு வேளை சோறு போட்டு, கலியாணத்தை சப்பிரமாகச் செய்ய வேண்டும் என்பது வேலப்பன் ஆசை.

''வேலப்போய்! உன் கண்ணாலத்திலே ஊர்கோலம் உண்டா டோய்!'' என்று கேலி செய்வார்கள், ஒத்த வயதினர். ''ஆமாம்டா! செய்தா என்னடா! ஆனை மேலே அம்பாரி, குதிரை மேல் மேளதாளம், பொய்க்கால் குதிரை கூத்தாட்டம், எல்லாம்தான் நடக்கப் போவுது. பவுன், பவுனாய் விளையுது, என் கொல்லையிலே. நீங்களெல்லாம்தான், பழைய மாதிரியாகவே, காரும், சிறுமணியும் விதைத்து விட்டு கிடக்கறிங்க, நான் 'குச்சிக்கிழங்கு' போட்டிருக்கறேன், தங்கமாட்டம் விலைபோகுது, குச்சிக் கிழங்கு தெரியுமா... தூரத்துச் சீமைக்கெல்லாம் வண்டி வண்டியாப் போகுது... அதிலே கிடைக்கப் போற காசைத்தான் நம்பிகிட்டு இருக்கறேன்...குச்சிக் கிழங்கு காசு ஆனதும் நாள் பார்க்க வேண்டியதுதான்...'' என்று வேலப்பன் உற்சாகத்துடன் கூறுவான்.

நகரத்திலே ஒரு வேலையாக வேலப்பன் போயிருந்தபோது 'குச்சிக் கிழங்கு' பயிரிடுவதாலே கிடைக்கும் இலாபத்தைக் குறித்து கடைவீதியிலே பேசிக் கொண்டதைக் கேட்டு, பிறகு பல பேரிடம் அதைப் பற்றிய விவரம் கேட்டுத் தெரிந்து கொண்டான். பிறகு குச்சிக் கிழங்கு பயிர் வைத்தான்...யாரோ வியாபாரிகூட, பயிர் வளமாக வந்தபோது பார்த்துவிட்டு மாசூல் முழுவதும் பணம் கொடுத்து வாங்கிக் கொள்ளுவதாக வாக்களித்தார். வேலப்பனுக்கு அதனாலே அதிக நம்பிக்கை ஏற்பட்டது.

செல்லாயியை அவன் சந்திப்பதென்பது, மாலை வேளைகளில் யாருமறியாமல் என்கிற விதத்தில் அல்ல.

கழனிப்பக்கம் இருவருக்குமே வேலை இருக்கும்—தோப்புத்துரவுக்கு இருவருமே போக வேண்டிய அவசியம் நேரிடும்; அப்போதெல்லாம் சந்திப்புதான்.

''தா! செல்லாயி! வாயேன், அதோ அந்தாலே இருக்கிற திருக்குளத்தண்டே, பூ பறிச்சுத்தாரேன். தாமரைப்பூ. அழகா இருக்கும்...'' என்று அவன் சில வேளைகளில் அழைப்பான். அவன் கண்கள் வேறு ஏதேதோ பேசும். செல்லாயிக்கு சிரிப்பு வரும்; கோபமும் பயமும் வந்தவள் போலாகி ''அம்

மாடியோ...! நான் மாட்டேன்...யாராச்சும் பார்த் துட்டா...?'' என்று கேட்டுவிட்டு ஓடிவிடுவாள்.

''பயங்காளிப் புள்ளே! சுத்த பயந்தாங்கொள்ளி...'' என்று கேலியாகக் கூறுவான் வேலப்பன்; கூறிக்கொண்டே சுற்று முற்றும் பார்த்துக் கொள்வான், யார் கண்ணிலாவது பட்டுவிட்டோமோ என்ற பயத்தால்!!

''சாமி சாட்சியாகச் சொல்றேன், அப்பாரு பேசிகிட்டு இருந்ததை நான் என் காதாலே கேட்டேன். உனக்குத்தான் என்னைக் கட்டி வைக்கப் போறாங்க...'' என்று செல்லாயி ஒரு நாள் அவனுக்குத் தைரியமளிப்பாள்; பிறகோர் நாள், அவளே பயந்த நிலையில், 'மூணுமுடி' போட்டாத்தான் நல் லது என்று யாரரோ சொல்கிறார்கள் என்று கவனமூட்டு வாள்!

இதற்கிடையிலே, பொரிவிளங்காய் உருண்டைகள் அவ னுக்குக் கிடைக்கும்; நகக்குறி இவளுக்கு!! உரம் அதிகம் தேவைப் படாமலே, எல்லாப் பயிரும் செழிப்பாக வளரும் கிராமமல்லவா, காதல் மட்டும் என்ன விதிவிலக்கா! கவர்ச்சி கரமாக வளர்ந்து வந்தது.

குச்சிக்கிழங்குதான் இனி ஆகவேண்டிய காரியத்தை ஆகும்படிச் செய்யவேண்டும். அது ஓங்கி வளர்ந்து, உருவம் பெறுவதற்கான உழைப்பினை, தட்டாமல், தயங்காமல், வேலப்பன் கொட்டினான்—பயிரும் அருமையாக வந்தது— கிழங்கும் தரம்தான் என்று தெரிந்தது—ஆனால் 'பலன்' எதிர்பார்த்தபடி கிடைக்கவில்லை.

குச்சிக் கிழங்கு மூலம் தயாரான 'சவ்வரிசி' வங்காள நாட்டுக்கு ஏராளமாகச் சென்று கொண்டிருந்தது—அதனா லேயே நல்ல கிராக்கி இருந்தது—விலையும் குடுபிடித்து இருந்தது—அதனால் குச்சிக் கிழங்கு பயிர் செய்தால் கணிச மான இலாபம் கிடைத்தது.

குச்சிக்கிழங்கு கொண்டு செய்யப்படும் 'சவ்வரிசி' சத்தற்றது. உடலைக் கெடுக்கக்கூடியது; இனி வங்காளத்தில்

அதனைக் கொண்டுவரக் கூடாது என்று, புதிதாக ஓர் உத்தரவு கிளம்பி விட்டதாகச் சொல்லி, வியாபாரிகள், குச்சிக் கிழங்கு வாங்குவதைக் குறைத்துக் கொண்டார்கள்—பத்து மாதம் பாடுபல கொடுத்து, பிரசவத்தின்போது ஆபத்தையே உண்டாக்கி, கடைசியில், வைத்தியர் உதவிபெற்று,வெளியே வந்த குழந்தை 'ஊமை' என்று தெரிந்தால், தாயின் மனம் என்ன பாடுபடும்!வேலப்பன் நிலைமை அப்படியாகிவிட்டது. கண் எதிரே குழந்தை இருக்கிறது.கருவில் உருவாகியது.மெத்தக் கஷ்டத்தைக் கொடுத்துவிட்டு வெளியே வந்தது, வாரி அணைத்து, உச்சி மோந்து முத்தமிட்டு, பட்ட கஷ்டம் அத்தனையும் பஞ்சாகப் பறந்ததடா பாலகனே என்று கொஞ்சிக் குலவிய தாய், தான் பெற்ற செல்வம், 'ஊமை' என்று அறிந்தால் துடிதுடிக்காதிருக்க முடியுமா? வேலப்பன், குச்சிக் கிழங்கு பாங்காக வளர வளர, அதை வெற்றியுடனும், பெருமையுடனும் பார்த்துப் பார்த்துப் பூரித்துக் கிடந்தான். அவனைப் பார்த்து வேறு சிலரும் அந்தக் கிராமத்திலும் சுற்று வட்டாரத்திலும் அதே பயிர் வைத்தார்கள்—என்றாலும் வேலப்பன் கொல்லையிலே இருந்ததுதான் முதல் தரமானது என்று எல்லோருமே சொன்னார்கள்.

''விவரம் புரியாமலே,நாம எப்பவும் நெல்லுநெல்லுன்னு கட்டிகிட்டு அழறோம். 'போட்டா நெல்லு; போடாட்டி புல்லு'ன்னு இருந்துவிடறோம். அண்ணேன்! நெல்லிலே கிடைக்கறதைவிட, வாழை, கரும்பிலே அதிகம்.வெற்றிலைக் கொடிக்காலிலே நல்ல இலாபம் கிடைக்குதாம். அதுக்கெல்லாம் பாடுஅதிகம்,பலனும் அதிகம்.குச்சுக் கிழங்குக்குப் பலன் அதிகம்,பாடு அதிகம் தேவையில்லை'' என்று வேலப்பன் விவரித்தபோது, ''இதெல்லாம் நமக்கு எதுக்குடா? இம்மாம் காலமா நெற்பயிர் பண்ணி பிழைச்சி வந்தமா, கிழங்கு தோண்டிக்கிட்டுக் கிடந்தமா?'' என்று முதியவர்கள் பேசினர். —என்றாலும் அவர்கள்கூட வேலப்பனைப் புகழ்ந்தார்கள். ''பய, கெட்டிக்காரன்தான். பாரேன் பயிரை, மூக்கணாங் கயிறுபோடாத காளை முறைச்சிகிட்டு நிற்குமே, அதுபோல இருக்கு'' என்று கூறினர்.

வேலப்பன், இந்தப் பேச்சை எல்லாம் கேட்டு, மேலும் மகிழ்ச்சியும், நம்பிக்கையும் கொண்டான். கொல்லையைச் சுற்றிப் பார்க்கும்போதெல்லாம், வேலப்பனுக்கு கலியாணப் பந்தலே தெரிந்தது.

இவ்விதம் இன்பக் கனவு கண்டு கொண்டிருந்தவனுக்குப் பேரிடி விழுந்தது. 'மார்க்கட் நிலவரம்'—குச்சிக் கிழங்குக்குக் 'கிராக்கி' இல்லை; வாங்குவார் இல்லை என்ற செய்தி அவனைச் செந்தேள் போல் கொட்டிற்று. முதலிலே, இது யாரோ வேண்டுமென்றே பொறாமையாலே கட்டி விட்டது என்று எண்ணினான்; விவரம் அறிந்துவர நகரம் சென்று திரும்பிய பிறகுதான், அவனுக்கு மனமே உடைந்து விட்டது. அங்கு தெளிவாகவே சொன்னார்கள்; பல கிராமங்களிலே இந்தச் செய்தி தெரிந்து, விவசாயிகள் தலைமேலே கை வைத்துக் கொண்டு கிடக்கிறார்கள் என்று கூறினர். குச்சிக் கிழங்கு, உள்நாட்டிலே செலவாகக்கூடிய பண்டம் என்ற எண்ணத்திலே, விவசாயிகள் அதைப் பயிர் செய்யவில்லை; எனவே வெளிநாட்டுக்குக் கிழங்கு தேவையில்லையாம் என்று கூறப்பட்டது கேட்டு மெத்தக் கலங்கிப் போயினர்.

''பைத்யக்காரப் பய! யாரோ பட்டணத்துக்காரனுக பேச்சைக் கேட்டு இவனும் கெட்டான்; மத்தவங்களையும் கெடுத்துப்பூட்டான். இவன் பேச்சை நம்பி, குச்சிக் கிழங்கு பயிர் வைத்தவனெல்லாம் 'கோ'ன்னு கதறிக்கிட்டு கிடக்கிறானுங்க—இவனுக்கு என்ன ஒண்டிக் கட்டை - மற்றவங்க - பலபேரு சிறுசும் பெரிசுமா டஜன் கணக்கிலே வைத்துக் கொண்டு கஷ்டப்படறாங்க. இப்ப, இவனா, எல்லாரோட கிழங்கையும் வாங்கிக் கொள்ளப் போறான்'' என்று சிலர் பேசினர். வேலப்பனுக்கு ஆத்திரம் வந்தது. 'நானே மனம் வேதனைப்பட்டுக் கிடக்கிறேன்; இந்தப் பாவிகள் வேறு என்னை வாட்டி எடுக்கிறார்களே. செச்சே, என்ன ஜென்மங்களய்யா இதுகள்' என்று முணுமுணுத்தான்.

செல்லாயி, நிலைமை அறிந்து, சிரித்துப் பேசினாள்! வேலப்பனுக்குக் கோபமாக இருக்கும் என்பதை எண்ணி,

முகத்தைத் தொங்கவிட்டுக் கொண்டாள். சலிப்பும், சோக மும் கொண்டாள். ஒவ்வோர் நாளும் உச்சிப் போதுக்குள் மடுவில் இறங்கிக் குளித்து விடுவாள்; தலையைக் கோதிக் கட்டிக் கொள்வாள்; 'கிழிசல்' தெரியாமல், சேலையைப் பக்குவமாகக் கட்டிக் கொள்வாள். தலைக்கு காட்டுப் பூவா வது பறித்துச் சூட்டிக்கொள்வாள், கலகலவென்று சிரித்துப் பேசுவாள்.

''கால் பூமியிலே பாவுதா' பார்டா அந்தக் குட்டிக்கு. நடக்கறப்போதே இவளை என்னமோ இந்தப் பூமி தூக்கித் தூக்கிக் குலுக்கிவிடறது போலல்லவா நடை போடறா... நாட்டியக்காரியாட்டமா...'' என்று கேலியாகப் பேசுவார் கள் செல்லாயியை; கிழங்குக்குக் கிராக்கி இல்லைஎன்பதாலே வேலப்பன் விசாரப்பட்டான்—அதைக் கண்ட செல்லாயி, நாலு குழந்தைக்குத் தாயாகி, நாத்தி மாமி கொடுமையாலே நசுக்குண்டு போனவள் போலானாள்.

''அது ஒண்ணுத்தான் குறைச்சல். ஆமாமாம்! எல்லா ரும் நல்லவங்கதான்..அவங்க அவங்க பாடு அவங்களோடே'' என்று எதற்கும் எரிச்சலுடன் பதில் பேசுவாள். உடம்பு 'கசகச' வென்றாகிவிட்டதே; கழுவித் தொலைப்போம் என்றுதான் மடுவில் இறங்குவாள்—முன்புபோல மகிழ்ச்சி யுடன் அல்ல.

அவளுக்கு வேலப்பனைப் பார்க்கவே பயமாக இருந்தது!

என்ன வேதனைப் படுகிறானோ, எவ்வளவு கோப மாக இருக்கிறானோ, இந்த நேரத்தில் போய்ப் பேசினால், அவனுக்கு மேலும் வேதனைதான் கிளம்பும்; மேலும், என்ன வென்றுதான் பேசுவது! போனா போவுது, கிழங்கு விலை போகாவிட்டா என்னா, கரும்பு இல்லையா, புகையிலை யிலே பணம் வராதா, என்றா தைரியம் பேச முடியும்? அதையே அல்லவா அவன் நம்பிக் கொண்டிருந்தான். வேறு வழி ஏது? அந்த வேதனையை மாற்ற முடியுமா? என்று எண்ணினாள்; இந்தச் சமயம் அடிக்கடி சென்று வேலப்ப னைப் பார்ப்பதுகூடச் சரியல்லவென்று எண்ணிக் கொண் டாள்.

''நான் இருக்கிற இருப்புக்கு இப்ப கண்ணாலம் ஒண்ணு தான் குறைச்சல். எது எப்படிப் போனாலும் என்ன, என் பின்னோடு சுத்திகிட்டுத் திரி என்கிறாயா? தா! புள்ளே! என் எதிரே நின்னுகிட்டு இப்படி பல்லைக் காட்டாதே. நான் இருக்கிற ஆத்திரத்திலே எனக்கு அரிவா மேலேதான் கவனம் போவுது. அடி அம்மா! மவராசி! கொஞ்சம் உன்னோட அலுக்கு குலுக்கையெல்லாம் அடக்கி வைச்சிரு...'' என்று ஏதாவது கோபத்திலே ஏசுவான் என்ற பயம் செல்லாயிக்கு. அதனாலே, அவனை அடிக்கடி சந்திப்பதைக் குறைத்துக் கொண்டாள்; பார்க்க நேரிடும்போதும், பழகாதவள் போல கேட்ட கேள்விகளுக்குப் பதில் கூறிவிட்டு வந்துவிடுவாள்.

''எல்லாம் இருக்கிறவரையிலேதான் மக்கமனுஷாள், சுற்றம் உறவு எல்லாம். பாரேன், இந்தச் செல்லாயியை; நாளைக்கு நாலு தடவையாவது ஓடியாந்து நச்சரிப்பா, இப்ப என்னடான்னா, பார்த்தும் பார்க்காத மாதிரியாப் போறா; பழகாதவ மாதிரியா நடந்து கொள்றா! பவுன் நகை இனி கிடைக்காது என்கிறதாலே, வேண்டா வெறுப்பாப் பேசறா. இவ்வளவுதான் இதுகளோட சுபாவம். நம்ம போறாத வேளை; இதுவும் நடக்கும், இதுக்கு மேலேயும் நடக்கும்'' என்று வேலப்பன் எண்ணிக் கொண்டான். வேதனை மேலும் வளர்ந்தது.

ஒருவருக்கொருவர் மனம்விட்டுப் பேசிக் கொள்ளாததாலேயே சந்தேகமும், சஞ்சலமும் இருவருக்கும் வளர்ந்தது. அதிக நாட்கள் இதை நீடிக்கவிடக்கூடாது, ஒரு நாளைக்கு அவளை வெட்டு ஒண்ணு துண்டு இரண்டாகக் கேட்டுவிட வேண்டியதுதான் என்று வேலப்பன் முடிவு செய்து, நாளைக்கு அந்த வேலைதான் முதலில் என்று எண்ணினான். அவனை அந்த வேலையைச் செய்யாவிடாமல் தடுத்திட, வேறோர் அவசர வேலை குறுக்கிட்டது.

''ஓட்டு'' கேட்கறபோது, தினுசு தினுசான மோட்டாரிலே, இங்கே வந்து, கெஞ்சிக் கூத்தாடினானுங்களே, பெரிய மனுஷனுக! இப்ப பார்த்தாயா, கழனி காஞ்சி போனாலும்,

குளம் வத்திப்போனாலும், எந்தக்கஷ்டம் வந்தாலும், என்ன டாப்பா, கஷ்டத்துக்குக் காரணம்? நான் என்னா செய்ய யணும் சொல்லு? அப்படின்னு கேட்க ஒருத்தன் வந்தானா பார்த்தாயா? எல்லாம் 'ஓட்டு' வரைக்கும்தான், இவனுங்க ளோட ஒட்டு உறவு'' என்று துவக்கினான் ஒருவன்—வேலப் பன் குடிசையில்.

''ஆமாம், அப்பொ, ஆயிரத்தெட்டு சிபாரிசு பேசி னானுங்க...கவுண்டரே கவனிச்சிக்கங்க...கோனாரே, கை போட்டுக் கொடுங்க, தேவரே, என்னை உங்களுக்கு இருவது வருஷமாத் தெரியுமே என்றெல்லாம் சொந்தம் பேசினா னுங்க...''

''ஆமாண்டா, விடுடா! நமக்குப் அப்ப, உச்சி குளுந் துப் போச்சு. இவ்வளவு பெரிய மனுஷனுங்க, நம்மைத் தேடிகிட்டு வரானுங்கன்னு, நாமும் அவனுங்களுக்காக ஓடி யாடி வேலை செய்தோம். ஓட்டுப்போட்டா ஊர் க்ஷேமமா இருக்கப் பாடுபடுவீங்களா, எப்படிச் செய்யப் போறீங் கன்னு ஒரு பேச்சு கேட்டமா? நம்ம ஜாதிக்காரன், நம்ம பக்கத்துக்காரன், என்று எதை எதையோ நம்பினமே தவிர, நாணயமானவனா, யோக்கியமானவனா, நல்லபடி உழைச்சி ஊருக்கு உபகாரம் செய்யப்போறவனா என்கிற எதைப் பற்றியும் யோசிக்கலே. மகாத்துமா தெரியுமேலேன்னு கேட் டான். ஆமா அவரு என்னங்க, கடவுளோட அவதாமுரன்னு கைகூப்பினோம்; மத்த எதையும் யோசிக்கலே...''

''ஏன் யோசிக்கலை! நம்ம காளியாத்தா கோயில் கோபுரத்துக்குக் கலசம் வேணுமுன்னு கேட்டோமே...''

''அட, அது ஒரு பிரமாதமா...ஐம்பதோ நூறோ ஆகப் போவுது...அவனுக, என்னதான் வேணும்சொல்லுங்க இதிலே என்ன தப்புங்க, என்னாலானதை நான் செய்ய ணும்னு எனக்கு ஒரு ஆசை. வேறே ஒண்ணுமில்லே. அப்படி இப்படின்னு சொல்லவே, சரி, எதையோ ஒண்ணு கேட்டு வைப்பமேன்னு, ''கலசம்'' வேணும்னு கேட்டோம்...இது ஒரு பெரிய தப்பா?''

''வீண் விவகாரத்தை விட்டுத் தொலைங்கப்பா! தும்பை விட்டுப்போட்டு, வாலை பிடிக்கறது நம்ம பழக்கமாப் போயிட்டுது. அவனுங்க சமயத்திலே காலைப் பிடி, தீர்ந்து போனதும் தலையைப் பிடி என்கிற வித்தையிலே கைதேர்ந்தவங்க; அது கிடக்கட்டும். இப்ப என்ன செய்யறது சொல்லுங்க. குச்சிக் கிழங்கு விலை போகலேன்னா, நம்ம பக்கத்திலே வேணகுடி பாழாயிடும்...இதை என்ன செய்யறது? சொல்லுங்க.''

''அழுகிற புள்ளெக்குத்தானே பால் கிடைக்கும்.''

''அட, அதான் கேட்கறேன், எங்கே போயி அழுகறது, என்னா சொல்லி அழுகறதுன்னு...''

''மந்திரிகிட்டப் போகலாம் என்கிறாங்க...''

''யாரு? நாமா? மந்திரிகிட்டவா? மடைப்பய மகன்! அவனுங்க மந்திரியாவதற்கு முன்னே போனால் பார்த்திருக்க முடியும்—இப்பத்தான் மந்திரி ஆயிட்டாங்களே, இப்ப எப்படிப் பார்க்க முடியும்?''

''அமைச்சிகிட்டுப் போறேன். ஊருக்கு ஒருத்தர் இரண்டு பேரா சேர்ந்து, ஒரு கமிட்டி போட்டா, போய்ப் பார்க்கலாம்னு...''

''யாரு, நம்ம கொடிமரத்தான் சொல்றானா...?''

''ஆமாம். அவன் அடிக்கடி போய்ப் பார்க்கறானே மந்திரியை.''

''சரி. அதுக்கு என்ன செய்யணுமாம்?''

அட, இதெப்போயி, கொடிமரத்தானையேதான் கேக்கறதா? நமக்குப் புரியலியா? நாம் என்ன அவனோட கஷ்டத்துக்கு, எதாச்சும் நம்மாலே ஆகிற சகாயத்தைச் செய்யவா மாட்டோம்.''

''இப்ப, எல்லா மந்திரிகளும், கவர்னர்கூட, ஒரு பெரிய திருவிழாக்குக் கூடப் போறாங்களாம். அங்கேயே போய்ப் பார்த்துடலாம்னு, கொடிமரத்தான் யோசனை சொல்றான்...அவனும் நாம ஒரு நாலு பேருமாப் போய் வர

செலவுக்கு, மகா நாட்டுக்கு டிக்கட்டு, சாப்பாட்டுச் செலவு, மாலை மரியாதைச் செலவு, எல்லாம் சேர்ந்து நூறு நூத்தி ஐம்பதுக்கு மேலே பிடிக்காது என்கிறான். இதல்லாமபடிக்கு நாமெல்லாம் ஆளுக்கு கீழுக்கு ஒண்ணு மேலுக்கு ஒண்ணு கதர் துணி வாங்கிக்கிடணுமாம்—மந்திரிகளோட மகா நாட்டிலே கதரோட போனாத்தான் நம்ம பேச்சை, காது கொடுத்துக் கேட்பாங்களாம்...''

''கொடிமரத்தான் சொல்றானா?''

''ஆமாம்.''

**கொ**டிமரத்தான், வேலப்பன் தலைமையிலே கிளம்பிய 'கமிட்டி'யைக் கோவைக்கு அழைத்துச் சென்றான். எல்லா மந்திரிகளையும் காட்டினான்— நூறு கெஜ தூரத்தில் இவர்களை நிறுத்தி வைத்து.

''என்னை 'நீராகாரம் இருந்தாக் கொடு கவுண்டரய்யா!'' என்று கேட்டு வாங்கிச் சாப்பிட்டவர்தாம்பா, அதோ, மேசையை அடித்துப் பேசறாரே அந்த மந்திரி'' என்று கமிட்டியில் ஒருவர் சொன்னார்.

''இம்மாந் தொலைவிலே இருந்து இவங்களை 'தரிசனம்' செய்துட்டுப் போகவா, கொள்ளைப் பணத்துக்கு வேட்டு வைச்சிருக்கான் கொடிமரத்தான்'' என்று கமிட்டியிலே இருந்த ஒரு கோபக்காரர் கேட்டார்.

மந்திரி பேசிக் கொண்டிருந்தார்—பேச்சு என்று கூறுவது பொருத்தமல்ல; மிரட்டிக் கொண்டிருந்தார்.

'நம்முடைய ஜனங்களுக்கே ஒரு கெட்ட சுபாவம்! எப்போதும் ஏதாவது ஒரு குறையை எடுத்துக்கூறிக்கொண்டு மூக்காலேயே அழுதுகொண்டு கிடப்பார்கள். அது இல்லை, இது இல்லை; இதைக் கொடு, அதைக் கொடு என்று கேட்டுக் கேட்டு, ஆட்சியிலே இருப்பவர்களைத் தொல்லைப்படுத்தியபடி இருக்கிறார்கள். இது பாரதத்தின் பண்பு அல்ல...இதை நம்முடைய தலைவர்கள் பல தடவை எடுத்துச் சொல்லியும் வருகிறார்கள். வெற்றிலை கொடிக்காலிலே பூச்சி வந்துவிட்டது, சாமி! எங்களைக் காப்பாற்ற வேணும் என்று

போன வாரத்திலே ஒரு பத்து பேர் என்னை வந்து கேட்டார்கள். (சிரிப்பு) சிரிக்காதீர்கள். நாடு எவ்வளவு கெட்டு வருகிறது, நம்முடைய ஜனங்களுடைய புத்தி எப்படி மட்டமாகிக் கொண்டு போகிறது என்பதை எண்ணிப் பாருங்கள். இப்படிப்பட்டவர்களைப் பற்றித்தான் நமது தேசீய மகா கவி சுப்ரமணிய பாரதியார், ''நெஞ்சு பொறுக்குதில்லையே! இந்த நிலைகெட்ட மனிதரை நினைத்து விட்டால் நெஞ்சு பொறுக்குதில்லையே'' என்று பாடினார். எனக்குப் பாடத் தெரியாது. மாலையிலே அருமையாகப் பாடப் போகிறார்கள் ஸ்ரீமதி பட்டம்மாள். கேளுங்கள். பூச்சி வந்துவிட்டது; காப்பாற்றுங்கள் என்று என்னிடம் வந்து அழுதால் நான் என்ன செய்வது? நீங்களே சொல்லுங்கள்? (மீண்டும் சிரிப்பு) பூச்சிகளை ஒன்று விடாமல் பிடித்து நசுக்கிப் போடவா! (பலத்த சிரிப்பு) மந்திரியின் வேலை இதுதானா?...கரும்பு காய்ந்து போகிறது, கடலைக் கொட்டை கெட்டுப்போகிறது, இரும்பு கிடைக்கவில்லை, நெசவு நடக்கவில்லை, வாழை சரிந்துவிட்டது, வரகரசி முளைக்கவில்லை என்று எதையாவது சொல்லிக் கொண்டே இருக்கிறார்கள். இப்படி மூக்கால் அழுது கொண்டிருந்தால், நாட்டிலே சந்தோஷம் எப்படி ஏற்படும்? இப்படித் தொல்லை கொடுத்தால், நாங்கள் ஆட்சியை நடத்த நேரம் எப்படி கிடைக்கும். (ஒரு சீட்டு தரப்படுகிறது. அதைப் படித்து விட்டு) இதோ பார்த்தீர்களா, புதிதாக ஒரு அழுகுரல், குச்சிக் கிழங்குக்கு மார்க்கெட் இல்லையாம்! (சிரிப்பு) உடனே நிவாரணம் அளிக்கவும் என்று எழுதி இருக்கிறார், ஒரு அன்பர். என்ன நிவாரணம் அளிக்கச் சொல்கிறாரோ ஆண்டவனுக்குத்தான் தெரியும்! குச்சிக் கிழங்குக்கு மார்க்கெட் இல்லை என்றால், நான் என்ன செய்ய வேண்டும் என்கிறார்? கூடையில் வைத்துக் கொண்டு தெருத் தெருவாகச் சென்று குச்சிக்கிழங்கோ-குச்சிக் கிழங்கு என்று விற்கச் சொல்கிறாரா?...'' (பலத்த கை தட்டல், சிரிப்பு.)

''அடச் சே! எழுந்திருங்கடா, போவோம். மகாப் பெரிய மனுஷனுங்க'' என்று கோபமாகக் கூறிக்கொண்டே

பெரியவர் எழுந்தார். 'கமிட்டி' அவ்வளவும் கொட்டகையை விட்டு வெளியேறிவிட்டது; கொடிமரத்தான் பின்னாலே ஓடிவந்தான்.

''ஏன்? ஏன்? எங்கே கிளம்பிவிட்டீங்க?''

''எங்கேயா? கூடை வாங்கிகிட்டு வந்து, உன்னோட தலைவன் தலையிலே கவிழ்க்க. வெட்கமில்லாமெ எங்கூ ளண்டை பேச வேறே வந்துட்டாயா...?''

''என்னங்க இது, எதுக்கு இவ்வளவு கோபம்?''

''கோவம் வரலாமா, பாவம்! அங்கே வாரி வாரிக் கொட்டறானே ஒரு புத்திசாலி, கருணையை; அதைப் பார்த்துமா கோவம் வரலாமான்னு கேட்கறே! ஆக வேண்டிய காரியம் ஆயிடுச்சி. இனி நாம அடிச்சவரையிலே இலாபம்னு எண்ணிகிட்டு, அந்த மனுஷன், ஆகாசத்துக்கும் பூமிக்குமா, குதிச்சுக் குதிச்சுப் பேசறானே—ஜனங்க மூக்காலே அழறாங் கன்னு...இவனுங்க நாட்டை நடத்தற நடப்புக்கு, ஜனங்க அழாமெ, இவனுங்க எதிரே வந்து டான்சு ஆடுவாங்க, டான்சு...என்னா எடுத்தேன்—கவிழ்த்தேன்னு பேசறான் அந்த மனுஷன். கஷ்டப்படறம். அதைச் சொல்லி, ஐயா! அப்பான்னு! வேண்டிக் கொள்றோம்...அதைக் கேக்கப் பொறுக்கலியாமே இவருக்கு. குச்சிக் கிழங்குக்கு மார்க்கட்டு இல்லையானா, நான் என்ன செய்ய, கூடையிலே வைச்சி கிட்டு விற்கவான்னு கேட்கறானே, இதுவாய்யா ஒரு மந்திரி பேசற மரியாதையான பேச்சு? குத்தல் பேச்சு இல்லியா அது? அவனவன் கும்பிகாயுதேன்னு கஷ்டப்பட்டுகிட்டு, இவனுங்க கிட்டத்தானே அதிகாரம் இருக்குது, போயி நம்மோட குறையைச் சொல்லுவோம்னு வந்தா, கூடையிலே வைச்சிகிட்டு விற்கவான்னு கேலி பேசறாரு...பெரிய குபேரரு! வித்தா என்னவாம்—தலையிலே கூடையைத் தூக்கி வைச்சா, பூமி பொளந்துடுமா, இல்லை, இவரோட, மண்டை வெடிச்சுடுமா..பேசறான் பார், மகாபெரிய மேதாவின்னு நினைச்சி கிட்டு. போன வருஷம் நான் என் கண்ணாலே பார்த்தனே நெசவுக்காரனுக கஷ்டப்படறாங்கன்னு சொல்லி, கைத்தறித் துணி மூட்டையைத் தூக்கித் தோளிலே போட்டுக்கிட்டு

தெருத் தெருவாப்போய் வித்தானுகளே, இந்தக் கழகத் துக்காரனுங்க...கௌரவமா போயிடுச்சி...மக்களோட கஷ் டத்தை உணர்ந்த மகாராஜனுகன்னு ஏழை எளியவங்க வரவேத்தானுக...இவர் என்னடான்னா, கிண்டல் பேச றாரு, கிண்டல்! கூடையைத் தூக்கினதே இல்லை...பொறக் கறப்பவே ஓட்டுப் பொட்டியோட பொறந்தவரு...''

''இதோ பாருங்க...இந்த மந்திரி இப்படித்தான் எப்ப வும் வம்பும் தும்பும் பேசறவரு..இவர் போலவா மத்தவங்க? ...போகாதீங்க...இருங்க...மத்த மந்திரிகள் பேசறதைக் கேளுங்க...''

''ஏன், இந்த ஒரு மந்திரி அபிஷேகம் பண்ணினது போதாது, மத்தவர்களோட அர்ச்சனையையும் கேட்டுட்டுப் போகலாம் என்கிறாயா? அடே அப்பா! கொடிமரம், போதும்டா எங்களுக்கு. வேணுங்கிறது கிடைச்சுப் போச்சு. உனக்கு வேணுங்கிறதையும் நாங்க கொடுத்தாச்சி; எங் களை இத்தோடு விட்டுடு...மானமாவது தக்கட்டும்.''

கமிட்டியினர் கடுங்கோபத்துடன் செல்வது கண்டு கொடிமரத்தான் பயந்து போனான்— திரும்பி அதே கிராமத் திலே நடமாடவேண்டுமே!

**வேல**ப்பனுக்குத்தான் இதனால் அதிகச் செலவு; கிழங்கு 'கால்வாசி' விலைக்குக் கூடப் போகவில்லை. 'முட்டு வழி' கட்டி வரவில்லை. கிழங்குப் பிரச்னையைத் தீர்த்து வைக்க எடுத்துக் கொண்ட முயற்சியால் கடன் வேறு; வேலப் பன் கலியாணத்தைப் பற்றிய எண்ணத்தையே விரட்டி அடித்தான்; செல்லாயியால் கண்ணீர் சுரப்பதைத் தடுக்க முடியவில்லை. கன்னம் அந்த முத்துக்களை தாங்கிக்கொள்ள மனமின்றி, நெஞ்சிலிருந்து கிளம்பியவை அங்கேயே போய்ச் சேரட்டும் என்று அனுப்பிவிட்டது.

''வேலப்பா! ஏண்டாப்பா! இதுக்கெல்லாமா மனசைத் தளர விட்டுவிடறது? இதுவரையிலே நான் இதுபோல எத் தனை கஷ்டத்தைத் தாங்கிகிட்டேன். காஞ்சிருக்கும், மழை யாப் பொழிஞ்சி அழிச்சி இருக்கும், மாடுகண்ணு 'கோமாரி'

யிலே செத்திருக்கும், மனஷாளுகளே மாண்டு போயிருக் காங்க பலா மா திரி நோயாலே...அதுக்காக இப்படியா, மனசு ஒடிஞ்சி போயிட்டேன். பைத்யக்காரப்புள்ளே? போயி, காரி யத்தைப்பாரு. இந்தத் தடவை இல்லாவிட்டா, அடுத்த வரு ஷம் நல்லது ஏற்படுது, என்னா இப்ப? உனக்கு என்னடா குறைச்சல்! எனக்கு இந்தத் தடவை 'சோளம்' நல்லபடி இருக்குது—போதுமே நமக்கு''—என்று சடையாண்டி பல முறை ஆறுதல் கூறியும் வேலப்பனுக்குத் திருப்தி ஏற்பட வில்லை. விசாரம் அவனை வாட்டியபடி இருந்தது. காரண மின்றிக் கோபம் வரும், கண்டவருடன் வம்புக்குப் போகத் தோன்றும், மாடு கன்றுகள்கூட அவன் கோபத்தைத் தாங் கிக் கொள்ள வேண்டி வந்தது. செல்லிக்கு அவனைப் பார்க் கும்போது நடுக்கமே ஏற்படும்—சுட்டுத் தள்ளிவிடுவது போலப் பார்க்கிறான்!

''சுத்தமாகக் கழுவிடணும், தெரியுதா...துளி சேறு இருக்கப்படாது...'' என்று கூறி, மோட்டார் ஓட்டிக் கொண்டு வந்தவன் எட்டணாவைக் கொடுத்தான், பொடிப்பயலிடம். அவன் அந்த மோட்டாரை மிகச் சுத்த மாகக் கழுவித் துடைத்துக் கொண்டிருந்தான். அலுப்பி னாலே, மரத்தடியில் துண்டு விரித்துப் படுத்துத் தூங்கிவிட் டான், மோட்டார் ஓட்டிக்கொண்டு வந்தவன். அவன் விழித் தெழுந்ததும், சொல்லிவிட்டுப் போகலாம் என்று, பொடிப் பயல் அங்கேயே உட்கார்ந்து கொண்டிருந்தான்.

வேலப்பன் அந்தப் பக்கம் வந்தவன், காருக்குப் பக்கத் திலே சிறுவன் இருப்பதைக் கண்டு, ''ஏண்டா? ராத்திரிக் கூடச் சாப்பிடலயே, காலையிலே எங்கே சுத்த வந்துட்டே, கஞ்சி கொடுக்கத் தேடினேன், காணமே...ஆமா, இது என்ன மோட்டாரு...இவரு யாரு, துரை, சொகமாத் தூங்கறாரு?' என்று கேட்டான்.

''பார்த்தயாண்ணேன், எட்டணா ..எருமைமாடு மூணு தேச்சிக் கழுவற மாதிரிதான், இருந்திச்சி—இந்த மோட்டா ரைக் கழுவி விட, எட்டணா கிடைச்சுது! மந்தை எருமையை மேய்ச்சி தேய்ச்சி குளிப்பாட்டி விட்டாக்கூட, கால்காசு

கிடைக்காது. இங்கே பாரு, எட்டணா?'' என்று சிறுவன் பெருமையாகச் சொன்னான்.

''ஆமாம்டா, இனி இப்படித்தான், மோட்டாரு கழுவி நீ பிழைக்க வேண்டியதுதான். நானும் ஏதாவது ரயில் துடைகப் போக வேண்டியதுதான். வேறே புழைப்பு! அப்படியாப் பட்ட குச்சிக்கிழங்கு போட்டே கட்டிவராமே கஷ்டம் வந்துடுச்சின்னா, இனி இங்கே எதை நம்பிகிட்டுக் கிடக்கறது'' என்றான் வேலப்பன்.

மரத்தடியில் படுத்துத் தூங்கிக் கொண்டிருந்தவன் விழித்துக் கொண்டான்.

''டிரைவரு! உனக்கு என்னா சம்பளம் கொடுக்கறாங்க?'' என்று கேட்டான் வேலப்பன்.

''மோட்டார் கார் ஓட்டுபவனுக்கு நாற்பது, ஐம்பது ரூபா சம்பளம் கிடைக்கும்.'' என்றான், அவன்.

''பாரேண்டா, இவரு பேசற தினுசை? உனக்கு உங்க எஜமான் எம்மாஞ் சம்பளம் கொடுக்கறார் சொல்லய்யான்னா...''

''அதுவா? எனக்கு எஜமான் இல்லையே; நான் டிரைவர் இல்லே...என்னோட 'கார்' தான் இது...'' என்றான் அவன்.

''என்னது? விளையாடறிங்களா...''

''இல்லேப்பா! விளையாட்டு என்ன இதிலே? கார் என்னுடையதுதான்...''

''அப்படியா...நானு...நீங்க...மரத்தடியிலே படுத்துத் தூங்கிகிட்டு இருக்கவே, டிரைவருன்னு...''

''மரத்தடி! மாந்தோப்பு! மணம்! ஏர் உழவர் பாடல்! ஏத்தப்பாட்டு! நாத்து நடும் பெண்கள்! எங்கும் பசுமை! எங்கும் புதுமணம்!' என்று உற்சாகத்துடன் கூறிக்கொண்டே அந்த ஆசாமி, சுற்றிலும இருந்த காட்சிகளைப் பார்த்துக் கொண்டிருந்தான். வேலப்பனுக்குச் சிரிப்பதா, அழுவதா என்று தெரியவில்லை. வாழ்க்கை குன்றுகிறது; இனிக் கிராமத்திலே இருந்துகொண்டு காலந்தள்ளுவது முடியாது.

கிராமத்தைப் பார்த்துப் பார்த்து வெறிச்சென்று கிடக்கிறது. உழைப்பது தவிர வேறொன்றும் காணோமே, பட்ட பாட்டுக்குப் பலன் கிடைக்கவில்லையே, இதை விட்டுத் தொலைந்தால் போதும் என்று எண்ணிக் கொண்டிருக்கிறான். இங்கே ஒருவர்—அவரும் இளைஞராகத்தான் இருக்கிறார்—வாழ்க்கையில் வசதி உள்ளவர்—மலரே! மணமே! மடுவே! மாடே! ஏரே! எழிலே! என்று ஏதேதோ கூறி மகிழ்கிறார்!!

வேலப்பன் பெருமூச்செறித்தான்...

''கிராமத்துக் கவர்ச்சி, புகை கப்பிக்கொண்டு சந்தடி அதிகமாகிக் கிடக்கும் நகரத்திலே ஏது!''

''பணம் நிறைய இருக்கு அங்கே...''

''பணமா? ஆமாம், அது இருக்கிறது; ஆனால் பண்பு இங்கேதானப்பா இருக்கிறது...''

''என்னமோ போங்க, வேடிக்கையாகப் பேசறிங்க! உங்களிடம் இருக்கிறது எங்களிடம் இல்லையேன்னு நாங்க கிராமத்துக்காரரு கஷ்டப்படறோம்; நீங்க வேறே எதுவோ ஒண்ணு எங்களண்டை இருக்குன்னு சொல்லிப் புகழ்ந்து பேசறிங்க...''

''கண் இருக்க வேண்டியதுதானப்பா, ஆனா கண்ணாலே பார்க்க, நல்ல பொருள் இருக்க வேண்டுமல்லவா? பார்க்க பாம்பும் தேளும், படுகுழியும் நெருப்புக் குண்டமும் தான் இருக்கிறது என்றால், கண் இருந்துதான் என்ன பயன்?''

''அது சரிங்க, ஆனா, பவுன் பவுனா கொட்டி இருக்கு, தினுசு தினுசா பண்டமிருக்கு, வகை வகையா அருமையான சாமான் இருக்கு, ஆனா இதை எதையும் பார்க்கக் கண் இல்லேன்னா, என்னாங்க பிரயோஜனம்?''

''ஆஹா.பாரேன், இதையே அங்கே படிப்பு இருக்கிறது புளியேப்பம் வருமளவுக்கு. ஆனால் இதோ இப்போது நீ பேசினியே, அந்தப் பக்குவம் அந்த நகைச்சுவை, அந்த அறிவு இருப்பதில்லையே...''

''நீங்க யாருங்க...''

''பைத்யக்காரன் இல்லப்பா. இப்படிப் பேசினதாலே உனக்கு இப்படி ஒரு சந்தேகம் ஏற்பட்டிருக்கும். நான் பைத்யம் பிடித்தவனல்ல! கிராமத்திடம் எனக்கு அவ்வளவு பாசம், மதிப்பு, மோகம் என்றுகூடச் சொல்லலாம். பத்து நாளைக்கு ஒரு தடவையாவது, ஏதாவது ஒரு கிராமம் சென்று, அங்கே உள்ள காட்சிகளைப் பார்த்தால்தான் என் மனதிலே, ஆயாசம், அலுப்பு எல்லாம் போகும். ஒரு புதுத் தெம்பு ஏற்படும்.''

''அப்படி ஒரு பழக்கமா உங்களுக்கு...எங்களுக்கு ஒரு ஆறுமாசத்துக்கு ஒரு தடவையாவது, 'டவுன்' பக்கம் போயி; பளபளா விளக்கு, பலவர்ண ஜொலிப்பு, சினிமா, பஜாரு—இதை எல்லாம் பார்த்தாத்தான், ஒரு மாதிரி தெம்பு... ஆனா அதுக்குக் கொஞ்சம் காசு செலவாகும்...அதுதானே இங்கே கிடைக்கறதில்லை...ஆசையிலே மண் விழுந்துடுது அப்போதைக்கப்போ...''

மோட்டார் புறப்பட்டுவிட்டது—வேலப்பனுடைய மனம் அந்த 'மோட்டாருடன்' சென்றுவிட்டது; உடல் மட்டும்தான் கிராமத்தில் உலவிக் கொண்டிருந்தது.

அதுவும் கொஞ்சநாள்தான். வேலப்பன், 'டவுன்' வாசியாகிவிட்டான்—நிலத்தை யாருக்கோ கொடுத்துவிட்டு கடனைக் கட்டிவிட்டு, கையில் கொஞ்சம் பணம் எடுத்துக் கொண்டு சென்றான். இதை வைத்து ஏதாவது தொழில் செய்யவேண்டும், வியாபாரம் நடத்தவேண்டும் என்று பல மாதிரி திட்டங்கள் மனதில். நிலம் கைமாற முடிந்தது. செல்லத்தின் மனம்? படாத பாடுபட்டது.

மடியிலே நாலு நூறு ரூபாயுடன் டவுனில் நடமாடிய போது, வேலப்பனுக்கு எப்போதும் ஏற்படாத ஒரு தெம்பும், தைரியமும் வந்தது. கடை வீதியிலே உலவும்போது அவன் கண்களிலே நம்பிக்கை ஒளிவிடும். சின்னக் கடையாக ஆரம்பித்து சாமர்த்தியமாக வியாபாரத்தை நடத்தித்தானே இவர்களிலே பலர், பெரிய கடைகள் வைத்துக் கொண்டு பணம் சேர்க்க முடிந்தது. நாம் ஏன் இப்படி செய்யக் கூடாது?

ஏன் நம்மாலே முடியாது? என்று எண்ணிக் கொள்வான். அவன் உள்ளத்தில் ஓராயிரம் யோசனைகள் தோன்றித் தோன்றி ஒன்றோடொன்று மோதுவதாலே சில நொறுங்கிப் போயின; யோசனைகள் குழம்பிவிட்டன. யாராவது தக்கபடி யோசனை சொன்னால் மட்டுமே நல்லது என்று எண்ணிக் கொண்டான்.

'டவுன்' இதற்காக ஆளை வைத்துக் கொண்டில்லை? இதையே பெரிய தொழிலாகக் கொண்டவர்களை, அவன் தெரிந்து கொண்டதில்லை—அவனாலே கண்டுபிடிக்க முடிய வில்லை—இவனைக் கண்டு கொளளவா அவர்களால் முடி யாது. முதலில் மோப்பம் பிடித்தவன், முத்தையன்—மூலக் கடை முத்தையன் என்பது அவனுக்குப் பட்டப் பெயர். ஆனால், அவனுக்குக் கடை கிடையாது. மூலக்கடை, மூசா ராவுத்தருடையது. அங்கு எப்போதும் வட்டமிட்டபடி இருப்பான். அதனால் அந்த வட்டாரத்தினர், அவனுக்கு மூலக்கடை முத்தையன் என்று பெயரிட்டனர்.

முத்தையன் வழக்கப்படி நாலு நட்சத்திர பீடியைப் பற்ற வைத்துக் கொண்டு, புது வியாபாரத் திட்டமொன்றை மூசா ராவுத்தருக்கு விளக்கிக் கொண்டிருந்தான்.

''பத்து இருக்குமேல்லோ ராவுத்தரே வருஷம், நீ இங்கே வந்து? என்ன செய்திருக்கே இதுவரையிலே? பத்துப்பவுனிலே நகை செய்தாயே, அதுதானே...''

''அதுமட்டும் இப்ப இருக்குதா? பள்ளிக்கூடம் படிக் குது...''

''ஆமாம் மறந்துட்டேன்...இந்த ஆனைமார்க் அல் வாப் பொட்டலம் வாங்கி, எல்லாம் நாத்தமடிச்சு போயி, சாக்கடையிலே வாரிக்கொட்டிவிட்டாயே! அதிலே வந்த நஷ் டத்துக்குப் போய்விட்டதில்லை, மறந்துட்டேன். உனக்கு எங்கேய்யா, நம்ம பேச்சு ஏறுது? எந்தெந்தப் பயலோ புழைக் கிறான்; நான் சொல்ற ஏற்பாட்டைக் கச்சிதமாச் செய்து, நமக்கு வேண்டிய மனுஷராச்சேன்னு நான் உன்கிட்டே ஒவ்வொரு பிளானையும் சொல்லிக்கிட்டுத்தான் வர்றேன். கேட்டாத்தானே.''

''ஏய்பா. நீ சொல்கிறபோது 'ஜோரா'த்தான் இருக்கு திட்டம். பிற்பாடு யோசிக்கறப்போ, பயம் ஏற்படுதே. புது வெள்ளம் வந்து பழைய வெள்ளத்தை அடிச்சிக்கிட்டுப் போவுது என்பார்களே, அதுபோல. புதுசா ஏதாச்சும் செய்ய ஆரம்பிச்சி உள்ளதும் போயிட்டா என்னா செய்யறது என்கிற திகில்தான்...''

''உனக்குக் கொடுத்து வைக்கலேன்னு சொல்லு. கோழி அடைகாக்கற மாதிரியா, உனக்கு இந்தப் பெஞ்சிலே உட்கார்ந்து பழக்கமாயிட்டுது...வேறே யோசனை உதிக்கிறதில்லே...''

வேலப்பன், தன் வேட்டியும் சட்டையும் அழுக்காகிவிட்டதால் வெளுக்க, சோப் வாங்குவதற்காக வந்தான். அவன் இலவசமாகத் தங்கியிருந்த இருளப்பன், மில்லில் தொழிலாளி; ஆறுகுடித்தனத்துக்கு நடுவில் இருந்துவந்தான். குளிக்க, துணி துவைக்க பொதுக் குழாய்தான் வேலப்பனுக்கு.

''சோப்புக் கட்டி ஒண்ணு.''

''யாரடா, தம்பி! புதுசா இருக்கே? நீ ஒரு சோப்புக் கட்டி கேட்கிறபோதே எனக்குப் புரிஞ்சிப் போச்சு, நீ டவுனுக்குப் புதுசு என்பது. எந்த ஊரு?'' என்று மூசா அல்ல, முத்தையன் கேட்டான்-கேட்டுவிட்டு, மூணுகட்டி கொண்ட பாக்கெட்டு நாலணா விலை—ஒரு கட்டியா வாங்கினா ஒண்ணரை அணா ஆகுது; பாக்கெட்டா வாங்கினா இலாபமாச்சே! அதுகூடத் தெரியாதவனா இருப்பதைப் பார்த்துத்தான் நீ டவுனுக்குப் புதுசுன்னு தெரிஞ்சிக்கிட்டேன்'' என்று முத்தையன் விளக்கம் கொடுத்தான்—மூசா ஒரு பாக்கெட் கொடுத்தார்—பணம் கொடுத்தான் வேலப்பன். புத்தியை முத்தையனிடம் பறி கொடுத்தான்.

மாதம் மூன்று ஆவதற்குள் ஆறு வகையான தொழில் செய்தாகிவிட்டது—அத்தர் வியாபாரத்தில் தொடங்கி வத்தல் வியாபாரம் வரையிலே நடந்தது—பணம் மிச்சம் பத்துப் பதினைந்து என்ற அளவு வந்த பிறகுதான், மறுபடி

மூசா ராவுத்தருக்கு யோசனை கூறிக்கொண்டு நாலு நட்சத்திர பீடி பிடிக்க மீண்டும் சென்றான் முத்தையன்.

அதிர்ஷ்டம்னு ஒண்ணு இருந்தா இப்படி ஏன் அலைந்து திரிய வேண்டி இருக்குது... இதோ பார் வேலப்பா! நானும் டவுனுக்கு வந்த புதுசிலே, மில்லுக்குப் போக மனம் வர வில்லை—பல்பொடி வியாபாரம், பால் வியாபாரம் எல்லாம் ஒரு மூச்சுப் பார்த்துவிட்டு பிறகுதான், வயித்துக்கு கிடைச்சாப் போதும்னு மில்லுக்குப் போனேன். நீ இன்னமும், 'கனா' கண்டுகிட்டே இருக்கறே. எப்படி மாறிப் போயிருக்கறே தெரியுமா? துரும்பா இளைச்சிப் போயிருக்கறே. எங்கே சாப்பிடறயோ, எப்போ சாப்பிடறயோ—இப்படி இளைச்சுப் போயிட்டே...''

''அதெல்லாம் ஒண்ணுமில்லே. நமக்கு எதைச் செய்தா பணம் கிடைக்கும்னு கண்டறிய புத்தி இல்லே...பணம் சம்பாதிக்கிறாங்கன்னா, அவங்களுக்கும் சூட்சம புத்தி இருக்கு; சுறுசுறுப்பு இருக்கு. நம்ம புத்தியைச் சொல்லு! ஒரே மந்தம்...''

''போடா, போ: எங்க மில்லுக்கு ஒருத்தன் வர்றான், முதலாளிகிட்டப் பேசறதுக்கு, எப்பவாவது! பெரிய பொதியன்—முகத்தைப் பார்த்தாலே முழு மூடம்னு தெரியும்—அவன் எவ்வளவு இலட்சம் சம்பாரிச்சு இருக்கான் தெரியுமா? ஐஞ்சாறு இலட்சம் இருக்கும்னு சொல்றாங்க...எல்லாம் பிராந்தி, விஸ்கி வித்துத்தான்... இதிலே புத்திசாலித்தனம் என்ன தேவைப்படுதாம்! குடிக்கிறவனுங்க, கண்ணு மண்ணு தெரியாமே விலை கொடுக்கறானுங்க; போதை, வெறி. இதனாலே, இலாபம் மத்த வியாபாரத்தைக் காட்டிலும் அதிகமா வருது; குவியுது! மத்தவனோட முட்டாள்தனத்தாலே இலாபம் வந்ததே தவிர, இவனோட புத்திசாலித்தனத்தாலே என்ன இருக்குதாம். இவனைப் பள்ளிக்கூடத்திலே, சுத்த மக்குன்னு சொல்லியே துரத்திவிட்டாராம், வாத்தியாரு...இப்ப இவனோட வாடகைக் கணக்கு எழுதிப் பிழைக்கறாரு—பெரிய அறிவாளின்னு சொல்றாங்க, அந்த ஆசாமியை...''

''அதுசரி, இப்பத்தான் மதுவிலக்கு இருக்கே...''

''ஆமாம்; மதுவிலக்கு இருக்குது, கடை வச்சி விற்கக் கூடாது—அவ்வளவுதான்...

''அப்படின்னா...?''

''இப்ப 'கடை'க்கு மனுஷாள் போறதில்லே. 'கடை' மனுஷாளைத் தேடிக்கிட்டுப் போகுது: திருட்டு வியாபாரம் நடக்குது. முன்னாலே பகிரங்கமா வியாபாரம் செய்தான்; இப்ப, அதுவே, இரகசியமா நடக்குது. இப்பத்தான் முன்னையப்போல மூணு மடங்கு இலாபம். எங்க மில்காரன்கிட்டே அவன் வாரானே, எதுக்கு? எல்லாம் இதுதான்!''

''அப்படியா சமாசாரம்—ஆனா, அதெல்லாம் பெரிய இடத்திலே தலைகாஞ்சதுக எங்கேயிருந்து வாங்கப் போகுதுங்க...அவங்களைப் பொறுத்தவரையிலே மதுவிலக்கு நிஜமாத்தான் இருக்கு...''

''அதுவும் தப்புதான்! அவங்க மட்டும் என்னவாம்! பொதியன் பாட்டில் சரக்கு விற்கிறான்; மத்தவன், மட்டம் விற்கிறான்...''

''மட்டமா...?''

''காச்சினதுடா: இப்ப அந்த வியாபாரம்தான் கன ஜோர்...நானே மாசத்திலே ஒரு அஞ்சு பத்து அதுக்குத் தொலைக்கறேன்.

''அடப்பாவி:...''

''என்ன நய்னா கவனிக்காமலே போறே? என்னதான் வாழ்வு ஒசந்துட்டாலும் இப்படி நட்டுப் பொட்டிட்டுக்கக் கூடாது...'' என்று ஆரம்பித்த மூலைக்கடை முத்தையன், ''அதுக்கென்ன அண்ணேன்!'' என்றான்.

''ஆசாமி! 'டாப்' திறந்துடறேன்...நம்மைச் சரியாவே கவனிக்கிறதில்லே...என்னடா எஜமானுக்குத்தான் உன்மேலே உசிராமேன்னு நம்ம ஜதைக்காரனுங்க பேசரானுங்க. இங்கே சரிவர நம்மைக் கவனிக்க ஆள் கிடையாது. எவ்வளவு கண்ணுங் கருத்துமா நான் கவனிக்கிறேன், ஒரு

காக்கா குருவிக்குத் தெரியுமா? ரகசியம். அப்படி எல்லாம் பாடுபடறேன்; ஏழை மேலே இரக்கம் காட்டாம இருந்தா நல்லதா சொல்லுங்க'' என்று கெஞ்சிக் கூத்தாடிப் பேசி, தாக சாந்திக்கு உதவி கேட்டுப் பெரும் அளவுக்கு வேலப்பனுடைய நிலைமை ஒரு ஆறே மாதத்தில் உயர்ந்து விட்டது. ஆசாமியின் நடை உடை பாவனையே மாறிவிட்டது... தொழில் அவனைப் புது ஆளாக்கி விட்டது. சுருள் மீசை—சந்தனப் பொட்டு—விரலிலே சிகரெட் டின்—இப்படி, கோலமே மாறிவிட்டது. வேலப்பன், கள்ளச்சாராய விற்பனையில் கைதேர்ந்தவனாகிவிட்டான். அவன் மட்டும் 'காச்சினது' சாப்பிட மாட்டான். நாற்பதோ, ஐம்பதோ, வீசி எறிந்தால், 'அசல்' கிடைக்கும். விஸ்கியோ, பிராந்தியோ, அதைத்தான் சாப்பிடுவான். மட்டம், இந்தப் பசங்களுக்கு; அதைச் சாப்பிட்டுவிட்டு குடல் வெந்து சிலது சாகும்; குளறிக் கூத்தாடி சிலது போலீசிலே சிக்கிக் கொள்ளும்—வேலப்பனுக்குப் புதிய அந்தஸ்தே ஏற்பட்டுவிட்டது, அந்த உலகத்தில்.

முதல் 'சில்க்' சட்டை தைத்துப் போட்டுக் கொண்ட போது, அவனுக்கு செல்வி மீது நினைவு சென்றது. அவள் கன்னமும் இந்தச் சட்டையும் உராய்ந்தால் எப்படியிருக்கும் ஆனந்தம் என்று எண்ணிப் பார்த்தான். விதவிதமான பட்டுச் சேலைகள், புது தினுசு ஜாக்கெட்டுகள், பவுன் நகைகள்—இவைகளை எல்லாம் வாங்கிக் கொடுத்து, செல்வி இவைகளால் தன்னை அலங்கரித்துக் கொண்டு, எதிரே நின்று கொண்டு சிரித்துப் பேசுவாள்—கனவில்!

அவனுக்கு பணம் சேரச்சேர, செல்வி என்ன நினைப்பாள்? இது ஒரு பொழைப்பா என்று கேவலமாகப் பேசுவாளோ! எந்தச் சமயத்திலே போலீசில் சிக்கிக்கொண்டு கம்பி எண்ணவேண்டி வருமோ, அடிமடியிலே நெருப்பைக் கட்டிக் கொண்டு வாழ்வது ஒரு வாழ்வா என்று வெறுப்போடு கேட்பாளோ என்றெல்லாம் எண்ணம் சென்றது. மொத்தமாக ஒரு ஆயிரம் சேர்ந்ததும், போதும் இத்தோடு கிராமம் போய்விடுவோம்; கலியாணம் செய்து கொண்டு

செல்லியுடன் ஆனந்தமாக வாழலாம் என்று தோன்றிற்று. மறுபடியும், சே! விற்றுவிட்டு வந்த நிலத்தைத் திருப்பி வாங்காமலா அந்தக் கிராமத்திலே காலடி எடுத்து வைப்பது என்று தோன்றிற்று. இன்னும் கொஞ்ச காலம் என்று தனக்குத்தானே கூறிக் கொண்டான். மூன்று நாலு ஏக்கர் அசல் நஞ்சை வாங்கக்கூடிய அந்தஸ்து வந்தது. போய்விடலாம் என்று எண்ணம் வந்தது; அங்கே போய், ஏரும் எருதும் துணையென்று, மறுபடியும் முழங்காலுக்கு மேலே துணியைக் கட்டிக்கொண்டு, முண்டாசு கட்டிக் கொண்டு, உழுது கொண்டு கிடக்கவேண்டியதுதானா? இனி ஏன் அந்தப் பிழைப்பு? இன்னும் கொஞ்சம் பணம் சேர்த்துக் கொண்டு, வேறு ஒரு 'டவுன்' போகலாம். அங்கு நல்ல வியாபாரம் ஆரம்பித்து, நாலுபேர் மதிக்கத்தக்க மனிதனாகலாம் என்று ஆசை பிறந்தது. இப்படி ஒவ்வோர் தடவை ஆசை பிறக்கும் போதும், வேலப்பன், தன்னுடன்தான் அழைத்துக்கொண்டு சென்றான் செல்லியை—கற்பனை இரதத்தில். செல்லியை அவன், தாராசசாங்கம், தமயந்தியின் நேசம் ஏற்படுகிற வரையில் மறக்கவில்லை. தாராசங்கம் தமயந்தியுடன் 'தொழில்' முறையிலேதான் அவனுக்கு முதல் தொடர்பு ஏற்பட்டது. வாடிக்கையாக 'சரக்கு' வாங்கி வந்ததில் இருநூறு ரூபாய் அளவுக்குப் பாக்கி ஏறிவிட்டது—பணம் வருவதாகக் காணோம். மூலைக்கடை முத்தையன் இதற்குள் வேலப்பனை, ''எஜமான்'' ஆக்கிக் கொண்டிருந்தான்.

''எஜமான் சும்மாவிடக் கூடாதுங்கோ அவளை! ஆமா, பணத்தை எப்படியும் வாங்கியாகணும். நாங்க இவ்வளவு பேரு எதுக்கு இருக்கிறோம்? உங்க உப்பை தின்னுவிட்டு இந்த வேலைகூடச் செய்யாவிட்டா மனுஷ ஜென்மமா நாங்க. ஒரு உத்தரவு கொடுங்க, அவ வீட்டிலே பூந்து கலாட்டா செய்து பணத்தைக் கறந்துகிட்டு வந்து கொடுக்கிறோம்.''

''முத்தையா! அவளை நீ கண்டதுண்டமா வெட்டிப் போட்டாக்கூட, பணம் கிடைக்காது. போவுது போ; விட்டுத் தொலை. இனி 'சரக்கு' கொடுக்காதே. அவ்வளவுதான்.''

''எஜமான்! இது எனக்குப் பிடிக்கலே. நீங்களா பார்த்து எத்தனையோ தான தர்மம் செய்யறிங்க. அதுசரி, சிவ ராத்ரி உற்சவம் சிறப்பாகச் செய்திங்க. ஊர் ஜனங்களெல் லாம் 'ஐயாவோட,' தரும குணத்தைப் பாராட்டினாங்க, அது நமக்குச் சந்தோஷம் கொடுக்குது. ஆனா, பணத்தை வாங்க முடியாமெ ஏமாந்துவிட்டுப் போட்டாங்கன்னு ஒரு சின்ன சொல்லு கேட்கப்படாதுங்க—அது நமக்குப் பிடிக் கல்லே. சரி, அவளை நாயேன்ன வேணாம்; பேயேன்ன வாணாம், மிரட்டிக் கேட்கவேணாம், வேறு வகையிலே அந்தப் பணம் வந்து சேர வழி செய்யலாமெல்லோ.''

''வேறே வழி என்ன கண்டுபிடிச்சிருக்கே...''

''சரின்னு சொல்லுங்க எஜமான்! அவளை உதைச்சி பணம் சம்பாரிக்க வைச்சிக் கடனைத் திருப்பிக் கட்டுடின்னு கேட்கறேன்...''

''அப்படீன்னா...?''

''அவளை 'டிராமா' ஆடச் சொல்றது; அதிலே பணம் வருதில்லே, நம்ம கடனை எடுத்துக் கொள்றது.''

''அவ 'டிராமா' நடந்தாத்தானே.''

''நாம நடத்தறது.''

வேலப்பன், 'டிராமா' கண்ட்றாக்டரானான்—கடனை வசூலிக்கத்தான். முதல் நாடகத்திலே ஏற்பட்ட நஷ்டத் துக்கு ஈடுகட்ட மூன்று நாடகம் தேவைப்பட்டது. நாலா வது நாடகத்தின்போது, தமயந்தி ''ஏதோ உங்களோட தயவு...''என்றுகொஞ்சிப் பேசி, தாராசசங்க நாடகத்திலே அவன் கண்ட அருவருப்பை ஆனந்தமாக்கி விட்டாள். செல்லி விடைபெற்றுக் கொண்டாள். தமயந்தி முத்தையனுக்கு 'அண்ணி' ஆகிவிட்டாள். வியாபார ஸ்தலமே தமயந்தியின் வீடு என்றாகி விட்டது. வேலப்பன் ஒருகாலத்தில் கிராமத் தில் இருந்தவனென்ற அறிகுறியே மறைந்துவிட்டது. எப் போதும் கண்சிவந்து கிடக்கும் நிலை ஏற்பட்டுவிட்டது. தமயந்தி ''அவர் வேண்டாமென்று கண்டிப்பாகக் கூறிவிட் டார்,'' என்று டிராமா கண்ட்ராக்டர்களுக்குக் கூறி, புதிய

அந்தஸ்துக்குச் சென்றுவிட்டாள். ஊர் மக்களிடம் தான் அவள் முன்புபோல, தாராசசாங்கம், சாரங்கதாரா, அல்லி அர்ஜுனா, சந்திரமதி ஆகியவைகளை நடித்துக் காட்டவில்லையே தவிர வீட்டில் எல்லாம்தான்.

''ஆறு பவுனாம்''—என்று கூறி அலட்சியமாகச் செயினைத் தமயந்தியிடம் தருவான், வேலப்பன். 'ஆறோ, நூறோ! உங்கள் அன்புதான் எனக்குப் பெரிது. இந்த நகை யாருக்கு வேண்டும்' என்று நாடகமாடாக் குறையை ஓரளவுக்கு நீக்கிக் கொள்ளும்முறையில் பேசுவாள். 'அட, அட! அதென்ன அப்படிப் பார்க்கறே' என்று வேலப்பன் கேட்க வேண்டிய கட்டம் நடக்கும்—உஹூம் என்பாள்—அடி அம்மா.—என்பாள், இப்படி நவசர நாடகம் நடைபெற்றபடி இருக்கும்.

தமயந்தி, நாடக வாய்ப்புக் கிடைக்காமல், நல்ல ஒரு சம்பந்தமும் கிடைக்காமல் திண்டாடியபோது அவளை ஏறெடுத்துப் பாராமல் இருந்தவர்களும், ஏளனம் பேசியவர்களும், வேலப்பனுடன் அவளுக்குத் தொடர்பு ஏற்பட்ட பிறகு, அவளிடம் 'ஆசை' கொள்ள ஆரம்பித்தார்கள்.

நல்லாத்தான் இருக்காடா! நாற்பது வயசுன்னு நாம நையாண்டி செய்தா போதுமா? நேத்து சாயரட்சை அவ, நவக்கிரகம் சுத்தறதுக்கு வந்தா கோயிலுக்கு! எப்படி இருக்கிறா தெரியுமா? இருவது இருவத்தைஞ்சிதான் மதிப்புப் போடுவாங்க வயசு—ஐம்பது அறுபதுன்னு கேட்டாலும் ஆகட்டும்னு சொல்லிப் போடுவாங்க, அப்படி இருந்தா'' என்று கூறி ரசிக்க ஆரம்பித்தார்கள்.

நாடகக் காண்ட்ராக்டுகள் எடுத்து எடுத்து நொடித்துப் போனவர், பானு வாத்தியார். பல ஆயிரக்கணக்கிலே பணத்தை நாடகக் காண்ட்ராக்ட்டிலே பாழாக்கி விட்ட பிறகு அவருக்குக் கிடைத்த பட்டம் அந்த வாத்தியார் என்பது.

நாட்டிலே கீர்த்தியுடன் உள்ள நடிகர்கள் ஒவ்வொருவரும், பானு வாத்தியாரால்தான் முதலில் கைதூக்கி விடப்

பட்டவர்கள் என்று பெயர் உண்டு. அவர் அந்தப் பழைய சம்பவங்களைக் கதை கதையாகச் சொல்லுவார். தன்னாலே முன்னுக்கு வந்தவன்; பிறகு தன்னை மதிக்காமல் நடந்து கொண்டால், உடனே வேறு ஒரு ஆளைத் தயார் செய்து, அவனுக்கு நிறைய விளம்பரம் கொடுத்து, மெடல் கொடுத்து, மாலை கொடுத்து, போட்டிக்குக் கிளப்புவதிலிருந்து, மற்றும் கொட்டகை கிடைக்காமலிருக்கும்போது, எப்படித் தந்திரம் செய்து கொட்டகையைப் பெறுவது என்பது வரையிலே அவர் சுவைபட எடுத்துக் கூறுவார். இடையிடையே இருமல் வரும். அதைமட்டும் பொறுத்துக் கொள்ள வேண்டும். தமயந்திக்கும் வாத்திரியாரிடம் மதிப்பு உண்டு.

தமயந்திக்கு, வேலப்பனிடம் தொடர்பு ஏற்பட்டதாலே ஒரு புது 'மவுசு' வந்திருப்பது தெரிந்து, தனக்காக ஒரே ஒரு ஸ்பெஷல் டிராமாவுக்கு மட்டும் தமயந்தி ஒத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

''வாத்தியாரே! அதென்ன எனக்கு நீங்க இவ்வளவு சொல்லணுமா? முதல் முதலிலே நான் மாதவி வேஷம் போட்டேனே, அன்னக்கி, என் காலுக்கு உங்க கையாலேதானே 'சதங்கை' கட்டி ஆசீர்வாதம் செய்திங்க. அதை எல்லாம் நான் எப்படி மறந்துடுவேன்.''

''செய்த நன்றியை மறக்காதவர்களைத்தான் மனஷான்னே சொல்லியிருக்கு தமயந்தி. உனக்கும் தெரியுமே. ஒரடி வீராசாமி பாடுவானே ஒரு பாட்டு, கவனமில்லே, தோடியிலே,

''நன்றி செய்தாரை என்றும்

மறவாதே

நாயினும் கேடுகெட்டு

நாசமாகாதேன்னு...''

''ஆமாம். ரொம்ப நல்லாப் பாடுமே வீராசாமி, இப்ப எங்கே, பேரே காணோம்?''

''எப்படிப் பேர் நிலைக்கும்? பாட்டுத்தான், செய்த நன்றியை மறக்காதேன்னு; செய்கை அப்படி இல்லையே! அதனாலே ஆசாமி ரொம்ப 'டல்'லாயிட்டான். இப்பத்தான் மறுபடியும் புத்தி வந்து, காலிலே வந்து விழுந்தான்; செய் ததை மறந்துடுங்கன்னான். இப்ப நான் உன்னை ஒரு ஸ்பெஷ லுக்கு வற்புறுத்திக் கூப்பிடுவதுக்கு இதுவும் ஒரு காரணம். அந்தப் பயதான் ரா ஜபார்ட் தெரியுதா!அவனை ஒரு மடக்கு மடக்கோணும்—ஆசாமி, அசந்து நிற்கணும்...அப்படி கன ஜோரா இருக்கணும்...''

''உங்க ஆசீர்வாதம்! ஆனா அவன் 'தோடி' பாடி ஜனங்களை ஏமாத்திப் போடுவான்...''

''அட, நீ மோகனத்திலே பிடி...பய, சுருண்டு கீழே விழறான் பாரு...உனக்கு இந்த இரகசியம் தெரிஞ்சு இருக் கட்டும்—பயலுக்கு இப்ப குளறுவாயாயிட்டுது—ள வெல் லாம் ல தான்...ழாவே நுழையாது..''

''எனக்கு எப்பவுமே பயம் கிடையாதே. அப்பேர்ப் பட்ட ஆர்ப்பாட்ட ராஜபார்ட் அய்யா குட்டியோட தூக்குத் தூக்கிபோட்டு யாராலும் சமாளிக்கவே முடியாதுன்னு சொன் னாங்களே, கவனமிருக்கா வாத்தியாரே? 'காட்பாடியிலே சுருளி மலை மேலே உருளும் இருளனவன்...'என்கிற பாட்டு பாடி, 'கள்ளபார்ட்' செய்தேனே.''

''பய, மூஞ்சி செத்துப் போச்சே.''

''அதனாலே, எனக்கு இந்த ஓரடி, ஒன்பதடி எல்லாம் பத்திக் கவலையில்லே...இது இருக்கே, என்னோட வீட்டுக் காரு, உசிரு என் மேலே. அது வந்ததிலிருந்து நான் அய்ய னார் சாட்சியா, மனசாலேகூடத் தப்பா நடந்ததில்லே. அது, டிராமாவுக்குக்கூடப் போகப்படாது—தலை இறக் கமா இருக்குன்னு, ஒரே பிடிவாதம் பிடிக்குது. அதை மட்டும் சரிப்படுத்திவிட்டாப் போதும்! ஒரு நாலு நாளைக்குச் சாத கம்; மூணு நாள் ஒத்திகை இருந்தாப் போதும்...''

''கொளுத்திப்பிடலாம் போ.''

சரிப்படுத்த முடியவில்லை! ஸ்பெஷல் நடக்கவில்லை. வாத்தியார் விரோதியானார்; போலீஸ் 'துப்பு' கிடைக்கப் பெற்று சுறுசுறுப்பாயிற்று. வேலப்பனுக்கு ஒரு வருஷம்; தமயந்திக்கு ஆயிரம் ரூபாய் அபராதம்!! வாத்தியார் பழி தீர்த்துக் கொண்டார்.

''தீர்ந்தது வாணவேடிக்கை'' என்று கேலி பேசினர் ஜாதைகள். திக்கிலொருவராக ஓடினர் எடுபிடிகள். அவனவனிடம் அகப்பட்டதை அவனவன் சுருட்டிக் கொண்டான். கிராமத்திலே செய்தி பரவி, சொல்லாளைச் செந்தேளாய்க் கொட்டிற்று—மற்றவர்களும் வருந்தினார்கள்.

சிறையிலே வேலப்பன், வெளியே சென்ற பிறகு, மீண்டும் எப்படி வாழ்க்கையைத் துவக்குவது என்பது பற்றியே எண்ண மனம் இடம் தரவில்லை என்றால், அவன், செல்லியைத் திருமணம் செய்து கொள்வதுபற்றி எண்ணத்தான் முடியுமா?

செல்லியின் உலகத்திலிருந்து வேறு உலகம் வந்தாகி விட்டது—சேற்றிலே விழுந்து விட்டாலும் பரவாயில்லை; மணியை எடுத்துக் கழுவிச் சுத்தமாக்கிவிடலாம். மலக்குழியில் வீழ்ந்துவிட்டால்? வேலப்பன் மலக்குழியில் வீழ்ந்துவிட்டவனாக மட்டும் தன்னை எண்ணிக் கொள்ளவில்லை; தானே மலமாகிவிட்டதாகக் கூறிக் கொண்டான். எல்லா நல்லவைகளையும் பெற்றிருந்தேன். இப்போது எல்லாக் குப்பை கூளமும் சேறு சகதியும் நிரம்பிய நாற்றப் பாண்டமாகிவிட்டேன். செல்லியின் உலகம் வேறு என்ற தீர்மான முடிவுக்கு, 'ஒரு வருஷம் கடுங்காவல் தண்டனை' என்ற தீர்ப்பு கிடைத்த அன்றே வந்துவிட்டான்.

செல்லிக்குப் பைத்யம் பிடிக்கவில்லை—அதுதான் ஆச்சரியம். அவளுடைய மனதுக்கு இந்தச் சேதி எவ்வளவு பெரிய பேரிடி என்பதை அந்தக் கிராமம் அறியும். வேலப்பன் வேகமாகக் கெட்டு வருகிறான் என்ற செய்தி கிடைத்த ஒவ்வோர் தடவையும் செல்லி, செத்து செத்துப் பிழைத்து வந்தாள்— ஒரு வருஷம் கடுங்காவல் என்று கேள்விப்பட்ட

போது, அவளால் எதையும் சாகடிக்க முடியவில்லை—ஏற் கனவே எல்லாம் செத்துக் கிடந்த நிலை.

சடையாண்டியும், செல்லியின் திருமணம் என்பது, இனிச் செய்து தீரவேண்டிய ஒரு கடமை, சடங்கு, ஊர் உலகத்துக்காகச் செய்தாக வேண்டிய ஏற்பாடு என்றுதான் கருத முடிந்தது. காய்ச்சல் வந்தவனுக்குத் தெரியும், வாய்க் கசப்பு இருப்பதும், எதைச் சாப்பிட்டாலும் பிடிக்காது என்பதும். என்றாலும், கஞ்சி குடித்துத் தீரவேண்டி இருக்கிற தல்லவா! செல்லிக்கும் ஒரு கலியாணம் செய்துதானே ஆக வேண்டும் என்று சடையாண்டி எண்ணியது, அதே முறை யிலேதான்.

''அவனுக்கா? எனக்கு இஷ்டமில்லை.

எனக்கு அவன் ஏற்றவனல்ல; அவனோடு என்னாலே குடித்தனம் செய்ய முடியாது'' என்று கூறி, பெற்றோரை எதிர்த்துப் போராடியாவது, தன் மனதுக்கு இசைந்தவனை, தன்னை உண்மையாகக் காதலிப்பவனைத் திருமணம் செய்து கொண்டாக வேண்டும் என்று கூறும் நிலையில் செல்லி இல்லை.

'எனக்கு அவன்தான் வேண்டும்' என்று வேலப்பன் இருந்தால்தானே போரிட! வேலப்பன் எங்கே இருக்கிறான்? சிறையிலிருந்தாலும் பரவாயில்லை. ஏதோ காலக் கோளாறு கயவர் சூது—ஆத்திரத்தால் அறிவு இழந்த நிலை—இப்படி ஏதேனும் ஒரு சமாதானம் செய்துகொள்ள முடியும்—அவன் தான் வேண்டும் என்று வாதாட முடியும். வேலப்பன் சிறை யில் இருப்பவன்மட்டுமல்ல-எல்லா நற்குணங்களும் சிதைத்து போய் உள்ள நிலையில் அல்லவா இருக்கிறான்! சாறு போய் விட்டது; சக்கைதானே மிச்சம்?

தன்னை மணந்துகொண்டு, 'வாழ்வு' நடத்த முடியாத அளவுக்கு, நற்குணங்கள் யாவற்றினையும், நல்ல நினைப்பி னையும்கூட நாசமாக்கிக் கொண்டுவிட்டவன், வேலப்பன். எனவே, இனி அவனை எதிர்பார்ப்பதும் வீண் - அவனுக்காக ஏங்கித் தவிப்பதும் அவசியமற்ற செயல்! உள்ளத்தில் புகுந்து

எதிர்காலம் பற்றி ஏதேதோ இன்பக் கனவுகளைக் கூறி நம்பிக்கை தந்துவந்த வேலப்பன், திரும்பி வரவே போவதில்லை. ஏமாற்றம், திகைப்பு, துடிப்பு, வறுமை, ஏக்கம், பேராசை, சூது, மோசடி, காமக் களியாட்டம் எனும் பல காட்டுமிருகங்கள் அவனைத் தாக்கித் தாக்கி, பிய்த்துக் கடித்து மென்று தின்று, கீழே துப்பிவிட்டன. இனி அவன் யாருக்கும் பலன் இல்லை—அவன் இனி அவனாகவே இருக்க முடியாது!!

செல்லி, இனி எதற்காகவும் எதிர்பார்த்தும் காத்துக் கொண்டுமிருக்கவும் வேண்டியதில்லை. எது கிடைத்தாலும் சரி,மூன்றாம் தாரம், நாலாம் தாரமாக இருந்தாலும் சரி—மூட்டை சுமக்கும் கூலிக்காரனுக்கு மனைவியாக வேண்டியதானாலும் சரி தயாராகிவிட்டாள். சமூகம், ஆண் பெண் கூட்டுறவு ஒரு குறிப்பிட்ட ஏற்பாட்டிலே இருக்க வேண்டும் என்று கட்டளையிடுகிறது. அதை மீறுவானேன் என்ற எண்ணத்தால், திருமணம் செய்து கொள்ள வேண்டியதுதான் என்ற முடிவுக்கு வந்தாள் செல்லி.

'கண்ணைத் திறக்கிறாள், கலம் தண்ணி விடுகிறாள். அவன் வானத்தைப் பார்க்கிறான், வாயிலும் வயிற்றிலும் அடித்துக் கொள்ளுகிறான். அந்தக் குடும்பம் படுகிறபாடு, கல் நெஞ்சக்காரனையும் கதறவைத்து விடுமப்பா'—என்று கிராமத்தூர் பேசிக் கொண்டனர்.

ஓவிய நிபுணர் வடிவேலன் வழக்கப்படி பல கிராமியக் காட்சிகளைத் தீட்டி வந்தது போலவே, அங்கும் வந்தான்—ஒரு மரத்தடியில் உட்கார்ந்து கொண்டு, சற்றுத் தொலைவிலே ஆடுகள் மேய்ந்துக் கொண்டு இருப்பதை ஒப்புக்கு அவ்வப்போது கவனித்துக் கொண்டிருந்த செல்லியைக் கண்டான். அவனுடைய கருத்து மலர்ந்தது. கவர்ச்சிகரமான கிராமியச் சூழ்நிலையில், கட்டழகு வாய்ந்த அந்தக் குமாரி, கவலை தோய்ந்த முகத்துடன் உட்கார்ந்து கொண்டிருந்த காட்சி, முதல்தரமாக அமைந்திருந்தது. உடனே எடுத்தான், திரையையும் தீட்டுக்கோலையும்! ஓவியம் உருவெடுத்தது. ஓவியக்காரனுக்காகவே உட்கார்ந்திருப்பது போல செல்லி

யின் நிலைமை இருந்தது! அதைச் சாதகமாக்கிக் கொண்டு வேகமாக மேல்வாரியான படம் தீட்டிவிட்டான். இனி அதற்கு உயிரூட்டும் வகையில் வேலை செய்ய வேண்டும்.

இரவு பகலென்று பாராமல் வேலை செய்தான்—ஓவியம் மிக அருமையாக அமைந்துவிட்டது. நண்பர்கள் திறமையைப் பாராட்டினர். அவனோ உண்மை உருவத்தை எண்ணிப் பூரித்துக் கொண்டிருந்தான்.

'மேகங்கள் அலைவதுகூட அப்படியே தெரிகிறது பார்!' என்று ஓவியத்தைச் சுட்டிக் காட்டிப் பேசுவர் நிபுணர்கள்.

அவனோ, அந்தக் கண்களிலே கப்பிக் கொண்டிருக்கும் துக்கத்துக்குக் காரணம் என்ன என்று ஆராய்ந்து கொண்டிருந்தான்—கவலையுடன்.

'அட, இந்த ஆட்டுக்குட்டி, கிராமத்திலே நல்ல மேய்ச்சல் கிடைப்பதால் எவ்வளவு கொழுகொழு என்றிருக்கிறது பார்' என்று பாராட்டிவிட்டு, 'இதோ' இந்தக் குட்டிக்கு மட்டுமென்ன, வெய்யில் என்றும் மழை என்றும் பாராமல், கால் கடுக்குமே கை வலிக்குமே என்று கவலைப்படாமல், ஓடி ஆடி பாடு பல படுவதாலே உடற்கட்டு வளமாக இருக்கிறது—இளமையும் எழிலும் சேர்ந்தவுடன், சிற்பி செதுக்கிய செப்புச்சிலைபோலத் தெரிகிறது' என்று மற்றவர்கள் புகழும்போது, ஓவியனுக்கு, ஓவியத்தின் பிடியிலும் அகப்படாதிருந்த கவர்ச்சி கண்முன் தோன்றிற்று. எல்லோரும் ஓவியத்தைப் பார்த்து இவன் திறமையைப் பாராட்டிக் கொண்டிருந்தனர். அவனோ அவளையே எண்ணிக் கொண்டிருந்தான்.

கிராமங்கள் பலவற்றுக்குச் சென்று அவன் தன் கருத்திலே மகிழ்வூட்டிய எத்தனையோ காட்சிகளைக் கொண்டு வந்திருக்கிறான்—பச்சைக் கிளிகள் பறந்து செல்லும் காட்சி, பால் சுவைக்கும் கன்றினை அன்புடன் தாய்ப்பசு நாவினால் தடவிக் கொடுக்கும் காட்சி, உழவுத் தொழிலிலே உள்ள பல்வேறு வகையான காட்சிகள், கிராமியப் பெண்களின் குறும்புப் பார்வை, உழவனின் உடற்கட்டு, வெள்ளை உள்ளம்

கொண்டவன், புதுமைப் பொருளை விறைத்து விறைத்துப் பார்ப்பது ஆகிய பல காட்சிகள் அவனிடம் சிக்கி, ஓவிய மாயின—ஆனால் இந்தக் கட்டழகி—திரையில் மட்டும் தங்கிவிட வேண்டியவள் என்று வடிவேலன் தீர்மானித்தான்.

வடிவேலன் வசதியான குடும்பத்தினன்—வயதான தாயாருடன், தன் பூர்வீகச் சொத்தைப் பாழாக்கிக் கொள்ளாமல் ஆடம்பரமின்றி வாழ்ந்து வந்தான். ஓவியத்திலே அவனுக்கு நிரம்ப ஆர்வம். அதற்காக அவன் கிராமியக் காட்சிகளில் மனம் செலுத்தத் தொடங்கி கிராமத்தினிடமே கவர்ச்சி பெற்று, இப்போது கிராமக் கட்டழகியிடம் மனதைப் பறிகொடுத்தான்.

வடிவேலனுடைய தாயாருக்கு, தன் மகன் ஒரு நாகரிக நாரிமணியை மணம்செய்துகொண்டு, பார்ப்பவர்கள் பாராட்டத்தக்க விதமாக வாழ வேண்டும் என்றுதான் விரும்பினார்கள். அதற்கான முயற்சிகள் பலதடவை செய்தார்கள்—எல்லாம் ஏமாற்றத்திலேதான் முடிந்தது—காரணம், அந்த அம்மையார்மீது நெடுங்காலத்துக்கு முன்னாலே ஏற்றி வைக்கப்பட்ட கறைதான். எனவே வடிவேலன், கிராமத்துக் கட்டழகியைப் பெற விரும்புகிறான் என்று தெரிந்து, முதலிலே, இதுதானா என் மகனுக்கு என்று வருத்தப்பட்டபோதிலும், ஏதோ, இதுவாவது மங்களகரமாக முடியட்டும் என்று எண்ணிக் கொண்டார்கள். பெண் பார்த்து வரவும், ஏற்பாடுகள் செய்யவும் தாலே கிளம்பினார்கள்.

இவ்வளவு வேதனையை அனுபவிக்கிறாள், 'பாவம்' இந்த இடம் பச்சென்று இருக்கிறது. பளபளப்பாகவும் இருக்கிறது; பணம் படைத்தவனாகவும் இருக்கிறான்; கிழவனல்ல, அழகாகவும இருக்கிறான். என்றாலும் பட்டணத்துப் படாடோபம் இல்லை; இந்த இடத்தில் வாழ்க்கைப்பட்டு சீமாட்டி போல வாழ்ந்தாலாவது, செல்லி இழந்துவிட்ட சந்தோஷம் ஓரளவுக்குத் திரும்பிவரக்கூடும் என்ற எண்ணத்திலே, சடையாண்டி, திருமணத்துக்குச் சம்மதமளித்தான்.

ஊரார் பார்த்துப் பரிதாபப்பட வேண்டிய நிலைமையில் அப்பா நம்மாலே ஆக்சப்பட்டுவிட்டார். என் கதி என்ன

ஆகுமோ என்ற ஏக்கம் அவரை வாட்டி வதைக்கிறது. பெரிய இடத்திலே நான் வாழ்க்கைப்படுவதைக் கண்ட பிறகாவது அவருடைய மனதுக்கு ஒரு சந்தோஷமும், பெருமையும் கிடைக்கட்டும். என் மருமகன் சாமான்யமானவனல்ல. இந்தக் கிராமத்தையே விலைக்கு வாங்கிவிடக்கூடிய அளவு பணம் இருக்கு. படித்திருக்கிறான். நல்ல மனம். பட்டணத்திலே அவனுக்குக் கோட்டைபோல வீடு இருக்கு. மோட்டார் கார் இருக்கு. இப்படிப்பட்ட இடம் கிடைச்சிருக்கு என் மகளுக்கு! அவளோட அழகுக்கும், குணத்துக்கும் இப்படிப்பட்ட அருமையான இடம்தான் வந்து வாய்க்கும். பாடுபட்டு, வாயைக் கட்டி, வயிற்றைக் கட்டி, என் மகளை நல்லபடியாக வளர்த்தேன்—அவ தங்கக் கட்டி குணத்திலே! அவளுக்கு இப்படிப்பட்ட இடம்தான் கிடைக்கும் என்று பேசிப்பேசி ஆனந்தப்படுவார். பலகாலமாக மனதை அரித்துக் கொண்டிருந்த துக்கம் தொலையும். கடைசி காலத்திலே கண்களிலே களிப்பு இருக்கும் என்று எண்ணித்தான் செல்வி திருமணத்துக்கு, ஆர்வத்துடன் சம்மதமளித்தாள்.

'செல்வி! செல்வி! செல்வி!' என்று பலவகையான—ஆனால் அன்புச் சுருதி குறையாமல், ஓயாமல் கூப்பிடுவான் வடிவேலன். திருமணத்துக்குப் பிறகு, முன்னாலே அவன் கண்டதைவிட அதிகக் கவர்ச்சி அவளிடம் இருப்பதைக் கண்டான்; களிப்புற்றான்.

அவன் எத்தனையோ முறை, தன் நண்பர்களிடம் வாதாடி இருக்கிறான்; கிராமத்திலே இருக்கிற கவர்ச்சி இங்கே, நகரத்திலே கிடையாது. செடி கொடியிலே இருந்து, மாடு கன்றும் சரி, மக்களும் சரி, அங்கேதான் ஒருவிதமான இயற்கை எழிலுடனும், வளத்துடனும் இருக்க முடிகிறது; 'டவுன்' எல்லாம் பூச்சுதான். எதிலும் இயற்கை எழில் தங்கி இருப்பதில்லை. பாரேன், வேடிக்கையை! தோட்டத்தில் மலர்ச்செடி வைத்து அழகைக் காண வேண்டும் என்று இல்லாமல், வீட்டின் கூடத்தில், மேடையின் பேரில் கண்ணாடிப் பாத்திரத்தில், காகிதப் பூங்கொத்தைச் செருகி வைத்து அழகு பார்க்கிற ரசிகர்கள்தானே நாமெல்லாம், நகரத்தில்.

அங்கே போய்ப் பாரடா, மலர்க் குவியலை! பச்சைப்பட்டில் மீது நவரத்தினங்களைத் தூவி இருப்பது போலிருக்கும்! மலர் தூவுவார்கள், ராஜகுமாரிகள் நடந்து செல்லும் பாதையில் என்று கதை படிக்கிறோம். கிராமத்துப் பெண்களுக்கு, மலர்ப்பாதை தானாகவே அமைந்திருக்கிறது. அழகுக்கேற்ற ஆற்றல் கிராமத்துப் பெண்களிடம் இருக்கிறது. இங்கே, ஏழெட்டுக் கடைக்காரர் தயவு கிடைத்தால்தானே, ஒரு எழில் மங்கையைக் காண முடியும். தையற்காரர்களின் தயவு இல்லாமல், பாதிப் பெண்கள், உருவாகவே தெரிய முடியாதே! பவுடர்காரன், எவ்வளவு அகோரங்களை 'அனுமதிக்கத்தக்கதுகள்' ஆக்கிவிடுகிறான்! இப்படித்தான் இங்கே அழகிகள் தயாரிக்கப்படுகிறார்கள். அங்கு அப்பழுக்கற்ற அழகு தானாக மலர்ந்துவிடுகிறது—காலையிலே, நீராகாரம், நடுப்பகல் உண்வு, இரவு, காலையிலே இருந்ததில் கொஞ்சம்—இடையிடையே மாம்பிஞ்சோ, புளியம்பழமோ, பச்சரிசி மாங்காயோ, பழுக்காத கொய்யாவோ, எதுவும் இல்லையானால் கதிரைக் கசக்கிப் புடைத்தெடுத்த, பால் ததும்பும் மணியோ, எதையோ ஒன்று வாயில் போட்டுக் குதப்பிக் கொண்டு, குதூகலமாகத்தான் இருக்கிறார்கள். அவர்களின் குதூகலப் பேச்சும் குறும்பான ஆடல் பாடலும், கண்டால்தானே தெரியும். இங்கே நாட்டிய ராணிகள் தங்களுக்குத் தெரிந்த தளுக்கு, குலுக்கு, மினுக்கு, வெட்டு எல்லாவற்றையும் காட்டிப் பார்க்கிறார்கள்; பாம்பாக நெளிகிறார்கள். பச்சை மயில் போல ஆடுகிறார்கள். என்ன செய்தாலும், கவர்ச்சி கனியாது என்பதைத் தெரிந்து கொண்டு, இப்போது கிராமிய நடனம் ஆடுகிறார்கள், பார்த்தாயா! நாடோடிப் பாடல்—கிராமீய நடனம் என்பதன்மீது இன்று அக்கறை சென்றதற்குக் காரணம், நகரத்து நாட்டியத்தையும், பட்டணத்து பாணியுள்ள பாட்டையும் மட்டும்கொண்டு நகரமக்களே திருப்தி கொள்ளவில்லை என்பது புரிந்துவிட்டது. ஆகவேதான், கிராமீய மகிமையைக் காட்டுகிறார்கள்! எந்தக் கிராமத்திலாவது, நகரத்து நாட்டியம் பட்டணத்துப் பகட்டு நடைபெறுகிறதா? இல்லையல்லவா என்று ஆர்வம் பொங்கப் பொங்கப் பேசுவான்.

''ஏண்டா வடிவேல்! பொதி பொதியாகக் கொட்டிக் காட்டணும்—சுருக்கமாகச் சொல்ல வேணும்னா கிராமத் துக் கட்டழகியைக் கலியாணம் செய்து கொள்ளவும் நான் தயார்னு சொல்லேன்'' அவனது நண்பர்கள் கேலி பேசுவர்.

''தயார்...! என்று தயாவிஷயமாசப் பேசுவானேன். கிராமத்துப் பெண்ணைத்தான் கலியாணம் செய்து கொள் ளப் போகிறேன். இது உறுதி!'' என்று திட்டவட்டமாகக் கூறிவந்தான்.

''சொன்னபடியே செய்தே காட்டிவிட்டானே! செல்லி அழகான பெண்தான். ஆனா அசல் பட்டிக்காடு! முகத்தி லேயே அந்த முத்திரை விழுந்திருக்கு'' என்று கலியாணத் துக்குப் பிறகு கூறினர். பெருமையுடன் தன் நண்பர்களிடம், ''டேய், பார்த்தாயா! சொன்னபடி நடத்திக் காட்டினேன்'' என்று பேசுவான். ''என்னமோடாப்பா, நீ சந்தோஷமாக இருந்தாப் போதும்'' என்று கூறினர்.

செல்லியைப் பொறுத்தமட்டில், பணிவிடை செய்வ தன் மூலம் வடிவேலனை மகிழ்விக்க வேண்டும் என்பதிலே அக்கறையே இருந்தது. வேலப்பனிடம் கொண்டிருந்த 'பிரேமை' இனி மீண்டும் எழாது—வேறோர் திசையில் செல்லாது—ஆனால் வடிவேலனிடம் நல்ல மதிப்பு இருந் தது—சில வேளைகளிலே பரிதாபமாகக்கூட இருந்தது. நாமோ பட்டிக்காடு—இவரோ படித்தவர், பட்டணத்துக் காரர்—பணக்காரர். இவர் ஏன், இந்தப் பட்டணத்திலே எத்தனையோ பேர் ராணிபோல் இருந்தும், என்னைத் தேடிக் கண்டுபிடித்தார்? என் தரித்திரத்தைக் கண்டு பாசம் பிறக் குமா? வேடிக்கையாக அல்லவா இருக்கிறது! இங்கே உள்ள வர்களின் நடை உடை பாவனைகளிலே உள்ள நாகரிகத்துக் கும், என் போக்குக்கும் ஏணி வைத்தாலும் எட்டாதே! எதைத் தொட்டாலும், சோப்புப் போட்டுக் கை கழுவி, உடனே ஈரம் போகத் துணியால் துடைத்துக் கொள்கிறார் கள். எத்தனையோ தடவை, கீழே எண்ணெய் கொட்டி விட்டால் எடுத்துத் தலையில் தடவிக்கொள்ளுவேன்—பிறகு முந்தானையில் துடைத்துக் கொள்ளுவேன்—நான் இங்கே,

இவருக்கு வந்து வாய்ப்பது என்றால், எனக்கு என்ன சொல்வது என்றே புரியவில்லை. களத்துமேட்டுக்கு ஓடுவதும், முழங்காலளவு சேற்றில் இறங்கி நடப்பதும், மரத்தில் ஏறிக் காய் பறிப்பதும், மடுவில் நீந்திக் குளிப்பதுமாக இருந்து வந்த என்னை, இங்கே, காலிலே ஜான் உயரத்தில் பூட்சும், கையிலே ஒரு அலங்காரப் பையும், கண்ணுக்குத் தங்கக் கம்பி போட்ட கண்ணாடியும் போட்டுக் கொண்டு, முக்கால் சிரிப்பும், கால் பேச்சும் கலந்தளித்துவரும் நாகரிகப் பெண்களின் நடுவில் கொண்டு வந்து ஏன் நிறுத்தினார் என்றே தெரியவில்லை. அவர் மேஜை மீது அடுக்கடுக்காகப் புத்தகங்கள்—ஒரு வரியும் எனக்குப் புரியாது... ஆனால் என்னிடம் அவர் காட்டும் அன்பைக் கண்டாலோ, அவருடைய காலைத் தொட்டுக் கும்பிட வேண்டும் போலத் தோன்றுகிறது. கதை ஒன்று கேட்டிருக்கிறேன், சின்ன வயசில். வேடிக்கையென்றே ஒரு ராஜா, தன் நாட்டிலே இருந்த பிச்சைக்காரனுக்கு, ஒருநாள் ராஜா வேலை கொடுத்து, அதை அவன் எப்படி எப்படி உபயோகப்படுத்துகிறான் என்று வேடிக்கை பார்த்தானாம்—அதுபோல இது ஒரு வேடிக்கையோ, என்னவோ என்று எண்ணிக் கொண்டு, அதற்கு ஏற்றபடியே நடந்து கொண்டு வந்தாள்.

கிராமத்துக் கட்டழகியின் கவர்ச்சி, நகரத்துச் சூழ்நிலையில் மெள்ள மெள்ளத் தானாகவே மாறிக்கொண்டு வரலாயிற்று. ஒருவரும் கவனிக்கக்கூட முடியவில்லை. பசுமைக்குப் பக்கத்திலே இந்த 'இளமை' உலாவிக் கொண்டிருந்த காட்சிக்கும், பங்களாவில் ஆள் நடமாட்டம் இல்லாமல், அந்தஸ்தைக் காட்டும் பொருள்களுக்கும் மத்தியில் செல்லி இருந்த காட்சிக்கும் வித்தியாசம் காணப்பட்டது. அதைக் கவனித்தறிய வடிவேலனால் முதலிலே முடியாமற் போனதற்குக் காரணம், அவன் அவளிடம் சொக்கிக் கிடந்ததுதான்! மடுவிலே இறங்கி, மகிழ்ச்சியுடன் நீந்தி விளையாடுவாள், கிராமத்தில்; வேறு பெண்களும் குளிக்க வருவார்கள்-விளையாட்டு பலமாகிவிடும்; தண்ணீரை வாரி வாரி இறைத்துக் கொள்வார்கள். யார் முதலிலே வெளியே தலையைத்

தூக்குகிறார்களோ அவர்களுக்கு மூணு குட்டு தலையிலே என்று பந்தயம் கட்டிக்கொண்டு, தண்ணீருக்குள் மூழ்கிக் கிடப்பார்கள்—உலர்ந்ததும் உலராததுமாகவே கூந்தலைக் கோதி முடிந்து கொள்வார்கள் - இவைகளாலே அவர்களின் உள்ளத்திலே ஒருவித சுறுசுறுப்பும், உடலிலே ஒருவித மினுமினுப்பும் ஏற்பட்டது—எழிலூட்டிற்று. இங்கே, வெந்நீர்! விதவிதமான சோப்புக் கட்டிகள்! பேசாமல், சிரிக்காமல், குளித்துவிட்டு வரவேண்டும். குளிப்பது கிராமத்திலே, விளையாட்டிலே ஒன்று. இங்கு கடமைகளில் ஒன்று! கிராமத்திலே, கண்களுக்கு விருந்தளிக்கப் பல காட்சிகள்—கிளி பழத்தைக் கொத்தித் தின்னும்; காடை கௌதாரி கீழே சிதறிக்கிடக்கும் மணிகளைப் பொறுக்கித் தின்னும்; வயலோரத்து நீரோடையில் வாத்துக்கள்; பல இடங்களில் மரம் குத்திப் பறவைகள்; மடுவிலே விதவிதமான மீன்கள், பட்டுப் பூச்சிகள்; எங்கு பார்த்தாலும் வர்ணத்தை அள்ளித் தெளித்ததுபோல, ஆட்டுக் குட்டிகள் துள்ளுவதும், கயிறு அறுத்துக் கொண்டு ஓடிவரும் காளையைப் பிடிக்க உழவர்கள் கூச்சலிடுவதும், பெண்கள் பயந்து ஒதுங்குவதும், இப்படிப் பல காட்சிகள் கண்டு, அதனாலே உள்ளத்துக்கு உற்சாகம் கிடைத்தபடி இருந்தது. முயற்சி—வெற்றி—இந்த இரு கட்டங்கள்தானே மனித உள்ளத்துக்கு எழிலும், உரமும் தருவன; அந்த நிலை, கிராமத்திலே விநாடிக்கு விநாடி ஏற்பட்டு வந்தது. ஒவ்வொரு காரியமும் வெற்றி அளிக்கும்போது களிப்பூட்டும். இங்கு, கடிகாரத்தின் முட்கள், பிறருக்காக, ஒழுங்காக வேலை செய்து கொண்டிருப்பதுபோல, வாழ்க்கை அமைந்திருந்தது. கடிகாரம் மணி அடிப்பது போல, இங்கு சில நேரம் பேச்சு—சிரிப்பு—மற்ற நேரத்தில், ஒழுங்கான நிதானமான, அளவிடப்பட்ட ஓட்டம்!! செல்லியின் வாழ்க்கை இது போல இருந்ததில்லையே. அவளுக்கு ஆச்சரியமாகவே இருந்தது எண்ணிப் பார்க்கும்போது. அவள் காதிலே அவள் குதூகலமான குரலொலிபட்டு, நாட்கள் பலவாகிவிட்டன. கிராமத்திலே ஒரு நாளைக்கு நூறு தடவை அவள் கூவுவாள். பெரியப்பா! அண்ணேன்! பாட்டி! அப்போய்! அட, உன்னைத்தான்! கூனுக்கிழவா! கொண்டைக்காரி! சண்டைக்காரி—

இப்படி ஒவ்வொருவருக்கு ஒரு பெயரிட்டு, உரத்த குரலில் கூப்பிடுவாள்; ஓடிச்சென்று சிலரைத் தடுத்து நிறுத்துவாள்; சிலர் கரத்தைப் பிடித்திழுத்து விளையாடுவாள்—எல்லாம் பழங்கதையாகிவிட்டது. உரத்த குரலில் பேச வேண்டிய அவசியமே ஏற்படவில்லை. எப்போதும் சண்பார்வையில் பட்டபடி இருக்கிறாள் வேலைக்காரி! மாமி, எதிரிலேயே சோபாவில் உட்கார்ந்து கொண்டு 'பாரதம்' படிக்கிறார். அவரோ, வந்ததும் ஓவியம் எழுதுகிறார்—அது முடிந்ததும், 'எப்படி கண்ணழகு? உன்னோடு போட்டி போடுதா? உனக்கும் இவளுக்கும் போட்டி. யார் ஜெயிப்பீர்கள்?' என்று கொஞ்சுவார்! வேறே பேச வேண்டிய நிலைமையே வருவதில்லை; வாயடைத்துக் கொண்டல்லவா இருந்திருக்கிறோம் இவ்வளவு நாட்களாக என்று எண்ணி, தனக்குத்தானே ஆச்சரியப்பட்டாள்.

பெரிய இடத்துக்கு வாழ்க்கைப்பட வந்தவள் என்பதாலே, செல்லியிடம் உபசாரம் பேச, நாகரிகப் பெண்கள் வருவதுண்டு.

''வாங்க...'' என்று மரியாதையாகத்தான் அழைப்பாள். ஆனால் மறுகணமே, அவர்களுக்கும் நமக்கும் ஒட்டி வராது என்று பயம் தோன்றும்—மாமியுடன் பேசிவிட்டுப் போகட்டும் என்று இருந்துவிடுவாள். இவளுக்கென்ன இவ்வளவு கர்வம் என்று எண்ணிக் கொள்வார்களோ என்ற பயத்தால் சில நாட்களில் வந்த பெண்களுடன் பேசுவாள்; அவர்கள் கேலி செய்யும் விதமாக இருக்கும், அவளுடைய கேள்வி பதில் இரண்டுமே!

'பட்டிக்காடுன்னாலும், சுத்தமாகச் சுட்டெடுத்தது' என்றாள், ஒருவள்—வேகமாக நடந்தால், காற்று அடித்துக் கொண்டு போய்விடத்தக்க ஒத்தை நாடிக்காரி! அவளுடைய மனதில், தானோர் பூங்கொடி என்ற எண்ணம்—கொடிபோல உடல் இருந்தது! பூப்போல எதுவும் கிடையாது.

''நம்மோடு பேசுவதற்கே இவள் இவ்வளவு திண்டாடுகிறாளே, வடிவேலன் ஒரே கலை விஷயமாகப் பேசுவானே, என்ன பேசுவாள், இவள்'' என்று கேட்பாள் ஒரு குறும்புக்

காரி. மற்றொருத்தி, ''போடி, பேசுவது மட்டும்தானா, புருஷன் பெண்ஜாதிகளுக்குள் இருக்கும் வேலை. பேசத் தெரியாவிட்டால் என்னவாம்!'' என்று வேறோர் வம்புக் காரி பேசுவாள்.

''நாட்டுக் கட்டை என்று கேலியாகச் சொல்லுவாள். எனக்கு அதனுடைய பொருள் முன்னாலே தெரியறதில்லே; இப்ப, இவளைப் பார்த்தபிறகு, புரிஞ்சுது...'' என்பாள், அவலட்சணத்தை மறைக்க நாளெல்லாம் பல வகையால் பாடுபட்டுக் கொண்டு வந்த ஒரு நோஞ்சான்.

கண் இருக்கு காது வரையிலே! ஆனா, மிரள மிரள அல்லவா விழிக்கிறாள்!

''புருவத்திலே பார்த்தாயடி, எவ்வளவு கத்தை கத்தையா இருக்கு மயிர்—ஆனா, அதை ஒழுங்காக மை தடவி, வைத்திருக்கத் தெரியலையே...''

'அதிக உயரமில்லே; ஒட்டகைச் சிவிங்கை மாதிரி! குள்ள வாத்து மாதிரியுமில்லே, சரியான அமைப்புத்தான் இருக்கு. ஆனா, அந்த உடற்கட்டுக்குத் தகுந்த உடை உடுத்தத் தெரியறதா! காளி சிலைக்கு போர்த்தி வைத்திருக்கிறது போல, சேலையைச் சுத்திண்டு கிடக்கறா—பார்க்கச் சகிக்கல்லே...'

'கூல்டிரிங்க் கேட்டுட்டு, நான் படாதபாடுபட்டனே, ஒரு நாள்—பத்துத் தடவை, புரியறது மாதிரியா—பிறகு கொண்டு வந்து கொடுத்தா. ஒரு இழவும் புரியல்லே...'

'கிளப்புக்குப் போவமா'ன்னு நான் ஒரு நாள் கேட்டேன். ''ஏன், ஏன்! இல்லைக்கி வீட்டிலே என்ன? சமையல் கிடையாதா''ன்னு கேட்டாளே, முண்டம்! கிளப்புன்னா ஓட்டல்னு எண்ணிக் கொண்டா. பிறகு அவளிடம் கிளிப்பிள்ளைக்குப் பாடம் சொல்றது போலச் சொல்லி, வெகு பாடுபட்டு மெம்பராக்கினேன்...''

'வடிவேலன், வெசுவயஸ் படம் எழுதியிருக்கான்டி! ரொம்ப நன்னா இருக்கு. பார்க்கும்போது, நெருப்பு நம்ம மேலேயே வந்து விழுந்துடுமோன்னு தோணும். அவ்வளவு

தத்ரூபமா எழுதியிருக்கான்...இவ சொல்றா, 'இது என்ன படம், நெருப்பைப் போயி படமா எழுதவேணுமா'ன்னுகேட்கிறா? இப்படி என்னைக் கேட்ட மாதிரி, அவனைக் கேட்டிருந்தா, தலை தலைன்னு அடித்துக் கொண்டு சன்யாசம் வாங்கிக்கொண்டு விடமாட்டானோ வடிவேலன்.'

இப்படி எல்லாம் பேசுவார்கள் நாகரிக நங்கைகள்—சில வேளைகளில், செல்லத்தின் செவியில் படும்படிகூடப் பேசுவார்கள். கோபமாக இருந்தது. இருந்து? பொறுத்துக் கொண்டாள். நாம் இங்கு வந்திருப்பது, இதுகளிடம் நல்ல பெயர் வாங்க அல்ல; அவருக்கு அன்புதர—அதை நாம் வஞ்சனையின்றிச் செய்து வருகிறோம்—அவர் நம்மிடம் ஒரு குறையும் காணவில்லை; எப்போதும் போலத்தான பிரியமாகப் பேசுகிறார்; அதுபோதும் நமக்கு என்று திருப்தி அடைந்தாள்.

பிரியமாசப் பேசுகிறார் என்று அவள் எண்ணிக் கொண்டதிலே தவறு இல்லை. ஆனால் எப்போதும் போல அல்ல! அதை அவளாலே அவ்வளவு எளிதாகத் தெரிந்து கொள்ள முடியவில்லை.

"ஏன் செல்லா! பீச்சுக்கு வருவதிலே உனக்கு என்ன சங்கடம்? அந்த இடம் என்ன, புலி கரடி உலவுகிற இடமா என்ன?" என்று ஆரம்பமாயிற்று. அதிருப்திப் படலம் எது வரையில் சென்றது என்றால் "நான் போயிட்டு வருகிறேன் பீச்சுக்கு; ஊர்மிளா வந்தால் சொல்லு, நான் பீச்சிலே இருப்பேன்" என்று சொல்லி விட்டுத் தனியாகக் கடற்கரை செல்லும் அளவுக்குச் சென்றது.

ஊர்மிளா, வடிவேலனைப் பெற வேண்டுமென்பதற்காகவே, வெளியே கிளம்பும் போதெல்லாம், குறைந்தது ஒரு மணி நேரம் கண்ணாடியும் கையுமாக ஒரு வருடம் இருந்தவள். கல்லூரியில் 'ஆங்கில டான்சு'க்கு அவளுக்குத்தான் மெடல் கிடைத்தது. அவளிடம் வடிவேலனுக்குக் காதலோ என்று சந்தேகம் பிறந்தது, செல்லிக்கு; கோபமாகக்கூட இருந்தது. பிறகோ அவர் எது செய்தாலும் பொறுத்துக்

கொள்வேன்; தெரியாமல் என்னைக் கலியாணம் செய்து கொண்டார். அவருடைய மனைவியாக இருக்கும் வகையில், என் நடை நொடி பாவனை இல்லை; என்னால் யாறவும் சுலபத்திலே முடியவில்லை அவர் தன்னைத்தானே ஏமாற்றிக் கொண்டார், பாவம். ஊர்மினா உல்லாசமாகப் பேசுகிறாள். அதிலே அவருக்கு ஒரு விதத்தில் மகிழ்ச்சி. அதை யாவது அவர் பெறட்டும் என்று நினைத்துக் கொள்வாள்— கோபம்கூட மறையும்.

அடுத்த கட்டம் ஆரம்பமாயிற்று! மாமி அதைத் துவக்கி வைத்தாள். ''செல்லி! ஒரு படித்த புருஷன், நாலு பேருடன் மதிப்பாகப் பழகி வருகிறவன், நாகரிகமானவன், அவனோட மனசு சந்தோஷப்படுகிற மாதிரியாக இருக்க வேண்டும் என்கிற அறிவு இருக்க வேணாமாம்மா! கழுத்திலே தாலியைக் கட்டிவிட்ட பிறகு, மனைவியுடன் புருஷன் ஆசையா இருந்துதானே தீரணும்னு எண்ணிக் கொண்டா போதுமா? அவனுக்கு மனம் குளிரும்படியா, நாகரிகமாக உடுத்திக் கொண்டு, நல்ல இன்பமாகப் பேசிக்கொண்டு, பொழுது போக்காக இருந்தால்தானே, அவன் உன்னை எப் போதும் அன்பாக நடத்துவான். எண்ணெய் வடிந்து நெற்றி யிலே வழியுது-அதைக்கூடத் தெரிந்து கொள்ளாமலிருக்கறே! அதே கோலத்திலே,பல பெண்கள் உன்னைப் பார்க்கிறாங்க! பின்னாலே போயி எவ்வளவு கேலியாகப் பேசறாங்க தெரி யுமா? செச்சே! இப்படியா இடிச்சுவைச்ச புளியாட்டம் இருக் கிறது'' என்று புத்தி சொல்லி வந்தார்கள்; புதிய கோலம் பெறுவதற்கான வழிகளை, வேலைக்காரி மூலம் சொல்லிக் கொடுத்தார்கள். செல்லியும், நாகரிகக் கோலத்தை —உதட் டுச் சாயம் உட்பட மேற்கொள்ள ஆரம்பித்தாள். சகிக்க முடி யாத கோரம் அவளிடம் குடிபுக வந்தது.

கூந்தலை அள்ளிச் செருகிவிட்டு, சிறுமலர்ச் செண்டு வைத்திருந்தபோது இருந்த எழில், முன்பக்கம் கொம்பு போலக் கூந்தலைச் சுருட்டிவிட்டு, பின்பக்கம் இரண்டு சாட்டைகளைத் தொங்கவிட்டு, தலையிலே ஒரு பூக்கூடை யைச் சுமந்துகொண்டு செல்லி காட்சி தந்தபோது வடி வேலன், வெட்கப்படும் வடிவம் காட்டிற்று!

ஊர்மிளாவை இதே கோலத்தில் பார்த்தவர்கள் கிளியோபாட்ரா என்பார்கள்! செல்லிக்கு அதே அலங்காரம், ஆபாசமாக இருந்தது. இவ்விதமே, நாகரிக நங்கையாக வேண்டும் என்பதற்காக, செல்லி எடுத்துக் கொண்ட ஒவ்வொரு முயற்சியும் அவளுடைய இயற்கை எழிலைப் பாழாக்கி விட்டது. செல்லிக்கும் வடிவேலனுக்கும் இடையிலே இருந்த தொலைவு அதிகரித்தது; ஊர்மிளாதான் வடிவேலனுச்கு ஓவியக்கலைக்கே ஆதாரமானாள். புன்னகையுடன் ஊர்மிளா புல்லை வாயில் தடவியபடி படுத்த நிலையில் ஊர்மிளா! பந்தாடும் ஊர்மிளா! என்று இப்படியே ஓவியங்கள் கூடத்தை அலங்கரித்தன. செல்லியின் ஓவியத்தை அகற்றிவிடவில்லை; அந்த இடம் ஊர்மிளாவின் ஓவியக் காட்சிக் கூடமாகவே மாறிவிட்டது.

எழும்பி எழும்பித் தானாக அடங்கிடும் கோபம், ஏமாற்றம், வெட்கம், துக்கம் எல்லாம்கூடிச் செல்லியின்மீது படை எடுத்தன. 'இளமை' ஓரளவுக்குக் கவசமாக நின்று தடுத்தது. என்றாலும் நீண்ட நாளைக்கு இந்தக் கவசம் பயன்படாது என்பதும் புரியும் நிலை வந்தது. செல்லியின் முகம், சோக பிம்பமாகிவிட்டது.

''ஏனம்மா! உலகத்தையே பறிகொடுத்தவ போல உம்முனு இருக்காளே, செல்லி! என்னவாம்? உடம்புக்கு ஏதாவது தொல்லையா? சொல்லித் தொலைச்சாத்தானே, ஏதாவது செய்யலாம்...''

''அவளுக்கு உடம்புக்கு என்னடா? வேளா வேளைக்குச் சாப்பிடறா, விடியிற வரையிலே தூங்கறா, விசனம் என்ன இருக்கு, உடம்பு கெட? சிலதுகளோட முகம் அப்படி. பதினெட்டிலே பால் வடியறது போல இருக்கும். இருவதிலே அழுதுவடியும். அதுக்கு என்ன மருந்து இருக்கு டாக்டரிடம்''

''ஊர் ஞாபகம் வந்திருக்கோ, என்னமோ? போகிறதா இருந்தா, அனுப்பி வையேன்...''

''நானே, அவ அப்பனுக்குக் கடிதம் போட்டுக் கூப்பிட ணுமா? ஏண்டா, அதுவா நியாயம்? அவளப்பாவா வந்து அழைச்சி இருக்கணும்...''

''நடவு வேலையோ, நாத்து வேலையோ, யார் கண்டா?''

''இல்லையானா தாசில் வேலையா இருக்கு! எந்த வேலையையும் இரண்டு நாளைக்கு ஒதுக்கி வைத்துவிட்டு, வந்து மகராஜனா அழைச்சிக்கிட்டுப் போகட்டும். நானா தடுக்கறேன்.''

செல்விக்கு விஷயம் புரிய ஆரம்பித்தது! அன்பு குறைந்தே போய்விட்டது. அவசரப்பட்டு இந்தக் கலியாணத் தைச் செய்து கொண்டோம் என்கிற எண்ணமே வடிவேல னுக்கு வந்துவிட்டது என்பது தெரிந்துவிட்டது.

தெரிந்து? உரிமைக்காகப் போராடுவேன் என்று நினைத் தாளா? அல்லது, அவனுடைய மனதைத் தன்வசம் மீண்டும் கொண்டு வரத்தக்க வழி என்ன என்று ஆராய்ந்தாளா? இல்லை. அவள் வடிவேலனாகத் தேடிக் கொண்ட மனைவி - அவள் அவனைக் கழனியோரத்தில் கண்டு சிரித்ததில்லை. களத்துமேட்டில் கை கோர்த்து விளையாடியதில்லை, கை அடித்து சத்தியம் செய்து கொடுத்ததில்லை, பொரி விளங் காய் உருண்டை கொடுத்துவிட்டு, நகக்குறியைப் பரிசாகப் பெற்றதில்லை! அவள் அவனைக் கணவனாகப் பெற்றாள்—அதுகூட இல்லை; அவன் அவளை மனைவியாகக் கொண்டி ருக்கிறான். அதுதானே தொடர்பின் பொருள்? அது மாறும்; மறையும். அதற்காக என்ன செய்ய முடியும்? வந்ததை அனு பவிக்க வேண்டியதுதான் என்று கருதிக் கொண்டாள்.

கிராமச் சூழ்நிலை இல்லாமற் போனதாலேயே குலைந்து வந்த அவளுடைய கவர்ச்சி, கணவனின் மனம் மாறிவிட்ட தால் ஏற்பட்ட வேதனையால், மேலும் கெட்டு விட்டது. காய்ச்சல் அதிகமானவனுக்கு, அம்மையும் வந்தால் என்ன ஆகும், அதுபோல!!

"அவசரப்பட்டு மாட்டிக் கொள்வானேன்—இப்போது அவதிப்படுவானேன்:" என்று ஊர்மிளா கேட்கிறாள்.

''என்னைச் சித்திரவதை செய்யாதே! எனக்கு ஒரு மாதிரி மனமயக்கம்; கிராமத்து மீது மோகம். அந்த நிலையில், செல்லி என் கண்ணுக்குத் தங்கப்பதுமை போலத் தெரிந்தாள்...''

''இப்ப மட்டும் என்னவாம்? நல்ல உடற்கட்டு? உழைப்புக்கு ஏற்றவள்.''

''போதும், ஊர்மிளா! நான்தான் பெருந்தவறு செய்துவிட்டேன் என்பதை ஒப்புக்கொள்கிறேன். இனி என்னசெய்ய முடியும்? சனியனை விரட்ட முடியுமா. ஊருக்குப் போய்த் தொலை என்று சொன்னாலும், நகர மறுக்கிறது....''

''எப்படிப் போவாள்? அவள் என்ன இலேசுப்பட்டவளா? அங்கே போனால், வெல்வெட்டு மெத்தையா போட்டு வைத்திருக்கு? வைக்கோற்போர்தானே...!''

அதற்குமேல் பேச்சு கேட்கவில்லை. வளையல்கள் ஒலித்தன! நாற்காலிகள் மோதின! ஊர்மிளா சிரித்தாள்! செல்லி கண்களைத் துடைத்துக் கொண்டு, சமையற்கட்டு பக்கம் சென்றுவிட்டாள். ஒரு மணி நேரம் கழித்து வடிவேலன் குளிக்கச் சென்றான், புதிதாக வந்த சினிமாவில் காதலர்கள் பாடும் பாட்டை மெல்லிய குரலில் பாடியபடி.

பெரிய இடத்திலே பெண்ணைக் கொடுத்துவிட்டோம். அடிக்கடி அங்கு போனால், பெண்ணின் மீதுள்ள ஆசையால் வருவதாக ஊரார் எண்ணிக் கொள்ள மாட்டார்கள். பசையும் ருசியும் உள்ள இடத்துக்குப் போய், கிழவன் ஒட்டிக் கொண்டான் என்றுதான் ஏசுவார்கள் என்ற எண்ணத்தால் சடையாண்டி மகளைப் பார்க்க வருவதில்லை. ஏதாவது 'விசேஷம்' நடக்கும்போது போய்ப் பார்க்கலாம் என்று இருந்துவிட்டான்.

கிராமத்தின் கவர்ச்சியை அடிக்கடி சென்று ரசித்து வந்த வடிவேலன், கலியாணமான புதிதில் வந்து கொண்டிருந்தான் —பிறகு அந்தப் பழக்கம் நின்றுவிட்டது.

ஊர்மிளா, கிராமத்தைப் பற்றி அருவருப்புக் கொள்ளும் படிகூடச் சொல்லிவிட்டாள்.

''என்ன இருக்குது கிராமத்திலே! ஒரே பொட்டல் காடு! பெ. ந்துகளில் நரிகள் இருக்கும்! புதர்களிலும், புற்றுகளிலும் பாம்பு இருக்கும். வயலிலே நண்டு இருக்கும். குளத்திலே முதலை இருக்கும், காளி கோயில் இருக்கும், கூளி கோயில் இருக்கும், இதன் நடுவே தலை ஒரு வேஷமும் துணி ஒரு மோசமுமாக ஜனங்கள் இருப்பார்கள், மாடு ஆடு ஓட்டிக் கொண்டு அல்லது சேறு சகதியிலே புரண்டு கொண்டு! ஓவியமாகப் பார்க்கும்போது, கண்ணுக்கு அழகுதான்! ஆனா, கிராமத்திலே வாழ்ந்துகொண்டு, கிராமத்து வேலையைச் செய்துகொண்டு, கிராமத்தார் போலவே இருந்துவிட முடியுமா? சொல்லுங்க பார்ப்போம்? பொழுது போக்குக்கு என்ன இருக்கு? கிளி கொஞ்சும், சோலையிலே என்று சொல்வீர்— சரி—இராத்திரி வேளையிலே நரி ஊளையிடும், ஆந்தை கத்தும், வெறிநாய் குலைக்கும், பயமற்றுத் தெருவிலே நடக்க முடியுமா? கிராமம், உலகம் தெரியாதவர்கள், படிப்பு அறியாதவர்கள், உழைத்து பிழைக்கறதுக்காக உள்ள இடமே தவிர, நமக்கு ஏற்ற இடமா? செச்சே! என்னாலே ஒரு நாளைக்கு மேலே தங்கி இருக்க முடியாது. பத்துப் பதினைந்து சினேகிதாளோட 'வன போஜனம்' செய்யப் போகலாம்; டார்ச் லைட் மட்டும் இருந்தால்கூடப் போதாது; பெட்ரமாக்ஸ் இருக்க வேணும், கிராமபோன் அவசியம் வேணும், சீட்டுக்கட்டு இருக்கணும். இவ்வளவு பக்கமேளம் இருந்தாத்தான் ஒரு பொழுதை ஓட்டமுடியும், கிராமத்திலே...'' என்றாள். ஆமாம் என்று ஆமோதித்தது மட்டுமல்ல, வனபோஜனத்துக்கு ஏற்பாடு செய்தான் வடிவேலன், ஊர்மிளா சொன்ன முறைப்படி! ஒரே ஒரு மாறுதலுடன். பத்துப் பதினைந்து நண்பர்களை அழைத்துக் கொண்டு போகவில்லை—இருவர் மட்டும் சென்றனர்.

கிராமத்துத் தோப்பில் மருமகப்பிள்ளை 'கூடாரம்' அடித்திருக்கிறார் என்று கேள்விப்பட்டு, சடையாண்டி ஓடோடிச் சென்றான்.

''மருமவப் பிள்ளே! இது நல்லா இருக்குதுங்களா? கல்லுப் போல நானொருத்தன் இருக்கறப்போ, தோப்புலே வந்து தங்கிகிட்டிங்களே. வாங்க, நம்ம வீட்டுக்கு. இப்ப, புதுசா, முன்பக்கம் ஒரு கூடம்கூட போட்டு இருக்கு...வசதியாகத்தான் இருக்கு'' என்று அழைத்தார். வடிவேலன் வருவதற்கில்லை என்றுகூறி அனுப்பிவிட்டான். வருத்தம், வெட்கம், சடையாண்டிக்கு. அதிலும், தன் மகளை அழைத்து வராமல், ஏதோ ஒரு 'புடலங்காயை' அழைத்துக் கொண்டு வந்திருப்பதைப் பார்த்தபோது வயிறு எரிந்தது.

இந்த வயிற்றெரிச்சலோடு வீடு சென்றால், வாசலில் வேலப்பன் நின்று கொண்டிருந்தான்—உருமாறிபபோய்! அவனைப்பார்க்கவே கஷ்டமாக இருந்தது, சடையாண்டிக்கு. துக்கம் கப்பிக் கொண்டது! எவ்வளவு அருமையாக வளர வேண்டியவன், அவனை மருமகனாக்கிக் கொள்ள மனம் எவ்வளவு துடித்தது, படுபாவி ஆடி அழிந்து, நமது ஆசையை அழித்துவிட்டு, இப்போது பட்டுப் போன மரம்போல வந்து நிற்கிறானே என்று ஆத்திரமாகக்கூட இருந்தது. அடக்கிக் கொண்டு, ஒப்புக்கு 'சேதி' விசாரித்தான். வேலப்பனுக்கு சுருக்கமாகவே பதில் சொல்லிவிட்டு, சிலோனுக்குப் போக ஏற்பாடாகிவிட்டதாகவும், செலவுக்கு ஒரு ஐம்பது ரூபாய் வேண்டும் என்றும் கேட்டான்.

மனத் துணிச்சலைப் பாரு! என் மகளோட மனக்கோட்டையைத் தூளாக்கிவிட்டு, எனக்கும் மானம் போகிறவிதமா நடந்துவிட்டு, குடித்துக் கூத்தாடி, ஜெயிலுக்குப் போய் வந்து என்னையே பணமல்லவா கேட்கறான், பாவிப்பய—என்று கோபம்தான். ஆனால், வேலப்பனை ஏறிட்டுப் பார்த்த போது, அவன் கண்களிலே இருந்த வேதனையைத் தெரிந்து கொண்டு சடையாண்டியால் அழுகையை வெகு சிரமப்பட்டுத்தான் நிறுத்திக் கொள்ள முடிந்தது.

''நாளை மறுநாள் பார்ப்போம். தோப்பிலே, மருமகப்பிள்ளை வந்திருக்காரு! வாழைத் தாரு இரண்டு, பத்து இளநீர் பறிச்சிக் கொண்டுவா; கொண்டு போய்க் கொடுத்து விட்டு வரலாம்.''

''நான் வரமாட்டேன். அங்கே செல்லி வந்திருக்குமே.. எப்படி அதோட முகத்திலே முழிக்கிறது? வேண்டாம்...''

''செல்லி வரலே...அவரு வேறே ஒரு சிநேகிதர்கூட வந்திருக்காரு...''

''அப்படியா? வாரேன். அவரைப் பார்த்ததே இல்லை''

இருவரும் கிளம்பினர்; தோப்பிலே கிராமபோன் இசையில் இலயித்தபடி சாய்ந்து கொண்டிருந்தாள் ஊர்மிளா! வடிவேலன் 'ஸ்டவ்' பற்றவைத்து, 'காபி' போட்டுக் கொண்டிருந்தான்.

வடிவேலனை பார்த்ததும் வேலப்பனுக்கு அடையாளம் தெரிந்துவிட்டது.

மோட்டார் கழுவ பொடிப்பயலுக்கு எட்டணா கொடுத்தவர்.!

''இவர்தானா? தங்கமானவர்; தெரியுமே!'' என்றான் வேலப்பன்

''யார் இவன்?'' என்று சடையாண்டியைக் கேட்டான் வடிவேலன்.

''நமக்கு வேண்டியவன்...பந்துதான்'' என்றான் சடையாண்டி.

''செல்லியை நான்தானுங்க கட்டிக்கொள்ள இருந்தேன் முன்னே...'' என்று கபடமற்றுச் சொன்னான் வேலப்பன். வடிவேலன், ''இடியட்! ப்ரூட்! ராஸ்கல்! எவ்வளவு வாய்க்கொழுப்பு இப்படிப் பேச'' என்று கூறிக் கோபித்துக் கொண்டான். ஊர்மிளா, குறும்புச் சிரிப்புச் சிரித்துக் கொண்டே, பலமான சிந்தனையில் ஈடுபட்டாள்.

''எப்படி ஊர்மிளா, அவ்விதம் சொல்வது? எனக்கே அவமானமாக இருக்குமே...''

''இதிலென்ன அவமானம்? வேறு எந்த வழியிலேயும் அந்தப் பட்டி இந்த இடத்தைவிட்டுப் போகமாட்டாள். சோரம் போனாள் என்று வழக்குப் போடுவதுதான் அவளை ஒழித்துக் கட்டும் வழி; எனக்குத் தெரிந்தவழி. இதற்கு உங்கள் மனம் இடங்கொடுக்கவில்லை என்றால், வெளிப்படையாகச் சொல்லிவிடுங்கள், நான் கல்கத்தா போய்விடுகிறேன்.''

''வேலப்பனுடன் செல்லி சோரத்தனமாக நடந்து கொண்டாள் என்று புகார் கூறினால், கோர்ட் நம்பவேண்டுமே—எப்படி முடியும்?''

''அது என் பொறுப்பு. நான் வேலப்பனை இங்கு வரச் செய்கிறேன். இருவரும் சந்திப்பார்கள். பழைய காதலர்களாயிற்றே! பார்த்துப் பல நாள் ஆகிவிட்டது. பதைப்பு எவ்வளவு இருக்கும்! பகலே இரவாகத் தெரியும். பக்கத்தில் எதிரில் உள்ளவர்கள்கூடக் கண்ணுக்குத் தெரியாது.''

''போதும், ஊர்மிளா! என் மனம் சரியாக இல்லை. எனக்கு வேதனையாகவே இருக்கிறது.''

''அப்படியானால், ஏன் வீணாக இரண்டும் கெட்டு அலைகிறீர்கள்? என்னை மறந்துவிட்டு அந்த அழகியோடு சல்லாபமாக வாழ்க்கையை நடத்துவதுதானே''

''உன்னைவிட்டுப் பிரியவே முடியாது, ஊர்மிளா! அவளை விரட்ட வேறு என்ன வழி வேண்டுமானாலும் சொல்லு. அவள் சோரம் போனவள் என்று சொல்லி வழக்குப் போடும் ஈனத்தனத்தை மட்டும் செய்யும்படி என்னைத் தூண்டாதே.''

''வழக்கு போடும்படி சொன்னது தவறு...அப்படித்தானே....சரி...அவர்கள் இருவரும் கலியாணம் செய்து கொள்ள வேண்டுமென்று நெடுநாளாக ஆவலாக இருந்தார்

கள்; பழகி வந்தார்கள் என்று அந்தச் சடையாண்டியே சொன்னாளே. அந்தக் காலத்திலே உத்தமியாகவா இருந்திருப்பாள், உங்களோட தர்மபத்தினி?'

'பளார்! பளார்!' என்று அறை விழும் சத்தமும், 'ஐயோ! ஐயோ!' என்ற அலறலும் கேட்டு, அதுவரை அந்த உரையாடலை ஒட்டுக் கேட்டுக் கொண்டிருந்த செல்லி, என்ன செய்வதென்று தெரியாமல், உள்ளே புயல்போல நுழைந்தாள். ஊர்மிளா, வேகமாக வெளியே நடந்தாள்! அடியற்ற நெடும் பனைபோலக் கீழே விழுந்தாள்; வடிவேலனுடைய கால்களைப் பிடித்துக் கொண்டு கதறினாள்.

''கலியாணத்தின்போது நான் இந்தக் களிப்பு அடையவில்லை. என்னை இவ்வளவு செல்வத்திலே வைத்தபோதும் சந்தோஷப்படவில்லை. எவ்வளவுதான், என்மீது வெறுப்பு இருந்தாலும், என்மீது அபாண்டம் சுமத்த, என் பெயரைக் கெடுக்க முடியாது. அது ஈனத்தனமான காரியம் என்று சொன்னீர்களே, அதுபோதும் எனக்கு. அந்த ஆனந்தம் எனக்கு வேறு எதிலும் கிடையாது. என்னை நீங்க, அவசரப்பட்டு ஆய்ந்து பார்க்காமத்தான் கலியாணம் செய்து கொண்டிங்க..ஆனா..மேலே எரிகிறவன் சாட்சியாகச்சொல்கிறேன். நான் மாசு மருவற்றவள்—பழிபாவத்துக்கு பயந்து நடக்கறது, கிராமத்தாருக்கு பரம்பரை பரம்பரையாகப் பழக்கம். வேலப்பனை நான் கலியாணம் செய்து கொள்ள ஆசைப்பட்டது நிஜம்—தவம் கிடந்தேன்னுகூடச்சொல்லலாம்—ஆனா அவரு, தவறான பாதையிலே போயிட்டாரு. தன்னைத் தானே கெடுத்துக்கிட்டாரு...அப்போதே என் மனத்திலே இருந்து போயிட்டாரு...ஒரு தப்பும் ஒரு நாளும் நடந்தில்லிங்க. ஊர்மிளா இல்லிங்க நானு; ஊர் உலகத்துக்கு மட்டும் இல்லிங்க; உள்ளத்துக்கும் பயந்து நடக்கிறவ. பட்டிக்காட்டா, பட்டினத்திலே வந்ததாலே, உங்களுக்கு மனைவியாக வந்ததாலே, பலமாதிரியான அவமானம் உங்களுக்கு வந்தது; எனக்குத் தெரியும்...என்மேலே தப்பு இல்லிங்க, என்மேலே தப்பு இல்லே. இப்பவும் நான் உங்க வாழ்க்

கைக்குத் தடையா இருக்கவே மாட்டேன்—ஆனா, ஊர் மிளா வேண்டாமுங்க, உத்தமர்களோட அறிவை எல்லாம் கெடுத்துவிடுகிற காதலி வேண்டாமுங்க, நல்ல படிச்ச பொண்ணா பார்த்து, உங்களோட நாகரிகத்துக்கு ஏத்தவளாகப் பார்த்துக் கலியாணம் செய்து கொண்டு வாழ்ந்துகிட்டு இருங்க—ஒரு நாலு மாதம் தவணை கொடுத்தா போதுமுங்க...கருவிலே சிசுவோடு தற்கொலை செய்து கொள்ள மனம் வரவில்லைங்க, இல்லையானா நான் சின்னப் புள்ளையிலேயிருந்து விளையாடிக் கொண்டிருந்த மடுவிலே இப்பவும் தண்ணி இருக்குதுங்க. என்னாலே முடியும், உயிரை மாய்த்துக் கொள்ள...''

கோவெனக் கதறித் தலைதலை என்று அடித்துக் கொண்டு, அப்படியே வாரி எடுத்து செல்லியை மார்புற அணைத்துக் கொண்டு,

''செல்லி! செல்லி'' என்று மட்டுமே கூறிக்கொண்டு நின்றான், வடிவேலன்.

அவன் தீட்டிய ஓவியம் புதிய பொலிவு பெற்றதுபோலக் காட்சி அளித்தது.

# 3

# ஏழை

அவன் ஓர் ஏழை—ஏளனத்துக்கு ஆளானவன். 'தொட்டது துலங்காது, கெட்டது நல்லது புரியாது, மாடுபோல் பாடுபடுவான், புத்தி கிடையாது' என்று நண்பர்களே நையாண்டி செய்வார்கள். சில வேளைகளில்தான் அவனுக்குக் கோபமும் துக்கமும் பீறிட்டுக் கொண்டு வரும். பொதுவாகச் சிரித்தபடிதான் இருப்பான்—உள்ளூர அவனுக்கே, தனக்குப் போதுமான அளவு அறிவுக்கூர்மை இல்லை என்ற எண்ணம்போலும். ஆகவே உள்ளதைத்தானே சொல்கிறார்கள், இதற்காகக் கோபித்துக் கொள்ளலாமா என்று எண்ணித் தனக்குத் தானே சமாதானம் தேடிக் கொள்வான்.

அவன் ஏழை. ஆனால் ஏழை என்ற நிலையிலிருந்து விடுபட்டாக வேண்டும் என்ற எண்ணம் எப்போதும், குடைந்து கொண்டிருக்கும் மனம் கொண்டவன். எதையாவது செய்து எந்தப் பாடாவது பட்டுப் பொருள் பெற வேண்டும்; ஏழ்மையை விரட்டிட வேண்டும்—செல்வவான் ஆகவேண்டும் என்று எண்ணுவான்; கூறுவான்.

'வேலையில் சுறுசுறுப்பு இல்லை, செய்வதிலே தவறுகள் ஏற்பட்டுவிடுகின்றன. சுட்டிக் காட்டினால் இளிக்கிறான் அல்லது கெஞ்சுகிறான். தொலைத்து விடலாம் என்றாலோ பார்க்கப் பரிதாபமாக இருக்கிறது' என்று முதலாளி கூறுவதுண்டு பலமுறை. அப்போதெல்லாம், ஏழை எல்லப்பன், எப்படிப் பணக்காரனாவது என்று திட்டமிட்டுக் கொண்டு இருந்தான் என்பது பொருள். அதை எப்படி அவன் கூச்சத்தை விட்டு வெளியே கூறமுடியும்? முட்டாள் என்றுகூட ஏசு

வார்கள்—கோபித்துக் கொள்வதிலே பயன் இல்லை என்று மனதுக்கு ஆறுதல் கூறிக் கொள்வான்.

முயற்சியைக் கைவிடக்கூடாது என்று ஒவ்வோர் தோல்வியின்போதும் எண்ணிக் கொள்வான். ஏனெனில் அவன் பார்த்துமிருக்கிறான்; கேள்விப்பட்டும் இருக்கிறான். பணக்காரர் ஆன பலர், ஆவதற்கு முன்பு அறிவுத் திறமையுள்ளவர்கள் என்று புகழ் பெற்றவர்கள் அல்ல என்பதனை.

'மாடு மேய்க்கக்கூடப் பயன்படமாட்டாய். மண்டை முழுவதும் களிமண்தான் உனக்கு' என்று கணக்கு ஆசிரியர், ஒவ்வொரு நாளும் சொல்லிச் சொல்லித் தலையிலே குட்டுவார், செல்லப்பன் என்பவனை. எல்லப்பனுடன் படித்தவன். இன்று செல்லப்பன் பெரிய புள்ளி. பணத்திலே புரளுகிறான். சேமியா வியாபாரத்தில் ஆரம்பித்து, செயற்கை வைர வியாபாரம் நடத்தி, இப்போது, செல்லப்பா கம்பெனி ஏற்றுமதி இறக்குமதி ஏஜண்டு என்ற பட்டம்பெற்று, பத்து இலட்சத்துக்கு அதிபதியாகிவிட்டான். வீட்டுக் கணக்குக்கூட அவனுக்கு, எல்லப்பன்தான் போட்டுக் கொடுப்பான், இப்போது செல்லப்பனுக்கு, அடுத்த வருஷம் அமெரிக்காவில் எத்தனை லட்சம் பன்றிகள் இருக்கும் என்ற கணக்கிலிருந்து அவைகளுக்கு எத்தனை டன் சோளமும் உருளைக்கிழங்கும் தேவை என்பது வரையில் கணக்குத் தெரியும் என்கிறார்கள்.

'எப்படித்தான் இவ்வளவு கணக்கையும் கற்றுக் கொண்டானோ, 'மக்கு' என்று பெயர் வாங்கிய செல்லப்பன்' என்று எல்லப்பன் வியப்படைகிறான்; விளங்கவே இல்லை.

''எல்லாம் நான் கொடுத்த தகவல். அதைப் பயன்படுத்திக் கொண்டு எனக்கு உரிய பங்கு கொடுப்பதாகச் சொல்லி நம்பவைத்து, முறைகளை எல்லாம் கேட்டுத் தெரிந்து கொண்டு, கடைசியில் எல்லாவற்றையும் அவனே சுருட்டிக் கொண்டு என்னை விரட்டியேவிட்டான்; ஈவு இரக்கமற்ற பாவி!'' என்று முணுமுணுத்தபடி முடங்கிக் கிடக்கிறான் கந்தப்பன். அவனுடைய கந்தலாடையையும் தள்ளாடும் நடையையும் கண்டவர்கள், என்னமோ பிதற்று

கிறான் என்று எண்ணிக் கொள்கிறார்கள்—நம்ப மறுக்கிறார்கள்.

கந்தப்பன், தகவல்களைத் துருவித் துருவிக் கண்டறிபவன், கணக்குப் போடுபவன், புதுப் புதுத் தொழில்கள் குறித்த திட்டமெல்லாம் போடுவதில் வல்லவன். அதை விளக்குவதிலும் திறமை மிக்கவன். ஆனால் தானாகக் காரியமாற்றுவதற்குத் துளியும் வசதியற்றவன். எனவே செல்லப்பன் போன்றவர்களிடம் சென்றுதான் அவன் தன் திட்டங்களைக் கூறமுடியும். அப்படி அவன் தந்த திட்டங்களிலே ஒன்றினால்தான் செல்லப்பன் சீமானானான் என்று துவக்கத்திலே பலமாக வதந்தி உலவிற்று. செல்லப்பன் மறுக்கவுமில்லை; ஒப்புக் கொள்ளவுமில்லை. ஆமாம் என்றுதான் வைத்துக் கொள்ளேன் என்று கூறிவிட்டுச் சிரிப்பான். அவனுடைய அலட்சியப் போக்கு ஒன்றே, கந்தப்பனின் பேச்சை எவரும் நம்பமுடியாதபடி செய்துவிட்டது. எல்லப்பனிடம் இரண்டொரு முறை கந்தப்பன் புகார் கூறிப் பார்த்தான், நம்பாதது மட்டுமல்ல, எல்லப்பன் எரிச்சல் காட்டி ஏசித் துரத்தினான்.

புதிது புதிதாகப் பணக்காரர்களானவர்கள் என்னென்ன செய்து பொருள் ஈட்டினார்கள் என்பதைக் கேட்டுக் கேட்டுச் சுவைப்பது எல்லப்பனுக்கு வாடிக்கை. கந்தப்பன் அந்த விதமான பேச்சுப் பேசும்போது மட்டும், எல்லப்பன் அக்கறை காட்டுவான்; கால் அரை பணம்கூடக் கொடுப்பான்.

''இவ்வளவு தூரம் பேசுவானேன்—இஞ்சிமுறப்பாவில் ஒரு புதுமுறை இருக்கிறது. இருளப்பன் கம்பெனி சரக்கு வெறும் குப்பை என்பார்கள்! அவ்வளவு தரமுள்ளதாகச் செய்யக்கூடிய முறை எனக்குத் தெரியும். தெரிந்து? வசதி வேண்டுமே?''

''வசதி என்றால் எவ்வளவு தேவைப்படும், சொல்லேன்.''

''சொன்னால், நீ என்ன எடுத்துக் கொடுக்கவா போகிறாய்! உன்னிடம் ஏது?'

''ஏது எப்படி என்பது பற்றி உனக்கென்ன கவலை? தொழிலை ஆரம்பிக்க எவ்வளவு பணம் வேண்டும். அதைச் சொல்லு. எப்படியோ பணத்துக்கு வழி செய்து கொள்கிறேன்.''

''எப்படி என்றுதான் கேட்கிறேன். ஆசை காட்டிவிட்டு அதை நம்பி நான் புது முறையை உனக்குச் சொல்லியான பிறகு, நீ கையை விரித்துவிட்டால் என்ன பிரயோசனம்.''

''எவருக்கும் சொல்லாமல் உன் மனதோடு அந்தமுறையைப் போட்டுப் பூட்டி வைப்பதிலே என்ன இலாபம்?''

''வீணாக ஏன் வம்பு. உன்னால் மூன்றாயிரம் ரூபாய் முதல் போட முடியுமா, அதைச் சொல்லு.''

''போட்டால், என்ன இலாபம் கிடைக்கும்.''

''முதல் வருஷத்திலேயே பத்து ஆயிரம்.''

''மூன்றாயிரம் முதலீடு. பத்தாயிரம் இலாபமா! எந்த மடையன் நம்புவான்?''

''நம்பமாட்டான், உன்னைப் போன்றவன். செல்லப்பனிடம் ஒரு பேச்சு சொல்லு, உடனே விவரம் கேட்டுக் கொண்டு காலத்தை ஓட்டமாட்டான். பணத்தை எடுத்துக் கொடுப்பான்; வேலையை மளமளவென்று ஆரம்பிக்கச் சொல்லுவான். தெரியுமா?''

''உன்னைத்தான், உபயோகமற்றவன் என்று ஏசி விரட்டிவிட்டானே! இன்னும் எதற்காக அவனுடைய பேச்சு? விட்டுத் தள்ளு. மூன்றாயிரம் வேண்டும். அவ்வளவுதானே. நாலு நாள் பொறுத்துக்கொள்.''

''சரி! உன் பேச்சிலே எனக்கென்னவோ, பலமான நம்பிக்கை ஏற்படுகிறது. இதோ பார், இது ஒரு பிரபலமான அமெரிக்க நிபுணர் தயாரித்த முறை. ஒரு முறை, மகாபலிபுரத்துச் சிற்பங்களைப் பார்க்க அந்த அமெரிக்கர் வந்த போது, தற்செயலாக அங்கு போயிருந்த நான், அவருக்கு

மெத்த உதவியாக இருந்தேன். அப்போது அவர் கொடுத்த முறை இது.''

''அமெரிக்காக்காரன், ஏன் அந்த முறையைப் பயன் படுத்தித் தானே அந்தத் தொழிலை நடத்தி இலாபம் தேடிக் கொள்ளாமல் உன்னிடம் கொடுத்தான்? காரணம்?''

''காரணமா! போன ஜென்மத்தில் அவனும் நானும் ஒரே தாய் வயிற்றுப் பிள்ளைகள், போயேன். கிளறிக் கிளறித் தேவையற்றதைத்தானே நீ கேட்பது வாடிக்கை. பிழைக்கத் தெரிந்தவன் செல்லப்பன்! உனக்கு எதற்கெடுத்தாலும் சந் தேகம், குழப்பம். அமெரிக்க நிபுணர் ஆண்டர்சன் முறை என்று கூறினால் போதும்; ஒரு கேள்வியும் கேட்கமாட்டான். தொழிலை நடத்தத் தூண்டுவான். அது செல்லப்பன்!! அவன் என்ன உன்னைப் போலவா! பிழைக்கத் தெரிந்த வன்.''-இந்த உரையாடல் நடைபெற்று, கந்தப்பன் கூறிடும் திட்டம் கவைக்குதவாது என்று சொல்லி அனுப்பிவிட்டான் எல்லப்பன். செல்லப்பனிடம் பேசச் சென்றான். தொழில் விஷயமாக அல்ல, பழைய மாணவர் சங்க ஆண்டு விழா வுக்குத் தலைமை தாங்க அழைக்கச் சென்றபோது பேச்சின் இடையிலே, கந்தப்பன் கூறியதையும் சொன்னான்.

''ஆண்டர்சன் முறையா? அமெரிக்க முறை! ஆமாம்; அந்த முறை எங்கள் கம்பெனிக்கல்லவா சொந்தமாகிவிட்டி ருக்கிறது. இருக்குமே ஆறுமாதம், ஒப்பந்தம் ஏற்பட்டு. கந்தப்பன் எப்படி உரிமை கொண்டாட முடியும். பாவம்! வழக்குப் போட்டால், வம்பிலே மாட்டிக் கொள்வானே! இப்படித்தான் விவரம் தெரியாமல், எதிலாவது 'எக்கச்சக்க மாக' மாட்டிக்கொண்டு, பிறகு திருதிருவென்று விழிப்பான். அவன் வாடிக்கை அது'' என்று செல்லப்பன் கூறினான். எல் லப்பனுக்குக் கோபமே ஏற்பட்டது கந்தப்பன் மீது. வீடு சென்று பார்த்து ஏசினான். கந்தப்பனுக்கே சந்தேகம் வந்து விட்டது. ஆர்வத்திலே முன்பே கூறிவிட்டிருப்போம், நேரி டையாக ஆண்டர்சனுக்குக் கடிதம் எழுதி ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கக் கூடும்; சகல தந்திரமும் தெரிந்த செல்லப்

பன் என்று எண்ணினான். ஏக்கம் கொண்டான். மறுநாளே ஒரு எச்சரிக்கை விளம்பரம், நாளிதழ்களில் வெளிவந்தது. 'ஆண்டர்சனின் அபூர்வ அமெரிக்க முறை எமக்கே முழு உரிமையுடையது. வேறு எவரேனும் ஆண்டர்சன் முறையைத் தமக்கும் உரியது என்று கூறினால், சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும். எச்சரிக்கிறோம்' என்ற முறையில் விளம்பரம் வந்தது. கந்தப்பனே கலங்கிப் போனான்.

''உன் பேச்சை நம்பிக்கொண்டு, மூன்றாயிரம் முதல் போட்டிருந்தால், நான் என்ன கதிக்கு ஆளாகியிருப்பேன்? நல்ல வேளையாகச் செல்லப்பன் நமக்கு நண்பன். நிலை உயர்ந்தாலும் நட்புடன் இருக்கிறவன். சரியான சமயத்திலே எச்சரித்து என்னைக் காப்பாற்றினான். இல்லையென்றால் ஆபத்தாக அல்லவா போயிருக்கும்'' என்று கூறி எல்லப்பன் கண்டித்தான். கந்தப்பனுடைய கோபம், செல்லப்பன் மீது கூடச் செல்லவில்லை. நம்பவைத்து மோசம் செய்தானே, ஆண்டர்சன். நமக்கும் கொடுத்தான். அந்த முறைக்கான உரிமையை; செல்லப்பனுக்கும் அதே உரிமையைக் கொடுத்திருக்கிறானே! பேராசைதானே இதற்குக் காரணம்? சே! பார்த்தால் 'பெரிய மனுஷன்' போலக் காணப்பட்டான். காரியமோ இப்படி மோசமாக இருக்கிறது. நல்லவேளை, செல்லப்பன் முன்கூட்டியே சொல்லிவிட்டான். நாம், மூல தனம் போட்டுத் தொழிலை ஆரம்பித்துச் சில மாதங்கள் கழிந்த பிறகு, வழக்குத் தொடுத்திருந்தால், எனக்கல்லவா தலைவலியும் காய்ச்சலுமாக ஏற்பட்டுவிடும் என்று எண்ணிக் கொள்கிறான். செல்லப்பனோ, அமெரிக்க நிபுணர் முறை என்ன? அதனால் கிடைக்கத்தக்க ஆதாயம் எவ்வளவு என்று விசாரித்தபடி இருக்கிறான். மற்றவர் அம்முறையினைப் பெற்றிட ஒட்டாது தடுத்திடவே, வேறோர் ஆண்டர்சனை அலுவலகத்தில் அமர்த்தி, அவனிடம் ஒரு அமெரிக்க முறை இருப்பதாக எழுதிப் பெற்றுக் கொண்டிருக்கிறான்!

பெரிய இடம்—எனவே மோதிக் கொள்ள எவருக்கும் துணிவு இல்லை! அதிலும் கந்தலாடைக் கந்தப்பன் எங்ஙனம் துணிவு பெறமுடியும்.

பெரிய இடம் என்பதற்கு எடுத்துக் காட்டாகச் செல்லப்பன் பெற்ற பல வெற்றிகள் விளங்கிக் கொண்டிருந்தன. பட்டமரம் துளிர்விடச் செய்பவன், பாழ் வெளியைப் பழமுதிர்ச் சோலையாக்குபவன் என்று ஒருவனைக் கூறினால் அவன் ஓர் மாயாவி என்று அல்லவா கருத்து இருக்கிறது என்று பொருள். கெட்டுவிட்டது—விட்டு விட்டேன் என்று எவரேனும் ஒரு தொழிலைக் குறித்துச் சொல்லிவிட்டால், அந்த இடத்திலே செல்லப்பன் இருப்பான்—நான் நடத்திக் கொள்கிறேன் என்று கூறிட! நடத்தியும் காட்டுவான். அது எந்த வகையிலேயோ அவனுக்கு இலாபமாகத்தான் முடியும்.

என்ன செய்வானோ தெரிவதில்லை. கணக்கு பார்க்கும்போது இலாடம் இருக்கும். யாராரைப் பிடிப்பானோ, எப்படியெப்படித் திட்டமிடுவானோ எவருக்கும் விளங்காது. ஆனால், இறுதியில் வெற்றிபெற்றுக் காட்டுவான். இந்த முறை தொலைந்தான்! இதிலே சரியாகப் போய்ச் சிக்கிக் கொண்டான். மீளமுடியாது!—என்று ஊரே பேசும். நண்பர்கள் எச்சரித்துப் பார்ப்பார்கள். ஆனால் அவர்கள் யாவரும் முகத்தைத் தொங்கப் போட்டுக் கொள்ளும் விதமான முறையில் வெற்றிபெற்றுக் காட்டுவான்.

ஆறுமுகம், ஜாதகம் பார்த்து, முகூர்த்த வேளையில் ‘கடைக்கால்’ போட்டு அமைச்சர்களின் ஆசீர்வாதத்துடன் ஆரம்பித்த இரும்புப் பட்டறை ஆறே மாதத்தில் மூடப்பட்டுவிட்டது. தாங்கமுடியாத நஷ்டம் மட்டுமல்ல, ஊர் எதிர்ப்பு அவ்வளவு ஏற்பட்டுவிட்டது. ஊராட்சி மன்றம் ஒருமனதாகத் தீர்மானம் நிறைவேற்றிவிட்டது. இங்கு கிடைக்கும் இரும்புச் சத்துக் கலந்த மண்ணை வெளிநாடுகளுக்கு அனுப்புவதுதான் நல்ல இலாபம் தருமேயொழிய, இரும்புப்பட்டறை அமைத்துவிடுவது தனிப்பட்ட ஆறுமுகம் இலாபம் அடிக்கத்தான் பயன்படும். ஆகவே ஊராட்சி மன்றம் இந்த ஏற்பாட்டை வன்மையாகக் கண்டிக்கிறது என்று ஒரு தீர்மானமும், இரும்புப் பட்டறை ஏற்படுத்தியதால், இதுவரையில் உழவுத்தொழிலிலே ஈடுபட்டிருந்தவர்கள் அதைவிட்டுவிட்டுத்

தொழிற்சாலையில் சேர்ந்துவிடுகிறார்கள். உழவுத் தொழிலுக்கு ஆட்கள் கிடைப்பது கடினமாகி விட்டது. உழவுத் தொழிலே நாசமாகி ஊரார் சோற்றுக்கே திண்டாடவேண்டி நேரிடும் என்று எச்சரிப்பதுடன், ஊர் மக்களின் நல்வாழ்வை எண்ணி ஆறுமுகம் தமது ஆலையை மூடவிடவேண்டுமென்று வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறோம் என்று மற்றோர் தீர்மானமும், ஊராட்சி மன்றம் நிறைவேற்றிற்று.

அடிக்கிறான் கொள்ளை!

அகப்பட்டதைச சுருட்டுகிறான்!

நாம் இளித்தவாயர்கள்

நமது பூமியில்தானே இருக்கிறது இரும்பு மண்.

நாம் கொடுத்தால்தானே அவன் வெட்டி எடுக்க முடியும்.

நிலத்தை விற்காதே!

என்றெல்லாம் பேச்சு, முழக்கம், சுவரொட்டிகள்! ஆலைக்கான கட்டிடம் மட்டும் இரண்டு இலட்சம் ரூபாயை விழுங்கி விட்டது. ஆறுமுகத்தால் சமாளிக்க முடியவில்லை.

இரும்பு கலந்த மண்ணைத் தோண்டி எடுக்கும் தொழிலாளருக்குப் புதுவிதமான நோய் கண்டுவிடுவதாக ஒரு டாக்டர் பலமாகப் பிரச்சாரம் செய்யத் தொடங்கினார். நோய் வராமலிருக்க வேண்டுமானால், தொழிலாளர்களுக்கு சுகாதார முறைப்படி விடுதிகளைக் கட்டிக் கொடுக்க முதலாளி முன்வரவேண்டும் என்ற கிளாச்சியும் தொடங்கப்பட்டது. தொல்லைகள் தாங்க முடியாத அளவுக்கு ஏற்பட்டுவிட்டது கண்டு, பணம் போனால் போகட்டும், மன நிம்மதியாவது இருக்கட்டும் என்று எண்ணி ஆறுமுகம், இரும்பு ஆலையை மூடிவிட்டார்.

அடுத்த ஆறுமாதத்துக்குள் அந்த ஆலையை மிகக் குறைந்த விலைக்குச் செல்லப்பன் வாங்கினான். ஆறுமுகமே அகப்பட்டுக் கொண்டு விழித்தான். விட்டால்போதும் என்று

ஓடிவிட்டான். இவனுக்கென்ன கெடுமதி? விலை கொடுத்துச் சனியனை வாங்கிக் கொள்கிறானே என்றனர், பலரும்! செல்லப்பன் முதலில், ஆலைக்கட்டிடத்தின் வண்ணத்தை மாற்றினான். கண்ணுக்குக் குளிர்ச்சியான பச்சை நிறம்!

''எப்படி! பார்க்கக் குளுகுளு என்று இருக்கிறதல்லவா?'' என்று கேட்டான். 'ஆமாம்' என்றனர். ஊர் இது பற்றியே பேசலாயிற்று.

என்ன இருந்தாலும் செல்லப்பன் கெட்டிக்காரன். முன்பு அந்தக் கட்டிடத்தைப் பார்த்தால் ஜெயில்போல இருக்கும்! காவிக்கலர் அடித்திருக்கும். உள்ளே நுழைகிற தொழிலாளிக்குப் பயமாகவே இருக்கும். இப்போதுதான் பார்வையாக இருக்கிறது. கிளிப்பச்சை நிறம்!''

''அதுமட்டுந்தானா? முன்பு ஒவ்வொரு ஆளாகத்தான் உள்ளே போகலாம். வாயிற்படி அவ்வளவு குறுகல். இப்போது பாரேன். யானை நுழையலாம் தாராளமாக! அப்படித் திருத்தி அமைத்துவிட்டான்.''

''ஆறுமுகம் கஞ்சன். செல்லப்பன் அப்படி அல்ல; தாராளமாகச் செலவு செய்வான்; வருகிற இலாபம் மெதுவாக வரட்டும் என்று இருப்பான். இந்த ஆறுமுகம் அப்படி அல்ல. ஒட்டக் கறந்து பசுவை ஓடாக்கிவிடுவான்.''

இப்படி ஊரார் உரையாடல். செல்லப்பனிடம் ஆலை வந்ததும் ஏதோ புதிய மாறுதல்! நல்ல நிலைமை ஏற்பட்டு விடுகிறது என்ற எண்ணம் பரப்பப்பட்டது. வண்ணம் புதிதாக அமைக்கவும், வாயற்படியை பெரிதாக்கவும் செலவு அதிகம் ஆகவில்லை. வண்ணம் அடிக்கும் கூலி நூறு ரூபாய் தான்! வண்ணத்துக்குச் செலவு இல்லை. புதிதாகத் துவக்கப்பட்ட வண்ணக் கம்பெனி செல்லப்பன் தயவை நாடித் தங்கள் சரக்குக்கு ஏஜண்டாக இருக்கும்படி கேட்டுக் கொண்டது. 'பார்க்கலாம். ஆனால் முதலில் உங்கள் வண்ணம் எப்படி இருக்கிறது என்பது எனக்கும் தெரியவேண்டும். ஊருக்கும் விளங்க வேண்டும். ஆகையினால் ஏதாகிலும் ஒரு பெரிய

கட்டிடத்திற்கு முதலில் வண்ணம் அடித்துக் காட்டுங்கள்' என்று செல்லப்பன் கூறினான். கம்பெனிக்காரர் பெரிய கட்டிடம் எங்களுக்கு எங்கிருந்து கிடைக்கும்? தாங்கள்தான் அதற்கும் ஏற்பாடு செய்யவேண்டும் என்று கெஞ்சிக் கேட்டுக்கொண்டனர். பெரிய மனது வைத்து, செல்லப்பன் ஆலைக் கட்டிடத்தைக் காட்டினான். வண்ணம் செலவின்றிக் கிடைத்தவிதம் அது.

ஆலையை வாங்குவது என்ற முடிவுக்குச் செல்லப்பன் வந்தபோது, தன் உறவினரில் சற்றுச் சரியானவராக உள்ளவரைப் பிடித்து, ''ஊராட்சி மன்றத்தைக் கண்ட பயல்களிடம் விட்டுவிட்டீர்கள். அது பெரிய ஆபத்தாக முடியும். யாராரோ ஊராட்சி மன்றத்திலே நுழைந்துகொண்டு கண்டதற்கெல்லாம் வரி போடுவார்கள். நத்தம் புறம்போக்கு பஞ்சாயத்துக்கு என்பார்கள். காலாகாலமாக உம்முடைய மேற்பார்வையில் புறம்போக்கு இருக்கிறது. மானாவாரி பயிர் செய்து ஏதோ கிடைக்கிறது. அது அவ்வளவும் பாழாகும். ஆகவே, ஊராட்சி மன்றத்தை விட்டு விடாதீர்கள். நம்மவர்களாகப் போட்டுக் கைப்பற்றவேண்டும். இந்த ஊருக்கு ஒரு கலெக்டர் வருகிறார், கவர்னர் வருகிறார் என்றால், ஊராட்சி மன்றத் தலைவரைக் கூப்பிட்டுப் பேசுவாரா, உம்மைக் கூப்பிடுவாரா? ஓரத்தில் ஒதுங்கி நீர் நிற்கவேண்டும். உம்மிடம் கடன்பட்டவன், கவர்னருடன் கை குலுக்குவான். செச்சே! இப்படி இருக்கலாமா? என்ன பிரமாதமாக செலவாகிவிடப் போகிறது! உமக்கு மனம் இல்லாவிட்டால், என்னிடம் விட்டுவிடும்; நான் பார்த்துக் கொள்கிறேன் செலவு அவ்வளவும்'' என்று தூண்டினான். ஊராட்சி மன்றம் செல்லப்பன் கைக்கு அடக்கமாகிவிட்டது. பழைய தீர்மானம் போட்டவர்கள், வெளிநாட்டு வியாபாரிகளிடம் கைக்கூலி வாங்கிக் கொண்டவர்கள் என்ற புகார் கிளப்பப்பட்டது. பத்தே ரூபாய்தான் செலவு இதற்கு! தீர்மானங்கள் 'ரத்து' செய்யப்பட்டன. ஆலைக்கு ஏற்பட்ட ஊர் எதிர்ப்பு ஒழிந்துவிட்டது. அடிக்கடி புதிய புதிய ஆட்களுடன் செல்லப்பன் ஆலைப்பக்கம் வரலானான். ஆலை பெரிதாகப்

போகிறது—குறைந்தது பத்தாயிரம் பேருக்காகிலும் வேலை கிடைக்கும் என்ற பேச்சும் பரவலாயிற்று.

''விடுதிகள் கட்டத்தான் வேண்டும்' டாக்டர் குறிப்புப்படி. தொழிலாளியின் உழைப்புதானே உண்மையான மூலதனம். பணம் என்ன செய்யும்? மண்ணைத் தோண்டுமா, இரும்பை உருக்குமா, சம்மட்டி கொண்டு அடிக்குமா, சக்கரத்தைச் சுற்றுமா! உழைப்பினால்தானே இது முடியும். தொழிலாளர்கள் திடகாத்திரமாக இருந்தால்தானே உழைப்பின் பயன் முழுதும் கிடைக்கும்.''

''விடுதி கட்டுவது என்றால் ஏராளமாகச் செலவு ஆகுமே?''

''செலவு செய்தால் என்ன? வாடகை ஈடுசெய்துவிடுகிறது. நிலத்திற்காவது செலவு இருக்கிறது; பலவிதமான செலவு. வீட்டுக்கு என்னய்யா! கட்டிப் போட்டால், வாடகை தானாக வருகிறது, மாதாமாதம்.''

''தொழிலாளர்கள் ஒழுங்காக வாடகை கொடுப்பார்களா?''

''அவர்களை ஏன் கேட்கிறாய். அதற்கு நான் இருக்கிறேன். வாடகையை நான் கட்டிவிட்டு, அவர்களின் கூலியில் பிடித்துக் கொண்டு கணக்கைச் சரிசெய்து கொள்கிறேன்.''

''அப்படி ஏற்பாடு இருந்தால் மோசமில்லை.''

''மோசமில்லையா! பெரிய ஆளய்யா நீ! போட்ட முதலுக்குச் சரியான இலாபம் கிடைக்கும் என்பதைக் கூறக்கூட மனம் இல்லையா! பெரிய அழுத்தக்காரராச்சே.''

''ஐயோ, அப்படி எல்லாம் இல்லை; உங்கள் யோசனையின்படியே...''

''எத்தனை வீடுகள் கட்ட உத்தேசம்? ஏனென்றால், இடம் கிடைப்பது சற்றுச் சிரமம்.''

''இடத்துக்கு நான் எங்கே போவேன்? ஆலைக்குப் பக்கத்திலேயே, நீங்கள்தான் நிலம் தரவேண்டும்.''

''போச்சுடா! என் அடி மடியிலேயே கைவைத்து விட்டீர்களா? சரிதான்! ஆலைக்குப் பக்கத்து நிலத்தை நான் உம்முடைய பணத்துக்கு ஆசைப்பட்டுக் கொண்டு விற்று விட்டால், நாளைக்கு ஆலை விரிவாக வேண்டுமானால், இடத்துக்கு நான் எங்கே போவது?''

''அப்படிச் சொல்லிவிடக் கூடாது. 200 ஏக்கர் அளவு இருக்கிறது உமக்கு இங்கு. எனக்கு அதிகம் வேண்டியதில்லையே! 20, 30 ஏக்கர் இருந்தால் போதும்.''

இந்த உரையாடல், செல்லப்பனுக்கு ஆலை வாங்கச் செலவிட்ட பணத்திலே சரிபாதி கிடைக்க வழி செய்துவிட்டது.

தொழிலாளர்களுக்கான ஓட்டல் நடத்த ஒருவன் வந்தான்—ஐயாயிரம் அதன் மூலம்.

சினிமாக் கொட்டகை நடத்தினால் ஏராளமான இலாபம் வரும் என்ற ஆசையில் போட்டி போட்டுக் கொண்டு இடம் கேட்க வந்தார்கள்—பத்தாயிரம் அதிலே!

இப்படிப் பல வழிகளில் ஆலை ஆரம்பிக்காமலேயே, ஆலைக்காகச் செலவிட்ட பணத்தைப் போல இரட்டிப்பு மடங்கு பணம் செல்லப்பனுக்குக் கிடைத்துவிட்டது.

விடுதி கட்டச் சாமான்கள் சேகரம் செய்து கொண்டிருந்தார் வில்வம்.

சினிமா துவக்க, கட்டிட அமைப்புக்கான வேலையில் ஈடுபட்டார் பாட்சா சாயபு.

பணம் செல்லப்பனிடம் சேர்ந்துவிட்டது.

செல்லப்பன் ஏற்படுத்திய பரபரப்பினைக் கண்டு, வண்ணக் கம்பெனிக்காரனுக்கே சபலம் தட்டிற்று.

'இருவரும் கூட்டாக ஆலையை நடத்தலாம்' என்று பேச்சைத் துவக்கினான்.

''வேண்டாம்! நீயே நடத்து. எனக்கு இதுவரை ஆகியிருக்கிற செலவுடன் ஏதோ ஒரு அளவு இலாபம் கூட்டிக் கொடுத்துவிடு. எனக்கு எதற்காக அதிகமான தொழில்? பலரும் தொழிலில் ஈடுபடவேண்டும். முதல்நாள் உன்னைப் பார்த்தபோதே எனக்கு உன்னை மிகவும் பிடித்துவிட்டது''

ஆலை, கைமாறி விட்டது! இலாபம் செல்லப்பன் பெட்டிக்குச் சென்றது.

விடுதி கட்டுபவனும், கொட்டகை நடத்துபவனும், நடையாய் நடக்கிறார்கள், வண்ணக் கம்பெனி முதலாளியிடம். 'எப்போது ஆலை துவக்கப் போகிறீர்கள்? உங்களை நம்பி நாங்கள் நிறையப் பணம் செலவழித்து விட்டோம். கடன்பட்டுவிட்டோம். கை கொடுக்க வேண்டும்'' என்று கேட்கிறார்கள். வண்ணக் கம்பெனி முதலாளி வாய் திறக்கவில்லை! காரணம் இரும்புப் பட்டறை நடத்த, டில்லி 'உத்தரவு' தர மறுத்துவிட்டது 'பார்க்கலாம், போய் வாருங்கள்' என்று மட்டுமே அவரால் கூற முடிகிறது.

செல்லப்பனாக இருந்தால், இந்நேரம் ஆலை ஓடிக் கொண்டல்லவா இருக்கும். அவன் கெட்டிக்காரன். நடத்தியிருப்பான். நடுவிலே இந்த ஆசாமி நுழைந்து பேராசை கொண்டு ஆலையை வாங்கிக் கொண்டான். பெரிய மனிதன் கேட்கிறானே என்று செல்லப்பன் ஆலையை விற்றுவிட்டான். வகை இருந்தால்தானே நடத்த? இவனால் நமக்கெல்லாம் நஷ்டம் என்று மற்றவர் பேசிக் கொள்கிறார்கள். செல்லப்பன், ஆலை நடத்துவதாக முன்னேற்பாடுகள் செய்ததன் பலனாகக் கிட்டத்தட்ட இலட்ச ரூபாய் சம்பாதித்துக் கொண்டான்.

''எல்லப்பா! வீணாக ஏன் புதுப் புதுத் தொழிலிலே ஈடுபடுகிறாய்? தனியாகத் தொழில் நடத்துவது கஷ்டம். என் யோசனையின்படி நடந்துகொள்.'' என்று செல்லப்

பன் கனிவுடன் பேசுகிறான். கேட்கும்போதே எல்லப்பனுக்குத் திகில் ஏற்படுகிறது. பயத்துடன், நடுங்கும் குரலில், ''ஆபத்தான காரியம்! பாபம்கூட!!'' என்கிறான் எல்லப்பன்.

''பைத்தியம், பயப்படாதே! நான் எல்லா ஏற்பாடுகளையும் செய்து வைக்கிறேன். ஒரு ஆபத்தும் வராது.''

''பழக்கமற்ற காரியம். மனம் இடம் கொடுக்கவில்லை! கள்ளக் கடத்தல் பெருங்குற்றம்...''

''பிடிபட்டால்தானே! பீதிகொள்ளாதே! நீ செய்ய வேண்டியதெல்லாம் என்ன? நான் குறிப்பிடும் இடத்துக்குச் செல்லவேண்டும்; சரக்குக் கொண்டு வருவார்கள்; பெற்றுக் கொள்ளவேண்டும்; நான் குறிப்பிடும் இடத்தில் வைத்துவிட வேண்டும். அவ்வளவுதானே.''

''அதிகாரிகளின் கழுகுப் பார்வையிலிருந்து என்னால் தப்ப முடியாதே.''

''கழுகுகளுக்கு இறைச்சித் துண்டுகள் போடப்படும். என்ன விழிக்கிறாய்! ஏற்பாடு இருக்கிறது அதற்கெல்லாம். நிலைமை மோசமாகாது. சிறிதளவு துணிவும் புத்திகூர்மையும் வேண்டும். உனக்கு மேங்கா தெரியுமல்லவா?''

''போலீசில்கூடத் தனிப் பதக்கம் கொடுத்தார்களே, கள்ளக் கடத்தல் பற்றிய துப்புக் கண்டுபிடித்து, அதிகாரிகளிடம் கயவனைக் காட்டிக் கொடுத்துக் கடமையைச் செய்த காரிகை என்று. அவர்களைத்தானே சொல்லுகிறாய்?''

''அதே ஆசாமிதான்! அடேயப்பா! பத்திரிகைகளிலே படங்கள், பாடல்கள், பாராட்டி...''

''துணிந்து கடமையாற்றினார்களே! அறுபது கடிகாரங்களாமே, கள்ளக் கடத்தல்காரன் கொண்டு வந்தவை''

''ஆமாம்! அறுபதுதான் கொண்டுவரச் சொல்லியிருந்தேன்; பறிமுதல் செய்து விட்டவர். மூன்றாயிரம் ரூபாய் நஷ்டம்...''

''என்ன சொல்லுகிறாய்? கள்ளக் கடத்தல், உன் ஏற்பாடா?''

''விவரமாக இதுபோன்ற விஷயங்களைப் பேசக் கூடாது. என்றாலும், உனக்குத் துணிவு பிறக்க வேண்டும்; என்னிடம் நம்பிக்கை ஏற்படவேண்டும் என்பதற்காகக் கூறுகிறேன். கேள்; மேங்கா காட்டிக் கொடுத்துப் பதக்கம் பரிசாகப் பெற்றாளல்லவா, கடிகாரம் கள்ளக் கடத்தல் செய்தவனை. பெயர் சிங்காரம். அவன் என் ஆள்தான். என் ஏற்பாட்டின்படிதான் அவன் கடிகாரங்களைக் கள்ளத்தனமாகக் கொண்டுவந்தான். மேங்காவுக்கும் அது தெரியும். அவளும் என் அலுவலகப் பணியில் ஈடுபட்டவளே. இருந்துமா, சிங்காரத்தைக் காட்டிக் கொடுத்தாள் என்றுதானே கேட்கத் துணிகிறாய். அதுவும் என் ஏற்பாடுதான். திகைப்பா? விவரம், தெளிவளிக்கும். இருவரும் என்னால் அனுப்பிவைக்கப்பட்டவர்கள். என் திட்டப்படி, செயலாற்ற சிங்காரம் கடிகாரம் கடத்துவது! அதனை மேங்கா, அதிகாரிகளிடம் பிடித்துக் கொடுப்பது என்பது என் ஏற்பாடுதான். இருவரும் சிலோன் போகும்போதே, அதிகாரி ஒருவர் தொடர்கிறார் என்பது எனக்குத் தெரியும். அதற்காகவே இலங்கை ஓட்டல் ஒன்றில், சிங்காரத்திடம் சச்சரவு இடும்படி மேங்காவிடம் கூறியிருந்தேன். தேனொழுகப் பேசுகிறாளல்லவா, மேங்கா! அன்று தேளாம் அவள் பேச்சு! சிங்காரமே ஒரு கணம் திகைத்துப் போயிருக்கிறான். அதிகாரி இதனைக் கவனித்திருக்கிறார்.''

''இருவரும் பகைவர் என்று எண்ணிக்கொண்டு விட்டார்.''

''ஆமாம்! எவருக்கும் அந்த எண்ணம்தானே தோன்றும்! சிங்காரம் கைத்தடியை ஓங்குகிறான், மேங்காவைத் தாக்க. அந்தப் போக்கிரிப் பெண்ணோ காலணியைக் கழற்றினாள், அவன்மீது வீச! அதிகாரி என்ன முடிவுக்கு வருவான்? பகை என்ற முடிவுக்குத்தானே! நான் சொல்லியனுப்பியபடி, அவரவருக்கிட்ட வேலையை முடித்துக் கொண்டு கப்பலில்

கிளம்பினர். இங்கு வந்து இறங்குமுன்னம், மேங்கா, பரபரப்புடன் அதிகாரியைஅணுகி,இரகசியம் கூறுகிறாள். 'சிங்காரத்தின், கைத்தடியில் கடிகாரங்கள் மறைத்து வைக்கப்பட்டுள்ளன. கள்ளக்கடத்தல். கண்ணால் கண்டேன். என் காலணியால் அடிபட்டிருக்க வேண்டிய கயவன்! கள்ளக் கடத்தல் பேர்வழிக்கு, வாய்த்துடுக்கு எவ்வளவு தெரியுமா! நீங்கள் பார்த்திருக்க முடியாது. தற்செயலாக, ஓட்டல் சென்றேன் சாப்பிட! வெறியன் என்னிடம் நெருங்கி வந்தான், சரசமாட! சீறினேன்! தடியை ஓங்கினான்! மரியாதையைக் கெடுத்துவிடத் திட்டமிட்டேன், பயல் தப்பித்துக் கொண்டான். கொஞ்ச நேரத்துக்கு முன்புதான், கப்பல் தட்டிலே ஒரு ஒதுக்குபபுறமான இடத்தில் அவன், கைத்தடியிலே ஏதோ திருகு இருக்கும்போல் தெரிகிறது; அதைக் கழற்றிக் கடிகாரங்களை நுழைத்தான். சொல்லிவிட வேண்டும் என்ற ஒரே துடிப்பு எனக்கு. பயல், பழி தீர்த்துக் கொள்வானே என்று வேறு பயம். துணிந்து கடமையைச் செய்வோம் என்று சொல்லிவிட்டேன்,' என்று கூறினாள். மேங்காவிடம் நீ பேசினதில்லையே. மஞ்சளைக் கருப்பு என்று அவள் சொன்னால், நம்பித்தான் தீர வேண்டும்! அவ்வளவு கனிவும் குழைவும் இருக்கும். இசைபோலக் குரல்! தாளம் தவறாத பாட்டுப்போல இருக்கும்வாதங்கள்! அதிகாரி பூரித்துப்போனான்! மூன்று மாதங்களாக ஒரு பறவைகூட அவன் விரித்த வலையில் விழவில்லை. வலைவீசத் தெரியவில்லை என்று மேலதிகாரி சீறுகிறார். நல்லவேளை, ஒரு பறவை கிடைத்தது என்று எண்ணினான்; சிங்காரம் பிடிபட்டான்; சீறியதைப் பார்க்க வேண்டுமே! மேங்க வுக்கு போலீஸ் பாதுகாப்பு! போலீஸ் வண்டியிலேயே ஏற்றிக்கொண்டு அவளை விடுதிக்கு கொண்டு போய் விட்டுவிட்டு வணக்கம் கூறிவிட்டு வந்தார்கள் பெரிய அதிகாரிகள். பத்திரிகைக்காரர்கள் படம் எடுத்தார்களாம், புன்னகையுடன் இருங்கள் என்று கூறிவிட்டு. பைத்யக்காரர்கள்! மேங்கா எப்போதுமே புன்னகையுடன்தான் இருப்பாள்! போட்டோவுக்காகவா இருக்க வேண்டும்! அதிகாரிகள் சென்ற பிறகு, மேங்கா, தன் காலணியைக் கழற்றி, பேழையில் வைத்து எனக்கு அனுப்பிவைத்தாள். திகைக்கி

றாய் அல்லவா. பைத்யக்காரா! மேங்காவின் காலணி சாமான்யமானது என்றா எண்ணிக் கொண்டாய்! இலட்ச ரூபாய் பெறுமானமுள்ள வைரம் அதிலே ஒளித்து வைக்கப் பட்டிருந்தது. கள்ளக் கடத்தல்! அதற்காகவே அவள் அனுப்பி வைக்கப்பட்டாள்—என்னால், சிங்காரத்தைப் பிடித்துக் கொடுத்ததன் காரணமாக, அதிகாரியின் நல்லெண்ணத்தை-நேசத்தைப் பெறமுடிந்தது. அதனால் மேங்காவிடம் நம்பிக்கை அதிகாரிகளுக்கு. எவளைப் பிடித்து, கள்ளக் கடத்தல் வைரத்தைக் கைப்பற்றியிருக்க வேண்டுமோ அதே மேங்காவுக்கு போலீஸ் பாதுகாப்பு, உபசாரம்!! ஒரு இலட்சம் பெறுமானமுள்ள வைரம், காலணியில்! கடிகாரம் பறிமுதலானதால் மூவாயிரம் நஷ்டம்! இலாபம், ஒரு இலட்சம் எனக்கு! மேங்காவுக்குப் பாராட்டு, பதக்கம், பத்திரிகையில் படம்!! பார்த்தாயா நமது ஏற்பாடு, எவ்வளவு நேர்த்தியானதாக இருக்கிறது! இனியும் என்ன பயம் உனக்கு! இந்தா - இதோ, முகவரி! இது குறிச்சொல்! சரக்கு வரும், பெற்றுக்கொள். சமாராதனை நடக்கும் இடம், காய்கறிகள் தேவையல்லவா! பூசணையிலும் சுரைக்காயிலுமாக, வைரம் வைத்தனுப்பப் படும்! சங்கரமடத்துச் சாதுக்களுக்குச் சமாராதனை! என் தர்மம்! காய்கறியைப் பெற்றுக் கொண்டதும், சமையலறையில், என் ஆள், வைரத்தைப் பத்திரப்படுத்திவிடுவான்! பஜனை நடந்தபடி இருக்கும், நான் 'தரிசனம்' செய்ய வருவேன். என் கழுத்திலே உருத்திராட்சமாலைகள் போடுவார், பெரிய சாமியார்! கருப்பையன் என்று போலீஸ் ரிகார்டு! காவியுடையில், பெரியசாமியார் என்பது பெயர்! 'இந்த வேலையைச் செய்! மாதம் ஆயிரம் உனக்கு சம்பளம்' என்று கூறமாட்டேன். அன்பளிப்பு என்று வைத்துக் கொள்ளேன். நீயும், இந்த நாலு வருஷத்தில் எட்டு இடம் மாறிவிட்டாய், வேலை செய்வதில். ஒரு இடத்திலும் நிலைத்து இருப்பதில்லை என்ற கெட்ட பெயர் வேறு உனக்கு...''

''அதுமட்டுமல்ல, செல்லப்பா! நான் தொட்டது துலங்குவது இல்லை என்ற கெட்ட பெயரும் எனக்கு ஏற்பட்டுவிட்டது. எட்டு இடத்திலும் குட்டுப்பட்டு விட்டேன்.''

''இங்கே வெற்றிதான் உனக்கு. இந்தத் தொழிலில் வெற்றி கிடைத்தே தீரும்.''

''அப்படிச் சொல்வதற்கு இல்லையே! கெட்டுவிட்டதே இப்போதே.''

''கெட்டுவிட்டதா! எது? ஏன்? என்ன சொல்கிறாய்?''

''வைரம் கடத்திவரச் சொல்லி என்னை அனுப்ப ஏற்பாடு செய்கிறாயே, அது கெட்டுவிட்டது என்றுதான் சொல்கிறேன். எனக்கு வேலை கொடுக்கத்தான் நீ விரும்புகிறாய்! எனக்கும் இலாபகரமான ஏதாவது ஒரு தொழிலில் ஈடுபடத்தான் விருப்பம். பொன்னான வாய்ப்பு அளிக்கிறாய் என்று எண்ணிப் பூரித்தேன்...ஆனால்...''

''ஆனால் என்ன, ஆனால்...!''

''இருவருக்குமே வேறு வேலை வந்துவிட்டதே! உன்னைக் கைது செய்யும் வேலை எனக்கும், உள்ளதை உள்ளபடி ஒப்புக் கொண்டு போலீசில் சரண் அடையும் வேலை உனக்கும்! திகைக்காதே செல்லப்பா! நான் இந்த வட்டாரத்தில் பணியாற்றும், துப்பறியும் மேலதிகாரி! அதுதான் என் நிரந்தரமான வேலை! அதற்குத் துணையாக, அவ்வப்போது சில வேலைகளிலே ஈடுபடுவதுண்டு. எட்டு இடங்கள் என்றாயே, உண்மை! அவைகளிலே இருந்து அறிந்து கொள்ள வேண்டிய தகவல்கள், நிரம்ப! தகவல்கள் கிடைக்கும்வரையில்தானே அந்த வேலையில் ஈடுபடவேண்டும். பிறகு ஏன்? தொட்டது துலங்காது என்று கூறினாய் அல்லவா! உண்மை என்ன தெரியுமோ? என் நிரந்தர வேலை, துப்பறிதல்; தீயோரைக் கைப்பிடியாகப் பிடித்தல். எட்டு இடங்களிலும் இதேதான் வேலை! எழுந்திரு தகறாரு செய்யாமல், போலீஸ் வண்டி தயாராக இருக்கிறது. மேங்காவும் அதிலேதான்!!''

செல்லப்பன், அதிர்ச்சியுற்றான். அப்பாவிபோல நடித்து வந்த எல்லப்பன், எவர் வலையிலும் விழாமல் தப்பித்துக் கொண்டு வந்த தன்னைச் சிக்கவைத்துவிட்டானே என்ற அதிர்ச்சி.

இந்த வேலையையும் இழந்துவிட்டான்! வேறு ஊருக்கே போய்விட்டான்! எவன் இந்தத் 'தூங்கு மூஞ்சி'யை நம்பி வேலை கொடுப்பான்? என்னமோ பாவம், ஏழையாக இருக்கிறானே என்று இரக்கம் காட்டி வேலை கொடுத்தோம், கொஞ்சமாவது சுறுசுறுப்பு, புத்திக்கூர்மை இருந்தால்தானே! —என்று பேசிக்கொள்கின்றனர், மூட்டை முடிச்சுக்களுடன் வேற்றூர் கிளம்பும் எல்லப்பன் பற்றி தொழிலகத்தில்.

'ஏழை' எல்லப்பன் வேறு ஊரில், வேறு வேலையில் அமர்ந்து கொள்ளச் செல்கிறான்—சீவல் பாக்குக் கம்பெனிக்கு விளம்பர அலுவலாளராக!

சீவல் பாக்குக் கம்பெனி சிவராமன், பெரிய அளவில் அபின் கள்ளக்கடத்தல் செய்து வருகிறான் என்பது தகவல்! கண்டறியச் செல்கிறான் எல்லப்பன், ஏழைக் கோலத்தில்!

★

# 4
# லட்சாதிபதி

''இல்லிங்களே!''

''பாருங்க செட்டியார்.''

''உங்களுக்கா இல்லேங்கப் போகிறேன். இருந்தா கேக்கணுமா?''

''ரொம்ப அவசரம். இல்லையானா உங்களுக்குத் தொந்தரவு கொடுப்பேனா?''

''அது சரி. நீங்களும் ரொம்ப நாள் வாடிக்கை, நாணயமான கை. என் கையிலேயோ சரக்கு இல்லை. என்னை என்னதான் செய்யச் சொல்றீங்க? ஊம்..சரி. சாயந்தரம் 6 மணிக்கு மேலே வாங்க, பார்க்கலாம்.''

''கட்டாயம் ஏற்பாடு பண்ண வேணும், கைவிரிச்சுடக் கூடாது. உங்களைத்தான் நம்பியிருக்கிறேன்.''

''சரி. வாங்க! கையோடு ரூபா கொண்டுவாங்க...வீசை'' என்று சொல்லி மூன்று விரல்களைப் பிரித்துக் காட்டினார் செட்டியார்.

அந்தத் தெருமுனையில் செட்டியார் கடை வைக்கும் போது, ''என்ன வியாபாரம் இங்கே நடந்துவிடும் என்று செட்டி கடை வைக்கிறான்?'' என்றுதான் சிலர் எண்ணினர். அப்போது அவர் செட்டியார் அல்ல...செட்டிதான்! செட்டியாரும் மிகுந்த நம்பிக்கையோடு கடையைத் துவக்கவில்லை.ஏதோ திண்ணையிலே குந்தியிருப்பதைக் கடையிலே குந்தியிருக்கலாமே என்றுதான் கடையைத் தொடங்கினார்.

ஆனால் நாளடைவில் அவருக்கே திகைப்பு தரும் வகையில் வியாபாரம் தழைத்தது. அவ்வப்போது சிலசில சரக்குகளுக்கு ஏற்பட்ட கிராக்கி அவருக்குப் பெரிய உதவியாக வந்து சேர்ந்தது. ஒரு ரூபாய்க்கு வாங்கிய சாமான், நாலு ரூபாய்க்குக்கூட விற்றது. சாமான் கிடைக்காதபோது அளவும் நிறையும்கூட செட்டியார் விருப்பப்படிதான். வியாபாரம் தழைத்ததைப் போலவே அவருடைய உடலும் தழைத்தது—பருத்தது என்பது பொருத்தமான சொல். செட்டி என்று சொன்னவர்கள் செட்டியார் என்று சொல்லத் தலைப்பட்டார்கள். செட்டியாரும் அழகுக்காக நெற்றி நடுவில் மட்டும் மெல்லிய சிவப்புக்கோடாக இட்டுக்கொண்டு இருந்த ஒற்றை நாமத்தை இருபக்கமும் வெள்ளையைத் தாராளமாகக் குழைத்துத் தடவி தம்முடைய பக்தியை வெளிப்படுத்திக் கொண்டார். கடையில் அலங்காரமாக இருக்கட்டும் என்றுதான் முனையிலே முடிச்சோடு கூடிய ஒரு கயிற்றைத் தொங்கவிட்டிருந்தார். இப்போதெல்லாம் அதைப் பலமாகப் பிடித்துக் கொள்ளாவிட்டால் செட்டியாரால் எழுந்திருக்க முடிவது இல்லை.

இத்தனை மாற்றமும் செட்டியாரின் திறமையால் வந்தவையே. இருப்பதை இல்லை என்று சொல்லியும், இல்லாததை எங்காவது வாங்கிக் கொடுத்தும், இப்படியாகச் செய்த வியாபாரத்தில் விளைந்த மாறுதல் இவ்வளவும். அவருக்கு உதவியாக அவ்வப்பொழுது சில பொருள்கள் 'கட்டுப்பாடு' ஆகும். முன் நாள் செட்டியார் கடையில் அது எத்தனை மூட்டை இருந்தாலும் மறுநாள் இல்லாது போகும். அப்புறம் கொஞ்சம் கொஞ்சமாக வெளிவரும், தக்க மரியாதை உடன்தான்!

கொஞ்ச நாட்களாகச் சர்க்கரை அப்படித்தான், விசேஷமான மரியாதை-கௌரவங்களுடன் மாலை 6 மணிக்கு மேல் வெளிவந்துகொண்டிருக்கிறது. மிகுந்த சிரமத்தின் பேரில், மிகவும் வேண்டியவர்கள்தான் அதையும் சாதிக்க முடிந்தது. இத்தனைக்கும் அந்த ஊரில் சர்க்கரைக்குக் 'கார்டு'. சர்க்கரை போதாதவர்கள் என்ன செய்வார்கள்? செட்டியார் இருக்கப் பயம் ஏன்?

மந்தத்தில் தொடங்கிய வியாபாரம் படிப்படியாக உயர்ந்து, மதிப்பான நிலைக்கு வந்துவிட்டது. 'செட்டியாரிடம் ரொக்கம் ரொம்ப இருக்கும்'' என்று பல பேர் பேசத் தலைப்பட்டனர். சிலர் 'ஒரு லட்சம்' என்றுகூட எண்ணி வைத்தவர்களைப்போல் சொன்னார்கள். ஆனால் உண்மை யாருக்கும் தெரியாது. ஏன் என்றால் செட்டியார் தன் கையிருப்பை பாங்கியில் போடுவது இல்லை. கடையை விட்டுவிட்டுப் பாங்கிக்குப் போக வேண்டும், அங்கே கும்பலோடு நின்று பணம் போட வேண்டும், எடுக்க வேண்டும். போடும்போதும் எடுக்கும்போதும் நாலு பேர் பார்ப்பார்கள். ஒருவர் கண் மாதிரி ஒருவர் கண் இருக்காது. ஏனிந்தத் தொல்லை என்று எண்ணினாரோ என்னவோ! நாளதுவரை செட்டியார் பாங்கிக்குப் போனது இல்லை. ஆகவே அவருடைய இருப்பு விஷயம் அவர் ஒருவர்க்கே தெரியும். மனைவிக்குத் தெரியுமோ என்னமோ, நமக்குத் தெரியாது. யாராவது கொஞ்சம் நெருங்கிப் பழகுகின்றவர்கள், ''உங்களுக்கு என்ன செட்டியாரே! நீங்கள் லட்சாதிபதி'' என்றால், காதுவரை விரியும் படி ஒரு புன்னகை செய்துவிட்டு, ''உங்களுக்கென்ன சொல்லாமல்! எனக்கல்லவா உண்மைத் தெரியும்'', என்று சொல்வாரே ஒழிய வேறு எதுவும் பேசுவது இல்லை.

'சீனாக்காரன் வருகிறானாமே! அணுகுண்டு போடுவானோ'-இந்த மாதிரிப் பேச்சுக்களுக்குக்கூட செட்டியார் கலங்கமாட்டார். ஓய்வாக இருக்கும்போது, காலையில் பாங்கிப் பெட்டி இடுக்கில் செருகிய தினசரியை எடுத்துக் கண்ணோட்டம் விடும்போது எந்தச் செய்தியும் அவரை ஒன்றும் செய்துவிட முடியாது. 'லாரி ஏறி குழந்தை மரணம்' என்று படித்தால்கூட 'பாவம்' என்று சொல்ல மாட்டார். ''தலையெழுத்து யாரை விடும்?'' என்றுதான் சொல்வார். அப்படிப்பட்டவர் ஒரு நாள் பத்திரிகையைப் படித்துக் கொண்டு வரும்போது ''ஐயோ—இதென்ன அநியாயம்'' என்று அலறினார். எதிரே நின்றிருந்த வீட்டு வேலைக்காரி அலமேலுகூடப் பதறிப்போய், 'என்னங்க, என்ன சமாசாரம்?'' என்று கேட்டாள். நிமிர்ந்து பார்த்த செட்டியார்,

'என்ன சங்கதி? எங்கே வந்தே? போ! அப்பாலே வா!'' என்று விரட்டினார். அலுமேலுவுக்கே அது அதிசயமாக இருந்தது. வீட்டிலே எஜமானி அம்மா, ஏதாவது சங்கதி இருந்தால், வீட்டுக்குத் தேவையான சாமான்கள் முதலியவற்றைப் பற்றி, அலமேலுவிடம்தான் சொல்லியனுப்புவார். கடையிலே கூட்டம் இல்லாதபோது அவள் வந்து போவாள். அவள் வருவதைச் செட்டியார் கொஞ்சம் ஆவலோடு எதிர் பார்த்தார் என்றுகூட சொல்லலாம். அவரும் மனிதர்தானே? அதிலும் அலுமேலுவுக்குக் கொஞ்சம் அலங்காரத்திலே விருப்பம். அவளோடு பேசுவது வியாபாரத்திற்கும் கெடுதல் இல்லாத நேரம். பேச்சுக்குக் கூடவா பஞ்சம்! ஆனால் அந்த அலுமேலுவையே செட்டியார்''அப்புறம் வா—போ, போ'' என்று விரட்டி விட்டாரே! ஏன்?

''ஏனோ?'' என்று எண்ணியபடி அலுமேலு போய் விட்டாள். செட்டியாருடைய பதறல் போகவில்லை. திரு திரு என்று விழித்தார். கீழும் மேலும் பார்த்தார். பித்துப் பிடித்தவர்போல் ஆனார். பத்திரிகையில் அப்படி என்ன தான் வந்திருந்தது?

கள்ளப் பணம் சிக்கியது.

''இவ்வூரில் பல வியாபாரிகளின் வீட்டை அதிகாரிகள் சோதனையிட்டபோது லட்சக்கணக்கான கள்ளப்பணம் கண்டு பிடிக்கப்பட்டது. சிலருடைய வீடுகளில் குளியல் அறையிலும், கழிவிடங்களிலும், படுக்கையிலும், பூஜை அறையிலும், கணக்குகளும், ரூபாயும் கண்டு பிடிக்கப்பட்டு, கைப்பற்றப்பட்டன. மேலும் பல ஊர்களில் சோதனை நடந்தப்படும் என்று தெரிகிறது.''

என்ற செய்திதான் பெரிதாக வந்திருந்தது. இதைப் படித்துத்தான் செட்டியார் கலங்கிவிட்டார். அவர் பணத்தை கணக்கே எழுதாத-கணக்கில்லாமல் எங்கே வைத்திருக்கிறார் என்பது அவருக்குத்தான் தெரியும். இதுவரை அதைக் கண்டவர்கள் யாருமில்லை. ஆனால் இதோ அதிகாரிகள்! குளியல் அறை, கழிவிடம், படுக்கை எல்லாவற்றையுமல்லவா குடை

கிறார்கள். ஒரு வேளை தன் செல்வம்—காலமெல்லாம் கஷ்டப்பட்டு காலணா, காலணாவாக (காலணா காலத்திலிருந்து செட்டியாரிடம் இருப்பு வளர்கிறது) சேர்த்த பணத்தைக் கண்டுபிடித்து விட்டார்களானால்? ஏது இவ்வளவு தொகை? கணக்கு எங்கே? எவ்வளவு விற்பனை வரி கட்டுகிறீர்? வருமான வரி கட்டுவது உண்டா? இன்னும் என்னென்ன கேட்பார்களோ? கேட்டால் கேட்டு விட்டுப் போகிறார்கள் என்று விட்டுவிட முடியாது. இந்தக் கேள்விகளுக்குச் செட்டியார் என்ன பதில் சொல்ல முடியும்? விற்பனை வரி, வருமான வரி என்பது எல்லாம் அவரைப் பொருத்தமட்டில் ஒரு பொருளும் இல்லாத சொற்களாக இருந்து வருகின்றனவே! என்ன சொல்வாா? சொல்வது கிடக்கட்டும். கண்டெடுக்கும் பணத்தை என்ன செய்கிறார்கள் என்பதை 'பேப்பர்காரன்' போடவில்லையே. ஒரு வேளை, அதைப் பறிமுதல் செய்து விடுவார்களோ?

இன்ன திசைதான் என்று இல்லை; பலவாறு சென்றது செட்டியாரின் சிந்தனை. அன்று வியாபாரத்தில்கூட அவரால் அதிகக் கவனம் செலுத்தவில்லை; செலுத்த முடியவில்லை. வீசை, மூன்று ரூபாய்க்குச் சர்க்கரை கேட்டவர்களுக்குக்கூட 'இல்லை' என்றே சொல்லிவிட்டார். வீடு பற்றி எரிகிறது; இப்போதுபோய் பீடிக்கு நெருப்பு கேட்கிறார்களே என்றெரிச்சல்செட்டியாருக்கு.

கடையை மூடிக் கொண்டு வீட்டுக்குப் போன பிறகும் செட்டியாரின் மனம் அமைதியடையவில்லை. சரியாகச் சாப்பிடவில்லை. என்ன காரணம் என்று மனைவியும் கேட்கவில்லை. கேட்டால்தான் செட்டியார் சொல்வாரா என்ன? அதோடு வேலைக்காரியிடம் சொல்லி அனுப்பிய சாமான்கள் வரவில்லையே என்ற ஏக்கம் வேறு அந்த அம்மாளுக்கு. இரவு முழுதும் செட்டியார் தூங்கவில்லை. எப்படித் தூங்க முடியும்? கணக்கு, பணம், சோதனை, கேள்வி, விசாரணை- இதுவே அவருக்கு விசாரமாக இருந்தபோது எங்கிருந்து தூக்கம் வரும்?

மறுநாள் செட்டியாரின் கடையில் உட்கார்ந்திருந்த போது நாலைந்து ஜீப்புகள் அவசரம் அவசரமாகப் பறந்து கொண்டிருந்ததைக் கண்டார். புதிய புதிய அதிகாரிகள் அந்த வண்டிகளிலே இருந்தனர். அவர்கள் யார் என்பதை யாவது தெரிந்து கொள்ளலாம் என்றால் யாரைக் கேட்பது? கேட்டால் ஒரு வேளை வீணாகச் சந்தேகம் வருமோ, என் னமோ? சும்மா இருக்கும் சங்கை ஏன் ஊதிக் கெடுக்கவேண்டு மென்ற எண்ணத்தில் யாரையும் கேட்கவில்லை. தீர்மா னமே செய்துவிட்டார், அவர்கள் சோதனை செய்ய வந்த அதிகாரிகள்தான் என்று. சுரத்தில்லாமல் கடையில் இயந்தி ரம் மாதிரி உட்கார்ந்து அளந்து நிறுத்துக் கொண்டிருந் தார்.

ஆனால் அவருடைய மனமோ தீவிரமான எண்ணங் களில் ஈடுபட்டுக் கொண்டிருந்தது. எப்படியாவது தம் வசம் இருக்கும் பெருந்தொகையை அதிகாரிகள் கண்ணில் படாமல் மறைத்துவிட வேண்டும் என்று தீர்மானித்து விட்டார். எங்கே ஒளிப்பது? அதுதான் தெரியவில்லை. கழிவிடம், மறை விடம், படுக்கையறை, பூஜை அறை எதையும் விடுவது இல்லையாமே? எங்கேதான் ஒளித்து வைப்பது? சே! என்ன சங்கடம் இது!

தன்னை ஒரு புள்ளியாக மதித்து வந்து சோதனை போடுவார்களா, சின்ன கடைதானே என்று விட்டுவிடுவார் கள் என்று ஒரு ஆசை.

ஆனால், மறுகணமே அது மறைந்துவிடும். எப்படிச் சொல்லமுடியும்? தன்மீது பலருக்குப் பொறாமை என்பதைச் செட்டியார் அறிவார். எவன் எந்த அதிகாரிக்கு மொட்டைக் கடிதம் எழுதுவானோ? மொட்டைக் கடிதம் எழுதுவது என்ன, நேரே போய்ச் சொல்லிவிட்டு வந்தால்தான் அவர் என்ன செய்ய முடியும்?

எப்படியும் கைவசம் உள்ள தொகையை, இந்த இக்கட்டி லிருந்து காப்பாற்றிவிட வேண்டும். இந்தக் கண்டம் தாண்டி னால் பிறகு பார்த்துக் கொள்ளலாம். நிலமோ, வீடோ

வாங்கிப் போட்டுவிட வேண்டியதுதான். என்ன விலை ஆனாலும் விடக்கூடாது என்று தீர்மானித்துவிட்டார்.

அதெல்லாம் சரி! ஆனால் இப்போதைக்கு எங்கே அதை—சனியன் என்றுகூட வாய் தவறிச் சொல்லிவிட்டார் —ஒளிப்பது?

''சாமி'' அலுமேலுதான் குரல் கொடுத்தாள்; நிமிர்ந்து பார்த்தார். நேற்றைய தினம்போல் ''போ! போ!'' என்று விரட்டி விடவில்லை. ''என்ன?'' என்று கேட்டார். கேட்கும்போது அலுமேலுவை நோட்டம் விட்டார். அவளுடைய அழகு, கால் என்றால் அலங்காரம் முக்கால். சாதாரண நாட்களாக இருந்தால், செட்டியார் பேச்சிலே வம்புக்கு இழுப்பார். ''என்ன அலுமேலு! இந்தப் புடவைக்கு என்ன பெயர்? இந்த ஜாக்கட்தான் இப்ப பேஷனா?'' என்றுகூட கேட்பார். ''போங்க, சாமி நீங்க ஒண்ணு?'' என்று அவள் சிணுங்குவாள். அலுமேலுக்குத் திருமணம் ஆகி நான்கு குழந்தைகள் இருக்கின்றன. ஆனால் அவளைப் பார்ப்பவர்கள் அப்படி நினைக்க மாட்டார்கள்.

செட்டியார் இப்போது அவளை 'ரசிக்கும்' நிலையில் இல்லை; அதனால் ''என்ன?'' என்று மட்டும் கேட்டு வைத்தார்.

அலுமேலுவுக்கு எங்கிருந்தோ மிகுந்த வெட்கம் வந்துவிட்டது. ஒரு நெளி நெளிந்தாள். ''சும்மா சொல்லு'' என்றார் செட்டியார்.

''ஒன்றும் இல்லைங்க. ஒரு புடவை எடுக்க வேணும். பத்து ரூபா கேக்கலாம்னு...'' அலமேலு இழுத்தாள்.

செட்டியார் வரவு செலவில் இறுக்கம்தான் என்றாலும், அலுமேலுவுக்கு ஐந்து பத்து அவ்வப்போது தருவார். அதை அலுமேலுவும் சரி, செட்டியாரும் சரி எஜமானியம்மாவிடம் சொல்வது இல்லை. ஆனால் ஒன்று இரண்டாகப் பாதியளவாவது திரும்ப வாங்குவார். அந்தப் பழக்கத்தில்தான் அலுமேலு பத்து ரூபாய் கேட்டாள்.

செட்டியார் சிந்தனையில் இருந்ததினால் உடனே பதில் சொல்லவில்லை. கொடுக்கத் தயங்குகிறாரோ என்று எண்ணிய அலுமேலு பணத்தின் அவசியத் தேவையை மீண்டும் சொன்னாள்.

''வேறே ஒண்ணும் இல்லீங்க. நாளைக்கி நான் ஊருக்குப் போறேங்க. அம்மாவுக்கு ஒரு புடவை எடுத்துக் கிட்டுப் போகலாம்னு நெனைச்சிதாங்க.''

செட்டியாருடைய மனதில், எண்ணத்தில் மின்னல் பாய்ந்தது போலிருந்தது. ஏதோ தீர்மானத்திற்கு வந்தவர் போல் சிலிர்த்து உட்கார்ந்தார்.

''என்ன சொன்னே அலுமேலு? நாளைக்கு ஊருக்குப் போறயா? எந்த ஊர்?''

அலமேலுவுக்குப் புரியவில்லை. செட்டியார் ஏன் அவ்வளவு பரபரப்போடு கேட்கிறாரென்று. ஆனாலும் ரூபா வேண்டுமே! பதில் சொல்லித்தானே ஆகவேண்டும்.

''ஆமா சாமி! நாளக்கிப் போறேன். மண்ணூர்தானுங்களே, எங்க ஊர்—அங்கதாங்க போறேன்.''

''அங்கே யார் இருக்கிறது?''

''அம்மா, அப்பா இருக்கிறாங்க. நேத்தே கொளந்தைகளை இட்டுகினு அவரு போயிருக்கிறாரு. நான் நாளைக்குப் போறேங்க...''

''சரி, ரொம்ப சந்தோஷம். ரூபா தர்ரேன். அதோடு ஒரு சின்ன டிரங்கு பெட்டியும் தர்ரேன்; அதையும் எடுத்துக் கிட்டுப் போ. உடனே திரும்பிடாதே. பத்து நாள் அங்கேயே இரு. பிறகு வா. டிரங்கு பெட்டி பத்திரம். பூட்டிதான் வச்சிருக்கேன். திறக்கக் கூடாது. டிரங்கு பெட்டி உள்ளே சாமி படம் வைச்சிருக்கேன். ஒரு பத்து நாள் வெளியூர்லே வைக்கறேன்னு பிரார்த்தனை. அதான் உன்னிடம் தருகிறேன். வேறே ஒண்ணுமில்லை. பெட்டியை அனாவசியமாகத் தொடக்கூடாது. பூட்டிலே கையே படக் கூடாது. என்ன, வெச்சிருந்து கொண்டு வருவியா?'' என்றார் செட்டியார்.

அலமேலுவுக்குச் செட்டியார் என்ன சொல்லுகிறார் என்பதே புரியவில்லை. கேலி செய்கிறாரோ என்றுகூட நினைத்தாள். செட்டியார் மெல்ல மெல்ல அவளிடம் சங் கதியைக் கூறும் வகையில் விளக்கிப் பத்து ரூபாயையும், பெட்டியையும் கொடுத்தனுப்பினார்.

பெட்டியோடு அலுமேலு சென்றதற்குப் பிறகு செட்டி யாருக்குப் புதிய தெம்பு பிறந்தது. அப்பாடா! ஒரு வழியாக ஒரு பத்து நாளைக்கு அதை இப்போது சனியன் என்று சொல்லவில்லை—அதிகாரிகள்—பாவிகள்—கண்ணில் படா மல் ஒளித்தாயிற்று—இனி, பயமில்லை. இந்த அதிகாரிகள் ஆட்டம் ஓய்ந்ததும், அப்பாவி அலமேலு பெட்டியைக் கொண்டு வந்து பயபக்தியோடு ஒப்படைக்கப் போகிறாள். அப்புறம் என்ன கவலை!

செட்டியார் கெடுவுப்படி பத்து நாள் கழித்து அலமேலு வின் வரவை ஆவலோடு எதிர்பார்த்தார். பத்து நாளுக்கு மேல் பத்து நாள் ஆன பிறகும் கூட அவள் வர வில்லை. அந்தப் பத்து நாளில் இருபது முறை அலமேலுவின் குடிசைக்குப் போய் வந்து விட்டார். காலையும் மாலையும் அவர் அங்கே தவறாமல் வந்து அலமேலுவைப் பற்றி விசா ரித்ததை வித்தியாசமாகக்கூட நினைத்துக் கொண்டார்கள். ஒருத்தர் செட்டியாரின் அந்தரங்கமாகக்கூட அதைச் சொல் லியும் காட்டினார். ''என்னசெட்டியார்வாள்!அவள் அப்படி! அபூர்வமான வேலைக்காரி. அவள் போனால் போகட்டுமே, வேறே சின்னவளாகக்கூட யாரையாவது பார்த்து ஏற் பாடு செய்து கொண்டால் போயிற்றென்றார். அன்றிலிருந்து அந்தக் குடிசைப் பக்கம் போவதையும் செட்டியார் நிறுத்திக் கொண்டார்.

சரி, மண்ணூருக்குப் போய்விட்டு வருவது என்று தீர் மானித்து ஒரு நாள் அந்த ஊருக்குச் சென்றார். அலமேலு வீடு எது என்று கேட்டு விசாரித்துக் கொண்டு அவள் வீட் டிற்குப் போனார். வீடு பூட்டிக் கிடந்தது. எங்கே போயிருக்கி றார்கள் என்று விசாரித்தார் ''எங்கு போனார்களோ

யாருக்குத் தெரியும். இந்த வீட்டை விற்று விட்டு அவர்கள் போய் பதினைந்து நாளாயிற்று!'' என்ற தகவல்தான் கிடைத்தது.

திகைத்தார் செட்டியார். எந்த இடம் சென்று அவர் அலுமேலுவைத் தேடுவார்?

இப்போது எல்லாம் செட்டியார் கடையிலே சர்க்கரை பகலில்தான் விற்கப்படுகிறது. யாராவது செட்டியாரைப் பார்த்து ''உமக்கென்ன லட்சாதிபதி'' என்றால் செட்டியார் புன்முறுவல் செய்வது இல்லை. ''உனக்கென்னய்யா வீண் பேச்செல்லாம்? எது வேண்டுமோ கேள். தருகிறேன். வாங்கிக் கொள். போய் வா'' என்று பொரிந்து தள்ளுகின்றார்.

செட்டியார் மாறிவிட்டார் என்று ஊரிலே பேசிக் கொண்டார்களே தவிர அதற்கான காரணம் யாருக்கும் தெரியாது...

★

## செவ்வாழை

(சிறுகதைகள்)

**பேரறிஞர் டாக்டர் சி.என். அண்ணாதுரை**

மனிதன் மறைவான். ஆனால் மனிதருள் மாணிக்கமாகத் திகழும் மேதைகள் படைத்த இலக்கியம் என்றுமே மறைவதில்லை.

அது சாகாவரம் பெற்றது. வாழையடி வாழையென வரும் திருக்கூட்டம் செய்யும் தவறைத் திருத்தும் பணியைத் தொடர்ந்து செய்துகொண்டிருக்கும் சக்தி அதற்குண்டு.

அமரர் அண்ணாவின் பொற்காலக் கதை இலக்கியமும் அத்தகையதே.

'செவ்வாழை' கதையோடு கைகோர்த்து வரும் ஒவ்வொரு கதையும் நாட்டுக்குத் திறவுகோல் போன்றது.

எனவே—

சமூகத்தில் நெறியோடு வாழக் கற்றுக் கொடுக்கும் அண்ணாவின் சிறுகதையாம் நறுங்கனியை நீங்களும் சுவையுங்கள்; மற்றவர்களையும் சுவைக்கச் செய்யுங்கள்.

**விலை ரூ. 5.90**

**பூம்புகார் பிரசுரம் பிரஸ்**

**63, பிராட்வே, சென்னை-1.**

MARAIMALAI ADIGAL LIBRARY



# பேரறிஞர் அண்ணா

''அண்ணாவின் பலதிற ஆற்றல் எவரையும் திகைகக வைக்கக் கூடியது. பொதுமேடை வானில முனபு ஒளிர்ந்த மின்மினிகள், விண்மீன்கள், பிறைமதியங்கள யாவும் ஒதுங்க, பேரொளி வீசிப புதுப் பொழுது மலரச செய்யும் ''வெங்கதிரவன்'' அண்ணா அவர்களே எனபதை அறியாதார் இலர். எழுத்துத் துறையிலும் சுவைகுன்றாது, எப்பொருள் பற்றியும் அறிவுப பயன் நிறைவுறும் வண்ணம், எத்தனைப் பக்கம் வேண்டுமானா லும் எழுதும் திறன் அவா தனியுரிமையே ஆகும். எழுந்துககு ஒரு நடை, மேடைப் பேச்சுக்கு ஒரு நடை, உரையாடலுககு ஒரு நடை என்பது அவரிடம் காண முடியாது. இருநதால இருப்பார்; எழுந்தால் எதிலும் ஓரே காளமேகநதான்...''

பூம்புகார் பிரசுரம் பிரஸ்
63, பிராட்வே, சென்னை-600 001.